இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 192 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 23 செவ்வாய்க்கிழமை 06.06.2017

## மகிந்த கூறும் ஜப்பான் கதை

கொழும்பு, ஜூன் 6
ஆட்சியில் இருக்கும் கூட்டு அரசினால் ஜப்பானில் உள்ள இலங்கையர்கள் விரக்தி அடைந்துள்ளனர் என்றும், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர் எனவும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். >> 25

விசாரணைக் குழு பரிந்துரைத்தபடி

# அமைச்சர்கள் இருவரும் உடன் பதவி விலகார்

### முதலமைச்சருக்கு நெருக்கடி வலுக்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 6
வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன் மற்றும் த.குருகுலராசா ஆகிய இருவரும் பதவி விலகவேண்டும் என்று, ஊழல் மோசடி தொடர்பில் விசாரிக்க முதலமைச்சர் நியமித்த விசாரணைக் குழு பரிந்துரைத்தபோதும் அந்த இரு அமைச்சர்களும் உடனடியாகப் பதவி விலகும் எண்ணத்தில் இல்லை என்று வடமாகாண சபை அரசியல் வட்டாரங்கள் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தன. இதனால் முதலமைச்சருக்கு நெருக்கடி அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீதும் கல்வி அமைச்சர் த.குருகுலராசா மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்த முதலமைச்சரின் குழு, அவர்கள் இருவர் மீதான குற்றச்சாட்டுக்கள் பலவற்றில் அவர்களைக் குற்றவாளிகளாகக் கண்டுள்ளது. அதன் அடிப்படையில் அவர்கள் பதவி விலகவேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது.
அந்த அறிக்கை கடந்த சனிக்கிழமை முதலமைச்சரால் அமைச்சர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அறிக்கையில் இடம்பெற்றிருந்த முக்கிய விடயங்கள் சில >> 23

## அமைச்சர்கள் ஐங்கரநேசன், குருகுலராசா இருவரும் உடனே பதவி விலகவேண்டும்

### இல்லையேல் முதல்வர் பதவி நீக்கவேண்டும் என ரெலோ வலியுறுத்து

யாழ்.ஜூன் 6
வடக்கு மாகாண சபை அமைச்சர்களான பொ.ஐங்கர நேசன் மற்றும் த.குருகுலராசா இருவரும் தமது பதவிகளிலிருந்து விலகவேண்டும். அவர்கள் அவ் வாறு செய்யத் தவறினால் முதல மைச்சர் அவர்களைப் பதவி நீக்கம் செய்யவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.
கூட்டமைப் பின் பங்காளிக் கட்சிகளுள்ஒன்றான ரெலோ. கட்சியின் செயலா ளர் ந. சிறிகாந்தா இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
வடக்கு மாகாண சபையின் இரண்டு அமைச்சர்கள் மீது தொடுக்கப்பட்ட ஊழல் மற்றும் அதிகார முறைகேடு குற்றச்சாட் டுக்கள் >> 24

## பதவி விலக தவராசாவும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 6
ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கும் மக்களுக்குப் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்கும் வடக்கு மாகாண சபை அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன் மற்றும் த.குருகுலராசா இருவரும் பதவி விலக >> 25

## அதிகார வரம்பை மீறுவது அரசியல்வாதிகளுக்கு தவிர்க்க முடியாதது

### இப்படி விளக்கமளிக்கிறார் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஜூன் 6
இயற்கை வளங்களைப் பேணுவதில் அதிகார வரம்பை மீறுவது அல்லது அதிகாரங்கள் இல்லாத விடயங்களில் தலையிடுவது சட்டத்தின் பார்வையில் குற்றமாக இருந்தாலும் அரசியல்வாதிகளாக >> 25



## திருடி வெளியிட்டது உதயன் ஐங்கரநேசன் கொந்தளிப்பு

யாழ்., ஜூன் 6
உதயன் பத்திரிகை திருடிச் செய்தி வெளியிட்டது தொடர்பில் நான் பதில் கூற மாட்டேன் என்று நேற்றுக் கொந்தளித்தார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.
வடக்கு மாகாண அமைச்சர்களான பொ.ஐங்கர நேசன் >> 25

முச்சந்தி முரளி



செய்யிறதையும் செய்துபோட்டு அதுக்கு ஒரு நியாயம் பாருங்கோ...

## இன்றைய அமர்வில் அறிக்கை வராது

யாழ்ப்பாணம், ஜூன் 6
பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை இன்றைய சபை அமர்வில் முன் வைக்கப் படாது என்று தெரிகின்றது. வடக்கு >> 24

## சக கைதிகள் தாக்கியே மகேந்திரன் இறந்தார்

### வவுனியா சிறையிலிருக்கும் மூவர் வாக்குமூலம்

கிளிநொச்சி, ஜூன் 6
வவுனியா மாவட்ட சிறைச் சாலையில் சக கைதிகள் நடத்திய தாக்குதலிலேயே தருமபுரத்தைச் சேர்ந்த கைதி உயிரிழந்தார் என கைதிகள் மூவர் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் முன்னிலையில் சாட்சியம் அளித்தனர்.
வவுனியா மாவட்ட சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தருமபுரம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த எஸ்.மகேந்திரன் (32) என்பவர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கொன்றில், நீதி மன்றத்தின் உத்தரவுக்கமைய கடந்த மாதம் புதன்கிழமை (31.05.17) முதல் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். >> 25

## நிதி அமைச்சு ரவியிடமிருந்து பறிக்கப்படக் காரணம் என்ன?

### அவரே சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 6
தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றுக்குள் நுழைந்து அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்ட ஒருவரே தன்னை நிதி அமைச்சிலிருந்து விலக்குவதற்குரிய சதித் திட்டத்தைத் தீட்டியிருந்தார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் முன்னாள் நிதி அமைச்சரும் தற்போதைய அயலுறவுத்துறை அமைச்சருமான ரவி கருணாநாயக்க. >> 25

மூதூர் சிறுமிகள் வன்புணர்வு;

## அடையாள அணி வகுப்பில் சிக்கவில்லை குற்றவாளிகள்

திருமலை, ஜூன் 6
திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மல்லிகைத்தீவு பெரியவெளிப் பகுதியில் சிறுமிகள் மூவர் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ஐந்து பேரும் நேற்று மூதூர் நீதிவான் நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். >> 25

## மூதூர் சிறுமிகளுக்கு நீதி வழங்கவேண்டும்

### கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்



செங்கலடி, ஜூன் 6
திருகோணமலை மூதூரில் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்ட சிறுமிகளுக்கு நீதி கோரி நேற்றுக் கிழக்குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். >> 25

## வடக்கில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
திருகோணமலையில் பாலியல் வதைக்கு உள்ளாக்கப்பட்ட மூன்று சிறுமிகளுக்காகவும், வடக்கு மாகாணத்தில் முதலாவது கவனவீர்ப்புப் போராட்டம் இன்று நடைபெறவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி சமூகத்தினரே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. >> 24

## ஐ.நா. தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம்

### இன்று நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 6
இலங்கைக்கு 2 ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று செவ்வாய்க்கிழமை விவாதம் நடை >> 25

## 3 சிறுவர்கள் மீது பாலியல் வதை

*சந்தேகத்தில் நான்கு பேர் ஊர்காவற்றுறையில் கைது மேலும் 3 பேர் தேடப்படுகின்றனர்*

யாழ்ப்பாணம், ஜூன் 6
ஊர்காவற்றுறைப் பகுதியில் 3 சிறுவர்களை நீண்ட காலமாகப்பாலியல் துஷ்பிரயோகம் >> 25

வாக்காளராகப் பதிய

## லஞ்சம் பெற்ற ஜி.எஸ். காலியில் மாட்டினார்

யாழ்ப்பாணம், ஜூன் 6
வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெண்ணொருவரின் பெயரைப் பதிவதற்காக அவரிடமிருந்து 35 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப்பெற்றார் என்ற குற்றச்சாட்டில் காலி மாவட்டத்தின் கம்படுகொட கிராம அலுவலர்லஞ்சஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று >> 25

## இடரால் பாதிப்புற்ற அரச பணியாளருக்கு ஆறு மாதச் சம்பளம்

### முற்பணமாக வழங்குமாறு மைத்திரியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 6
வெள்ளப் பெருக்காலும் மண் சரிவாலும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள அரச ஊழியர்கள் தங்களது ஆறு மாதச் சம்பளப் பணம் முற்பணமாக வழங்கப்பட வேண்டுமென அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரச சேவையாளர் சம்மேளனம் அரசதலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதுடன், பாதிக்கப்பட்ட பகுதிகள் இயல்பு நிலைக்குத் திரும்பும் வரை அந்தப் பகுதியிலுள்ள அரச ஊழியர்களுக்குச் சம்பளத்துடனான விடுமுறை வழங்கப்படவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் பகுதிகளில் சிறைப்பட்டுக் கிடக்கும்போது நிவாரண உதவிகள், அதிகாரிகள் பயணிக்கும் பாதைகளின் இரு மருங்கிலும் காத்திருப்பவர்களுக்கே வழங்கப்பட்டு வருவதாகவும் இது மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் அரச சேவையாளர் சம்மேளனத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்திருக்கிறார். (து-5)

## அமெ.யிலிருந்து முற்கூட்டியே நாடு திரும்பும் ரணில்

கொழும்பு, ஜூன் 6
மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதற்காக, அமெரிக்கா சென்றுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, முன்கூட்டியே நாடு திரும்புவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹா, தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் நிலை, தற்போது முன்னேற்றமடைந்துள்ளதாகவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அவர் நாட்டுக்குத் திரும்புவார் என்றும், அவர் கூறினார். (து-5)

# இடரிலிருந்து மீண்டெழ பன்னாட்டு நிபுணர்களின் ஆலோசனை நாடப்படும்

### அரச தலைவர் மைத்திரி அறிவிப்பு

மாத்தறை, ஜூன் 6
இயற்கை இடரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிலிருந்து மீள்வதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைக்கமைய தயாரிக்கப்படும் திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



அடுத்த அமைச்சரவைக் கூட்டத்திலும், வார இறுதி தேசிய இடர் முகாமைத்துவப் பேரவைக் கூட்டத்திலும் இதுபற்றிக் கலந்துரையாடப்படுமெனவும் அவர் கூறினார் என்று அரச தலைவரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாத்தறை மாவட்டச் செயலகத்தில் இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண மளித்தல் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடலில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பங்கேற்றார்.

இந்தக் கலந்துரையாடலில் வெள்ளம் மற்றும் மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மாத்தறை மாவட்ட மக்களுக்கு நிவாரணமளிக்கும் திட்டம் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. அழிவுற்ற வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணிகளை இனங்கண்டு தேவையான காணிகளைச் சுவீகரிப்பதற்கான அறிக்கையை விரைவாக வழங்குமாறும், ஒரே திட்டத்துக்கமைய வீடுகளை நிர்மாணிக்குமாறும் ஆலோசனை வழங்கிய அரச தலைவர், வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகளை ஒரு கணக்கில் வரவு வைத்து, வீடமைப்பு வேலைகளுக்குப் பயன்படுத்துமாறும் தெரிவித்தார்.

வீடமைப்புக்கு உதவுவதற்குப் பல நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், அதற்கான திட்டத்தைத் தயாரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அரச தலைவர் கூறினார்.

இடரினால் பெற்றோரை இழந்த பிள்ளைகள் தொடர்பான அறிக்கையைத் தன்னிடம் சமர்ப்பிக்குமாறும் அவர் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய அனைத்துப் பிரதேச செயலக பிரிவுகளிலுமுள்ள பிரதேச செயலகங்களுக்கு தலா இரண்டு படகுகளை வழங்குமாறு கூறிய அவர், பாதிக்கப்பட்ட வீடுகளைத் துப்புரவு செய்வதற்காகப் பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிலுள்ள பவுசர்களைப் பயன்படுத்துமாறும் அலுவலர்களுக்குக் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான சிறப்புச் செயற்திட்டம் தலைமை அமைச்சர் அலுவலகத்தினால் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அந்தத் திட்டம் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும் எனவும் அரச தலைவர் குறிப்பிட்டார். அமைச்சர்களான வஜிர அபேவர்த்தன, மங்கள சமரவீர, சாகல ரத்நாயக்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன, முதலமைச்சர் ஷான் விஜேலால் டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான புத்திக பத்திரன, டலஸ் அழகப்பெரும, மாவட்டச் செயலாளர் பிரதீப் ரத்நாயக்கா மற்றும் மாவட்ட அரசியல் பிரதி நிதிகள், அரச அலுவலர்கள், முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பு அதிகாரிகளும் கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள் என்றுள்ளது. (து-21)

## துறைமுக நகரை கொழும்புடன் இணைப்பதற்கு நெடுஞ்சாலை

### தொடருந்துப் பாதை அமைக்கவும் முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 6
1.5 பில்லியன் டொலர் செலவில் சீன நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டு வரும் கொழும்புத் துறைமுக நகரத்தை, கொழும்புடன் இணைப்பதற்கான நெடுஞ்சாலை, சுரங்கப் பாதைகள், மற்றும் தொடருந்துப் பாதை என்பன அமைக்கப்படவுள்ளன.


துறைமுக நகரை, கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்துக்குச் செல்லும் அதிவேக நெடுஞ்சாலையுடன் இணைக்கும் வகையில் நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது. துறைமுக நகரில் இருந்து கொழும்புக்குள் நுழைவதற்கான இரண்டு சுரங்கப் பாதைகளை அமைப்பது குறித்து, சீன நிறுவனம் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி வருகிறது.

ஒரு இலகு தொடருந்துப் போக்குவரத்து முறை கொழும்புத் துறைமுக நகர் வரை நீடிக்கப் படவுள்ளது.

கடந்த மாதம் வரை, துறைமுக நகரத்தை உருவாக்குவதற்கான 40 வீத பணிகள் முடிவடைந்துள்ளன என்று சீன நிறுவன அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

25, 30 ஆண்டுகளில் துறைமுக நகரின் பகல் நேரச் சனத்தொகை 2.5 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில், 75 ஆயிரம் பேர் வதிவிட சனத்தொகையாக இருக்கும். இங்கு 21ஆயிரம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கப்படவுள்ளன. (து-5)



## போராட்டம் நடத்தியவரை அப்புறப்படுத்திய பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 6
தன்னைப் பொலிஸ் சேவையில் மீண்டும் இணைக்குமாறு கோரி முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று முதல் சாகும் வரையான உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

இதனையடுத்து நேற்று இரவு அங்கு வந்த பொலிஸார் அவரை அங்கிருந்து அகற்றினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசுக்கு எதிராகப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டதால் தன்னைப் பொலிஸ் உத்தியோகத்தர் பணியில் இருந்து நீக்கிவிட்டனர் எனவும், மீண்டும் பணியில் இணைக்கும்வரை போராட்டத்தைத் தொடரவுள்ளதாகவும் அவர் கூறினார். (து-21)

## சாந்தபுரம் கத்திக்குத்து வழக்கு ஒத்திவைப்பு

கிளிநொச்சி, ஜூன்6
சாந்தபுரம் இரணைமடுக் காட்டுப் பகுதியில் வயோதிபப் பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணை இம்மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படாத நிலையில் சம்பந்தப்பட்ட பெண்மணி நேற்றையதினம் மன்றில் முன்னிலையானார்.

இதன்போது விசாரணை அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனக் கிளிநொச்சிப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

இதனையடுத்து விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

கிளிநொச்சி சாந்தபுரம் காட்டுப் பகுதியில் கடந்த மார்ச் மாதம் 3ஆம் திகதி இடம் பெற்ற சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

சாந்தபுரம் கிராமத்தில் வசித்துவரும் மேற்படி பெண் இரணைமடுக் குளத்துக்கு நன்னீர் மீன்பிடித் தொழிலுக்குச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தபோது, இரணைமடு இராணுவத் தலைமையகத்துக்குப் பின்புறமாக உள்ள காட்டுக்குள் மறைந்திருந்த ஒருவர் திடீரெனப் பாய்ந்துவந்து குறித்த பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது பெண் அந்த நபருடன் மல்லுக்கட்டி கூச்சலிட்டதையடுத்து அவர் பெண்ணின் கழுத்தில் கத்தியால் குத்திவிட்டு இராணுவ முகாம் பக்கமாகத் தப்பிச்சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்ற வேளையில் குறித்த பெண்ணுக்கு முன்னால் ஐம்பது மீற்றர் தூரத்தில் சென்றுகொண்டிருந்த அவரது மகன், தாயின் அலறல் சத்தம் கேட்டுத் திரும்பி பார்த்துள்ளார். அப்போது தான் முன்னதாக குளத்திற்குச் சென்றுக்கொண்டிருந்தபோது பற்றைக்குள் அவதானித்த நபர் தனது தாயாரைக் கத்தியால் குத்திவிட்டு தப்பியோடுவதைக் கண்டதாகத் தெரிவித்திருந்தார்

அவ்வாறு தப்பிச்சென்றவர் ஊதாநிற மேலாடை அணிந்திருந்தார் என்றும், அவரை அடையாளம் காட்டமுடியும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில் இராணுவத்தினரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் ஏற்கனவே பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது.

எனினும், விசாரணைகள் முடிவுறாத நிலையில் அடையாள அணிவகுப்பை நடத்துவதில் சிக்கல் நிலவுவதாகப் பொலிஸார் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தனர். இந்தநிலையில் விசாரணை தொடர்பான அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மன்றில் தெரிவித்ததை அடுத்து நீதிவான் விசாரணையை ஒத்திவைத்தார். (ய)

### கடந்த மாதம் 4 தினங்களில் ஐவரை கொன்ற குற்றச்சாட்டில்

## பாதாளக் குழு உறுப்பினர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 6
கடந்த மாதம் நான்கு தினங்களில் நான்கு பொலிஸ் வலயங்களில் ஐவரைச் சுட்டுக் கொன்றதுடன் மேலும் இருவருக்குப் படுகாயம் விளைவித்த பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த இருவர் கடந்த சனிக்கிழமை ஜாஎல பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் பேலியகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ரி 56 ரகத் துப்பாக்கியொன்றும் ரவைகளும் கொலைகளுக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிளொன்றும் கைப்பற்றப்பட்டிருப்பதாக பேலியகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர். முன்னாள் இராணுவச் சிப்பாயான லசந்த பத்மலால் அல்லது கொஸ்கொட ரண மற்றும் அவரது சகாவான சனத் சில்வா அல்லது மிட்டியாகொட ராஜு ஆகிய இருவருமே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த இருவரும் கடந்த மாதம் 6ஆம் திகதி இமதுவ பொலிஸ் வலயத்தில் திக்கும்புரச் சந்தியில் தனது இரு பிள்ளைகளுடன் முச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த சுதத் பிரியந்த என்பவரையும், இரண்டு நாள்களுக்குப் பிறகு வெலிபென்னன பொலிஸ் வலயத்தில் கொஸ்கொட லொக்கு என்பவரையும், 23ஆம் திகதி ஹிக்கடுவ பொலிஸ் வலயத்தில் சஜித் நிமால் என்பவரையும், கசுன் தனுந்தர என்பவரையும், 30ஆம் திகதி அஹீன்கல்ல தலுவத்த வீதியில் பிரியந்த சொய்சா என்பவரையும் சுட்டுக் கொன்றதாகவும் மேலும் இருவருக்கும் படுகாயங்களை விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தென் மாகாணத்திலுள்ள இரு பிரபல பாதாள உலகக் குழுக்களிடையே ஏற்பட்டுள்ள பூசலே இந்தக் கொலைகளுக்குக் காரணமெனச் சந்தேகப்படுவதாகவும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பேலியகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர். (து-5)

# சேனநாயக்க பிணையில் வெளியேறினார்

யாழ்ப்பாணம், ஜூன் 6
முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்து நீதிமன்றத்தில் இருந்து நேற்று வெளியேறினார்.
அனுரவுக்குப் பிணை வழங்கி கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவு பிறப்பித்தது.
மேல் நீதிமன்றத்தின் உத்தரவு குறித்து, நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் போது, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதை யடுத்து, பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து சந்தேகநபர் நீதிமன்றத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.
பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜு தீனின் வழக்கில் சாட்சிகளை மறைக்க முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அனுர சேனநாயக்க, நீண்டகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ற-5)

# அதியுயர் வெப்பமே நந்திக் கடலில் மீன்கள் உயிரிழக்கக் காரணம்

## நாரா நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் தகவல்

முல்லைத்தீவு, ஜூன் 6
முல்லைத்தீவு மாவட்டம் நந்திக் கடலின் வட்டுவாகல் ஆற்றுப் பகுதியில் இலட்சக்கணக்கான மீன்கள் இறந்து கரையொதுங்கியமைக்கு அப்பகுதியில் நிலவும் அதியுயர் வெப்பமே காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.
மீன்களின் உயிரிழப்பு குறித்து தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான நாரா மேற்கொண்ட ஆய்வின் மூலம் இது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
குறித்த பிராந்தியத்தில் ஏற்பட்ட வெப்ப நிலை அதிகரிப்பே இதற்குக் காரணமென நாராவின் சூழல் ஆய்வுப் பிரிவின் தலைவர் எஸ்.ஏ.எம். அஸ்மி தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவில் தொடரும் வெப்ப நிலை அதிகரிப்புக் காரணமாக, நந்திக் கடலின் வட்டுவாகல்-பகுதி நீர் மட்டம் குறைந்துள்ளது. இதனால் களப்புப் பகுதிக்கும் கடலுக்குமான தொடர்பு துண்டிக்கப்படவே, கடல் நீருடன் நதி நீர் கலக்கும்போது உருவாகும் ஒட்சிசனின் அளவு அதிகமாகி நீரின் வெப்பநிலை உயர்ந்துள்ளது.



அத்துடன் தொடர் வறட்சியில் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் இடையே பெய்த மழை காரணமாகக் கடலுக்கு அடித்துவரப்பட்ட கழிவுகள் மற்றும் அதனால் ஏற்பட்ட இரசாயனத் தாக்கங்களினாலும் மீன்கள் இறக்க நேரிட்டது.
வட்டுவாகல் ஆற்றுப் பகுதியில் காணப்படும் மணல் மேடானது, கடலுக்கும் களப்புப் பகுதிக்குமான தொடர்பைத் தடுக்கிறது. இதனால் குறித்த மணல் மேட்டுப் பகுதியை அகற்றுவதற்கு அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது - என்றார். (த-21)

# இடரால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கிய பொதியில் தன் பெயர்

## குற்றப்புலனாய்வுத் துறையிடம் அமைச்சர் கயந்த முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 6
சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ள இடருக்குப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியாக வாழைப்பழங்களைப் பொதியிட்டு அதில் தனது ஒளிப்படம் மற்றும் பெயர் பொறித்து வழங்கியுள்ளனர் என்று அமைச்சர் கயந்த கருணாதிலக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.
அமைச்சரின் ஒளிப்படத்துடன் கூடிய அந்தப் பொதியில் 'காலியின் முதன்மையானவருடன் முன்னோக்கி' என்றும், அமைச்சரின் தொலைபேசி இலக்கம் மற்றும் காலி தல்கஸ்வல பிரதேசத்தில் அமைந்துள்ள அமைச்சரின் வீட்டின் தொலைபேசி இலக்கமும் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் பொறிக்கப்பட்டுள்ள வீட்டுத் தொலைபேசி இலக்கம் பொய்யானது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



சமூக வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ள ஒளிப்படம் தொடர்பிலே அமைச்சர் இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார். (ற-5)

# நடைபாதை வியாபாரிகளுக்கான புதிய கடைகள் ஓரிரு மாதங்களில்

## யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6
நடைபாதை வியாபாரிகளுக்கான புதிய இடம் இன்னும் ஓரிரு மாதங்களில் திறக்கப்படும் என யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
தற்போது நடைபாதை வியாபாரிகள் முனீஸ்வரன் வீதியில் தமது வியாபாரத்தை நடத்துகின்றனர். அந்த வீதியை பாவிப்போர் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. அந்த இடம் மிகவும் குறுகியதாக உள்ளதால் வியாபாரிகளும், நுகர்வோரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.
வியாபாரிகள், நுகர்வோர், அந்த வீதியைப் பாவிப்பவர்களின் நன்மை கருதி யாழ்ப்பாண மாநகர சபையால் யாழ்ப்பாண பேருந்து நிலையத்துக்கு கிழக்குப் புறமாகப் புதிதாக கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை கடந்த சித்திரை வருடப்பிறப்புக்கு முன்னர் வியாபாரிகளிடம் ஒப்படைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஒரு சில வேலைகள் பூரணப்படுத்தப்படாத நிலையில் உள்ளதால், அந்த வேலையையும் பூரணப்படுத்திய பின் இன்னும் ஓரிரு மாதங்களில் கையளிக்கப்படும் என்று ஆணையாளர் தெரிவித்தார். (ற-10)

# தினகரன்–சசிகலா நேற்றுச் சந்திப்பு

## தமிழகத்தில் திடீர்ப் பரபரப்பு



சென்னை, ஜூன் 6
அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளராகச் செயற்பட்ட சசிகலாவை நேற்று பெங்களூர்ச் சிறையில் சென்று சந்தித்தார் துணைப் பொதுச் செயலாளர் தினகரன். சசிகலா தனக்குப் பிணை வேண்டும் என்று கேட்டு நேற்று மனுவும் கையளித்தார். இதனால் தமிழக அரசியலில் நேற்றுப் பதற்றமான சூழல் உருவானது.
வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துக்களைச் சேர்த்த குற்றச்சாட்டில் சசிகலா சிறைக்குச் சென்றுள்ளார். இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற குற்றச்சாட்டில் தினகரன் சிறையிடப்பட்டிருந்தார். எனினும் அவருக்கு அண்மையில் பிணை கொடுக்கப்பட்டது. சிறையில் இருந்து வெளியே வந்த அவர் பெங்களூர் சென்று சசிகலாவைச் சந்தித்தார்.
தினகரன் சசிகலாவைச் சந்திக்கச் சென்ற அதேநேரம் நிதி அமைச்சர் ஜெயக்குமார் தலைமையில் சில அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இணைந்து திடீர் ஆலோசனை நடத்தி பின்னர் முதல்வர் பழனிச்சாமியையும் சந்தித்தனர்.
அ.தி.மு.க. கழத்தில் இருந்து சசிகலாவையும், தினகரனையும் நீக்கிவிட்டு இணைந்து செயற்பட ஓ.பன்னீர்செல்வம், பழனிச்சாமி தரப்பினர் முனைப்புக் காட்டிவந்த நிலையில் நேற்றைய திடீர்ச் சந்திப்புகள் தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன. (ம)

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 6
கொழும்பு, மட்டக்குளி [illegible] மாவத்தையில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 24 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத இருவரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சந்தேக நபர்களைத் தேடிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற-5)

# இடர் பாதித்த பகுதிகளை பார்வையிட்டார் மைத்திரி

கொழும்பு, ஜூன் 6
வெள்ளம், மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட களுத்துறை மாவட்டத்தின் புலத்சிங்கள, யட்டகம்பிற்றிய, நாஹகதொல பிரதேசங்களில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் கண்காணிப்புப் பயணத்தில் ஈடுபட்டார்.
அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
இடரால் அழிவடைந்த வீடுகள் மற்றும் காணிகளைப் பார்வையிட்ட அரச தலைவர், உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுற்றாடல் அமைச்சால் அந்தப் பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதான நிகழ்விலும் கலந்துகொண்டார். இராணுவத்தினர் மற்றும் சீன உதவிக் குழுவின் பங்களிப்புடன் சிரமதான நிகழ்வு இடம்பெற்றது.
நாஹகதொல பிரதேசவாசிகள் வெள்ள அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ளனர். அந்த இடங்களைக் கண்காணித்த அரச தலைவர் அது தொடர்பான அறிக்கையை விரைவாக வழங்குமாறு மாவட்ட செயலருக்கு ஆலோசனை வழங்கினார். மண் மேடு விழுந்ததால் தடைப்பட்டுள்ள நாஹகதொல கங்கையைச் சீரமைத்தல் தொடர்பான அறிக்கையையும் விரைவாக வழங்குமாறு பணிக்கப்பட்டது.
இடர்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கெனச் சிறப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அலுவலர்களுக்கு அரச தலைவரால் ஆலோசனை வழங்கப்பட்டது. அந்த மக்களினதும் பிள்ளைகளினதும் சுகாதார மற்றும் ஏனைய தேவைகள் தொடர்பில் தொடர்ச்சியாக ஆராய்ந்து பார்த்துச் செயற்படுமாறு மாவட்டச் செயலருக்கு பணிக்கப்பட்டது.
அழிவடைந்த வீடுகளுக்குப் பதிலாகப் புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணிகள் இனங்காணப்பட்டுள்ளன. மீள் குடியேற்றத்துக்காக அந்தக் காணிகள் பொருத்தமானதா எனச் சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் குடியமர்த்தும் வேலைகளை விரைவுபடுத்துமாறு மாவட்டச் செயலருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. - என்றுள்ளது. (ற-10)

# நல்லிணக்கம் தொடர்பான பாடத் திட்டம் பல்கலையில்

கொழும்பு, ஜூன் 6
2018 ஆண்டு முதல் பல்கலைக்கழகங்களில் நடைமுறைக்கு வரக்கூடிய வகையில் முரண்பாடு மாற்றம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தத் திட்டத்துக்காக முதற்கட்டமாக ருகுணு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், சௌந்தர்ய கலா பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா கல்வியகம், இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம் மற்றும் ஜாமியா நலீமியா நிறுவகம் போன்ற 7 பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் செயற்பாடுகள், பல்கலைக்கழகப் பிரதிநிதிகளால் நிறுவப்பட்ட குழுவால் நிர்வகிக்கப்படவுள்ளன.
முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க தலைமை தாங்கும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து உயர் கல்வி அமைச்சு ஊடாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் எனும் திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
நாடு முழுவதுமிருந்து தெரிவு செய்யப்பட்ட 7 உயர்கல்வி நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மற்றும் நாட்டின் அனைத்து சமூக அறிவியல் பீடாதிபதிகள் உள்ளிட்ட மூத்த அதிகாரிகளின் பங்குபற்றலுடன் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.
போர் முடிவடைந்து எட்டு வருடங்கள் முடிந்துள்ள நிலையிலும், நல்லிணக்கம், சமூக ஒற்றுமை மற்றும் மத சமரசம் தொடர்பான பிரச்சினைகள் பல்லின சமூகத்தினர் மத்தியில் இன்னமும் நிலவுகின்றன. இது இதயரணங்களைக் குணமாக்குவதற்கான நினைவூட்டலாகவும், ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய நீண்டகாலச் செயன்முறையாகவும் காணப்படுகிறது.
இலங்கையில் நிலையான சமாதானத்தை மலரச் செய்வதற்கான முக்கிய பங்கை இளைஞர்கள் கொண்டுள்ளனர். தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கூட்டு முயற்சியில் பல்கலைக்கழகங்களில் அறிமுகம் செய்யப்படும் முரண்பாடு மாற்றம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான புதிய பாடப்பிரிவானது, அரசின் நடுத்தர மற்றும் நீண்டகால முயற்சிகளில் நிச்சயமாகக் குறிப்பிடத்தக்க நேர்மறையான மாற்றத்தை உண்டாக்கும். பல்கலைக்கழகங்களினுள் வெவ்வேறு மதச் சமூகங்களைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் நேர்மறையான மாற்றத்தை உண்டாக்கி, இலங்கையில் பல்லின, மதப் பிரிவினர் மத்தியில் சமூக ஒற்றுமை மற்றும் சமாதானத்தை நிலைப்படுத்த வழிவகுப்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

# இடருக்கு உதவ மனிதாபிமான ரயில் பயணம்

## காங்கேசன்துறையிலிருந்து தெய்வேந்திர முனை நோக்கி

யாழ்ப்பாணம், மே 6

அண்மையில் ஏற்பட்ட இடரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மாத்தறை பிட்டபத்தர டட்லி சேனநாயக்க மகா வித்தியாலய மாணவர்களுக்கு உதவி வழங்குவதற்கான மனிதாபிமான தொடருந்துப் பயணம் எதிர்வரும் 10 ஆம் திகதி காங்கேசன்துறையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மாத்தறை பிட்டபத்தர டட்லி சேனநாயக்க மகா வித்தியாலயத்தைச் சுத்தப்படுத்திப் பாடசாலைச் சமுகத்துக்கு மீளக் கையளிப்பதற்காகவும், அந்த மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் மற்றும் அத்தியாவசிப் பொருள்களை வழங்குவதற்காகவும், இடரினால் இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை மாவட்ட மக்களுக்கு வழங்க முடிந்தளவு உதவிகளை வழங்குவதற்காகவும் இந்த தொடருந்து பயணம்ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் செயலகம் மற்றும் அரச தலைவர் ஊடகப் பிரிவு 'மக்கள் தொடர்பாடல்' என்ற இந்தச் செயற்றிட்டம் மொபிடெல் மற்றும் தொடருந்து திணைக்களத்தின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படவுள்ளது.

இந்த தொடருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மதவாச்சி, அனுராதபுரம் மாஹோ, கணேவத்த, குருணாகல், பொல்காவலை, அளவவ, அம்பேபுஸ்ஸ, மீரிகம், வெயங்கொட, கணேமுல்ல, கம்பஹா, ராகம, களனி, ஹுணுபிட்டிய, தெமட்டகொட, மருதானை, கொழும்பு கோட்டை, கல்கிசை, மொரட்டுவ, பாணந்துறை ஆகிய தொடருந்துநிலையங்களில்உதவிப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக நிறுத்தப்படவுள்ளது.

பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசப் கொப்பி புத்தகங்கள், தலையணை, மெத்தை, நுளம்பு வலை, சவர்க்காரம், பற்பசை, சுத்தப்படுத்தும் உபகரணங்கள், கட்டில் விரிப்புக்கள், துவாய்,




பெரியவர்கள்மற்றும்சிறுவர்களுக்கான ஆடைகள், பாடசாலைச் சீருடைகள், புத்தகப் பைகள், சப்பாத்துக்கள், செருப்புக்கள் மற்றும் சமயலறை உபகரணங்கள் என்பவற்றை இதன்போது மக்கள் வழங்க முடியும் என் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 10ஆம் திகதி தொடருந்து புறப்படும் வரும் வரை மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொடருந்து நிலையங்களில் உ... வப பொருள்களை வழங்கலாம்.

இந்த தொடருந்து மாத்தறைக்குப் பயணித்து மனிதாபிமான உதவிகளை தொண்டரடிப்படையில் மேற்கொள்ள ஆர்வமுள்ளோர் 0771910630 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து)



# மூதூர் பாலியல் வதை; நீதி கேட்டு வீதி மறியல்

மூதூர், ஜூன் 6

திருகோணமலை மூதூரில் பாடசாலைச் சிறுமிகள் மூவர் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து பல இடங்களில் கண்டனப் போராட்டங்கள் இடம்பெற்றன. மூதூர், இறால்குழி மற்றும் மட்டக்களப்பு பிரதான வீதிமல்லிகைத் தீவு சந்தியில் பட்டித்திடல், பெரிய வெளி, மல்லிகைத்தீவு மற்றும் மணற்சேனைபோன்றபலகிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் இணைந்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். (து-ய-40)

# வன்புணர்வு விசாரணை புலனாய்வுப் பிரிவிடம்?

## சட்டவாளர்கள் கோரிக்கை

மூதூர், ஜூன் 6

திருகோணமலை - மூதூ ரில் பாடசாலை மாணவிகள் மூவர் வன்புணர்வுக்கு உட்பட்ட சம்பவம் தொடர்பானவழக்கு விசாரணையைப் புலனாய்வுப் பிரிவிடம் கையளிக்குமாறு சட்டவாளர்கள் சார்பில் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை நேற்று மூதூர் நீதிவான் நீதிமன்றில் விசாரணைகு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமிகள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டவாளர்கள் நீதிவானிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இதன்போது 5 சந்தேகநபர்களும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டபோதிலும் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (து-ய-40)

## கர்ப்பிணி படுகொலை வழக்கு;

# 2 சந்தேக நபர்களும் தொடர்ந்து மறியலில்

யாழ்ப்பாணம், ஜூன் 6

ஊர்காவற்றுறை கர்ப்பிணிப் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் திகதி ஊர்காவற்றுறைப் பகுதியில் கர்ப்பிணி ஒருவரை இனம்தெரியாத நபர்கள் தாக்கியதுடன் படுகொலையும் செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இரண்டு பேரைக் கைது செய்தனர். குறித்த வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

இந்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் ஏ.எம்.எம்.ரியால் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே குறித்த சந்தேகநபர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டார்.

(து-8)

# ஓர்லாண்டோவில் சூடு பலர் சாவு என அச்சம்

அமெரிக்காவின் புளோரிடா மாநிலம் ஓர்லாண்டோ நகரில் உள்ள தொழிற்பூங்காவில் நேற்று மர்ம நபர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் பலர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

ஊழியர்கள் வழக்கம் போல் பணிக்கு வந்து கொண்டிருந்த போது திடீரென துப்பாக்கி ஏந்திய மர்ம நபர் ஒருவர் கண்மூடித்தனமாகச் சுட்டார். இதில் பலர் தோட்டாக்கள் பாய்ந்து உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலால் ஓர்லாண்விடோல் பதற்றம் ஏற்பட்டுள்ளது. வேலையில் அதிருப்தி அடைந்த ஒருவர் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம். அவர் தன்னைத்தானே சுட்டும் தற்கொலை செய்துகொண்டார் என்று அமெரிக்க மற்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

(ம)



# வற்றாப்பளை பொங்கலுக்கு நேற்று கடல் தீர்த்தம் எடுப்பு

முல்லைத்தீவு, ஜூன் 6

உப்பு நீரில் விளக்கெரியும் அற்புதம் நிறைந்த வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கலுக்காக முல்லைப் பெருங்கடலில் நேற்று மாலை 6 மணியளவில் தீர்த்தம் எடுக்கப்பட்டது.



# தென்மராட்சி பிரதேச செயலக உலக சுற்றாடல் தின நிகழ்வு

சாவகச்சேரி, ஜூன் 6

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் உலகச் சுற்றாடல் வாரத்தின் இறுதிநாளான நேற்று உலக சுற்றாடல் தின நிகழ்வை தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் நடத்தினர்.

பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் சாவகச்சேரி நகரசபையினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்சில் தென்மராட்சி கல்வி வலயத்தின் 6 முன்னணி கல்லூரி மாணவர்களுக்கிடையிலான விநாடி வினாப்போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவை முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்டன. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, வரணி மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்கள் ஒரே அளவு புள்ளிகள் பெற்று நான்காம் இடத்தைப் பெற்றனர். போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (து-9)

# அமைச்சர்கள் இருவரும் பதவியிலிருந்து உடனே விலகவேண்டியதில்லை

## கூறுகிறார் சிறிதரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 6

வடக்கு மாகாண அமைச்சர்கள் இருவரும் உடனடியாகப் பதவியைத் துறக்கவேண்டிய அவசியமில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

உரும்பிராயில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம், வடமாகாண அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இந்தக் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண அமைச்சர்கள் இருவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்துக்களை முன்வைக்கின்றபோது அது பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். அதற்காகக் குறிப்பிட்ட அமைச்சர்கள் உடனடியாகப் பதவி விலகவேண்டுமென்ற அவசியமில்லை.

அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக மூவரடங்கிய குழுவை முதலமைச்சர் நியமித்திருந்தார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உடனடியாக ஊடகங்களில் தெரியப்படுத்துவதைத் தவிர்த்து குறித்த அமைச்சர்களுடன் கலந்துரையாடிய பின்னர் இது தொடர்பான விடயங்களை முதலமைச்சர் வெளியிட்டிருந்தால் இந்த விவகாரத்தைச் சுமுகமாகத் தீர்த்திருக்க முடியும் என்பது எனது தனிப்பட்ட கருத்து - என்றார்.

(து-21)



## அரச தலைவரைச் சந்திப்பதற்கான திகதியை உடனடியாக அறிவியுங்கள்

### உறவுகள் வடக்கு ஆளுநருக்கு கடிதம் அனுப்பி வைப்பு

கிளிநொச்சி,ஜூன் 6
அரச தலைவரைச் சந்திப்பதற்கான திகதியை உடனடியாக அறியத்தருமாறு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.
இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் இணைப்பாளர் யோ.கனகரஞ்சினி தெரிவித்ததாவது,
"கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்களால் சாலை மறியல் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது . போராட்டத்தின் போது, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தால் போராட்டக்காரர்களைச் சந்திப்பதற்கு அரசதலைவர் ஆவலாக இருப்பதாகக் குறிப்பிட்டு கடிதம் அனுப்பப்பட்டது.
அதனைத் தொடர்ந்து உறவினர்கள் சாலை மறியல் போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர் . தற்போது எமது தரப்பில் அரச தலைவரைச் சந்திப்பவர்களுக்கான தெரிவுகள் இடம்பெறுகின்றன.
அதற்கு முன்னர் சந்திப்புத் திகதியை அறிவிக்குமாறு வடமாகாண ஆளுநருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளோம். என்றார். இதேவேளை வடமாகாண ரீதியாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் பரவலாகப் போராட்டங்கள் மாவட்ட ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

## முத்தமிழ் விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 6
நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் முத்தமிழ் விழா இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு தலைவர் தி.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் ஆசியுரையை நீர்வேலி செல்லக் கதிகாம ஆலய சிவஸ்ரீ கு.தியாகராஜக்குருக்களும், அரசகேசரிப்பிள்ளையார் கோயில் சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்களும் வழங்குவர்.
நிகழ்வின்முதன்மை விருந்தினராக சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டல் முகாமைத்துவப் பணிப்பாளர் தி.ஜெகசீலனும், வலி. கிழக்குப் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் க.நாகரத்தினமும், மதிப்புறு விருந்தினர்களாக பாடசாலை நலன் விரும்பி கோ.ஜீவாவும், நீர்வேலி ரோஜா வன நலன்விரும்பி திருமதி கா.இராசசிவமும் கலந்து கொள்ளவுள்ளனர். (த)

# வைத்தியசாலைக்கு அருகே குப்பை கொட்டும் விசமிகள்

### விடுதியில் தங்கியுள்ள நோயாளருக்குப் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6
மந்திகை ஆதார வைத்தியசாலையின் கிழக்குப் புறமாக உள்ள சாவகச்சேரி வீதியில் பொது மக்களால் திண்மக் கழிவுப் பொருள்கள் தினமும் கொட்டப்படுகின்றன. இதனால் வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளர்களுக்கு டெங்கு போன்ற நோய்கள் உருவாக வாய்ப்பு உள்ளதாக விடுதியில் தங்கியுள்ள நோயாளர்கள் விசனம் தெரிவித்தனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
மந்திகை ஆதார வைத்தியசாலை அமைந்துள்ள பகுதி பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி உப அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதியாகும். சபையில் குப்பை அகற்றும் வாகனங்கள் காணப்படுகின்றபோதிலும் தினமும் பெருமளவு திண்மக்கழிவுப் பொருள்கள் இனந்தெரியாதோரால் வீதியில் கொட்டப்பட்டு வருகின்றன.
சுகாதாரத்துடன் தொடர்புடைய வைத்தியசாலை வளாகத்தின் அருகே திண்மக் கழிவுகளைக் கொட்டுவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து திண்மக் கழிவுகளை வெளியேற்றுவதுடன், நோயாளர்களை மேலும் பாதிக்கும் நடவடிக்கையை ஏற்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்என்றனர்.
இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்ததாவது:
வைத்தியசாலை வளாக கிழக்குப் புறத்தில் உள்ள சாவகச்சேரி வீதிச் சந்தியில் தினமும் இரவு வேளைகளில் இனந்தெரியாதோரால் திண்மக்கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களுக்கு வேறு நோய்கள் உருவாகக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இந்த இடத்தில் சேரும் திண்மக் கழிவுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்துமாறு பிரதேச சபைக்கு அறிவித்துள்ளோம்.
வைத்தியசாலை விடுதியில் தங்கியுள்ள நோயாளர்களுக்கு சுகாதாரச் சீர்கேடு காணப்படுவதால்அந்தப்பகுதியில்குப்பைபோடவேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளதுஎன்றனர்.
பருத்தித்துறை பிரதேச சபைச் செயலர் எஸ்.சிறிபாஸ்கரன் தெரிவித்ததாவது;
எமது சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள திண்மக்கழிவுகள் உடனுக்குடன் அகற்றப்படுகின்றன. குற்றம்சாட்டப் படும் பிரதேசத்தில் குப்பை கொட்டவேண்டாம் என்ற அறிவிப்புப் பலகை ஏற்கனவே வைக்கப்பட்டுள்ளது.
மீளவும் அந்தப் பகுதியில் குப்பை கொட்டப்படுவது தொடர்பாக எமக்கு முறைப்பாடு கிடைக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்என்றார். (த-109-26)



வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரச வேலை தேடும் பட்டதாரிகளால் முன்னெடுக்கப்படும் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று 100 ஆவது நாளை எட்டுகிறது. இதனையொட்டி நேற்று இரவு அவர்கள் மாவட்டச் செயலகம் முன்பாகக் கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டனர். (த-21)

## மாணவர்களை ஊக்கப்படுத்தும் மகிழ்வுரைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 6
மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் இன்றும் நாளையும் காலை 7 மணி முதல் 8 மணி வரை யாழ்ப்பாண சின்மயா மிசன் வதிவிட சுவாமிகளது ஊக்கப்படுத்தல் மகிழ்வுரைகள் நடைபெறவுள்ளதாக வித்தியாலய அதிபர் தெரிவித்தார்.
இன்று தன்னம்பிக்கையை கட்டியெழுப்புவோம் என்ற தலைப்பிலும், நாளை நம்மால் சாதிக்கமுடியும் என்னும் தலைப்பிலும் ஊக்கப்படுத்தும் உரைகள் இடம்பெறவுள்ளன. மாணவர்களது கலை ஆர்வத்தையும், இயலுமையையும் விழுமிய பண்பாட்டையும் மேம்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி நடைபெறவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (த-10)

## சூழல் தினத்தை முன்னிட்டு வலி.கிழக்கில் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு வலி.கிழக்கில் நேற்று பெருமெடுப்பிலான சிரமாதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.
வலி.கிழக்குப் பிரதேச சபையின் வேண்டுகோளுக்கு இணங்கக் கோப்பாய் பிரதேச செயலகத்தின் உதவியுடன் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.
நீர்வேலி தரவையில் உள்ள திண்மக் கழிவுகள் தரம் பிரிக்கும் சுற்றாடல் பகுதியில் இந்தச் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.
கோப்பாய் பிரதேச செயலகம், வலி.கிழக்கு பிரதேச சபை மற்றும் பொலிஸார், இராணுவத்தினர் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்தப் பணிகளில் ஈடுபட்டனர்.
இராணுவத்தினரின் கனரக வாகனங்கள் இந்தச் சிரமதான பணிக்கு பயன்படுத்தப்பட்டன. (த-17)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில் சிவகுமாரன் நினைவு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், தமிழீழ விடுதலைக்காக உயிர் நீத்த பொன். சிவகுமாரனின் நினைவு தினம் நேற்று இடம்பெற்றது.
உரும்பிராய்ப் பகுதியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.
அதனைத் தொடர்ந்து உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள சிவகுமாரனின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.
இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (த-ய)

## தேர்த் திருவிழா

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.
தொடர்ந்து 10 ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவன திருவிழாவும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வைரவர் உற்சவமும் நடைபெறும். (த-17)

## அரசகேசரிப் பிள்ளையாரின் மணவாளக்கோல திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன்.6
நீர்வேலி சிறி அரசகேசரிப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த மணவாளக் கோல திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் காலையில் சிறப்பு பூசை அபிஷேகங்கள் இடம்பெற்று இரவு 7 மணிக்கு விநாயகப் பெருமான் அலங்கார பூந்தண்டிகையில் திருவீதியுலாவருதல்நடைபெறும்.
தொடர்ந்து 8 ஆம் திகதி வியாழக்கிழமை, வைகாசி மாத மகேஸ்வர பூசை வெகு சிறப்பாக இடம்பெறும் என்று ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (த-17)

## முதியோர் இல்லத்தில் இன்று சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஜூன் 6
கைதடி அரச முதியோர் இல்லத்தில் பெருமெடுப்பிலான சிரம்தானப் பணிகள் இன்று செவ்வாய்கிழமை இடம்பெறும்.
யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் சாரணர்களால் இந்த சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படும்.
கல்லூரிச் சாரணர்கள் ஐந்து குழுக்களாகப் பிரிந்து இல்லச் சுற்றாடலைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.
கைதடி முதியோர் இல்லத்தைச் சமூகத்துக்குப் பயனுள்ள முதியோர் இல்லமாக மாற்றியமைக்கும் திட்டத்தின் கீழ் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் ஒருங்கமைக்கப்பட்டு வருகின்றன. (த-17)



உலக சுற்றாடல் தினத்தையொட்டிச் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் அலுவலக வளாகத்தில் மாதிரித் தோட்டம் அமைத்துள்ளனர். இந்தத் தோட்டத்தில் நேற்று சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி க.தயாளன் மரக்கறி விதைகளை விசிறி செய்கையை ஆரம்பித்து வைத்தார். (த-9)

## வருடாந்த திருவிழா

சங்கானை, ஜூன் 6
சங்கானை இலுப்பைத்தாழ்வு வெல்வில் முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
இந்தத் திருவிழாவில் இன்று தேர்த் திருவிழாவும், நாளை 7ஆம் திகதி புதனகிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (த-29)

## வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்த குருநகர் II பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிதொடக்கம் மு.ப 11 மணிவரை பழையபூங்கா வீதி ஈச்சமோட்டை வீதி சந்தியிலும் மு.ப.11 மணிதொடக்கம் 1 மணிவரை சென்பற்றிக்ஸ் வீதி சேமக்காலை அருகிலும், பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை சென் பற்றிக்ஸ் வீதி கதிற்றல் வீதி சந்நிதி அருகிலும், நாளை புதன்கிழமை காலை 9 மணிதொடக்கம் மு.ப. 11 மணிவரை இராஜேந்திரா வீதியிலும், மு.ப.11 மணிதொடக்கம் 1 மணிவரை டேவிற் வீதி, கடற்கரை வீதி சந்தி அருகிலும், பி.ப. 2.30 மணி தொடக்கம் மாலை 4மணிவரை டேவிற் வீதிகதிற்றல் வீதி சந்தி அருகிலும், எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப .11 மணிவரை மவுண்காமல் வீதி பாங்சால் வீதியிலும் மு.ப.11 மணிதொடக்கம் பி.ப 1 மணிவரை மவுண்காமல் வீதி பிரதானவீதி சந்தியிலும் பி.ப 2.30 தொடக்கம் மாலை 4 மணிவரை கோயில் வீதி ரயில் தண்டவாளச் சந்தியிலும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரை கோயில் வீதி, சோமசுந்தரம் ஒழுங்கையிலும், மு.ப.11 மணி தொடக்கம் பி.ப 1 மணிவரை ஆஸ்பத்திரி வீதி, கோயில் வீதிச் சந்தியிலும் பி.ப. 2.30 தொடக்கம் மாலை 4 மணிவரை சோமசுந்தரம் வீதியிலும்,

மறுநாள் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப. 11 மணிவரை கச்சேரி நல்லூர் வீதி தண்டவாளச் சந்தியிலும் மு.ப.11 மணி தொடக்கம் பி.ப .1 மணிவரை பழைய பூங்காபதியிலும் பி.ப. 2.30 தொடக்கம் மாலை 4 மணிவரை சுவாஸ் லேனிலும், மறுநாள் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியிலிருந்து மு.ப. 11மணிவரை சென் ஜோன்ஸ் கல்லூரி முன்புறத்திலும் மு.ப.11 மணியிலிருந்து பி.ப.1மணிவரை கொழும்புத்துறைவீதி விதானையார் வீதிச் சந்தியிலும் பி.ப.2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை சந்தன மாதா கோவில் பகுதியிலும்,

மறுநாள் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியிலிருந்து மு.ப. 11மணிவரை கச்சேரிகிழக்கு ஒழுங்கை சென் ஆன்ஸ் வீதிசந்தியிலும் மு.ப.11 மணியிலிருந்து பி.ப.1மணிவரை கச்சேரி கிழக்கு ஒழுங்கையிலும் பி.ப.2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை காட்டுக்கந்தோர் ஒழுங்கையிலும், மறுநாள் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியிலிருந்து பி.ப.1மணிவரைநடமாடும் சேவைகுருநகர் II பகுதியிலும் நடமாடும் சேவை நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-10)

### யாழ்.நீதிமன்றம் மீதான தாக்குதல்;

# 3 வருடங்களின் பின் இளைஞர் வானூர்தி நிலையத்தில் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவரை இம்மாதம் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாண நீதிமன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணம், சோனகத் தெருவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இந்த வாரம் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

**பின்னணி**


புங்குடுதீவுப் பகுதியில் இடம்பெற்ற பாடசாலை மாணவி வித்தியாவின் படுகொலையைத் தொடர்ந்து கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில் கடையடைப்பும் ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது. இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பின்னர் யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டடத் தொகுதி முன்பாக ஒன்று திரண்டதுடன் கோசங்களை எழுப்பினர். பின்னர் இந்த ஆர்ப்பாட்டம் கலவரமாக மாறியதுடன் நீதிமன்றக் கட்டடத் தொகுதியும் அங்கிருந்த பெருமளவான சான்றுப்பொருள்களாக நீதிமன்றுக்கு வந்த வாகனங்கள், சிறைச்சாலைத் திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனம் என்பனவும் ஆர்ப்பாட்டக்காரர்களால் அடித்து நொறுக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் பொலிஸாராலும் சிறப்பு அதிரடிப் படையாலும் கைது செய்யப்பட்டு நீண்ட நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பலருக்கு நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே குறித்த இளைஞனும் 67ஆவது சந்தேகநபராகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அவருக்கெதிராகப் பிடியாணையும் பிறப்பிக்கப் பட்டிருந்தது.

குறித்த இளைஞன் சம்பவத்தின் பின்னர் மத்திய கிழக்கு நாடொன்றுக்குச் சென்று கடந்த வாரம் இலங்கைக்குத் திரும்பி வரும்போது கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞனைக் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேற்று யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேக நபரை இம்மாதம் 19ஆம்திகதிவரை விளக்கமறிய லில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (து-103)



## யாழ்ப்பாணத்திலிருந்து தம்புள்ளைக்கு 28 கிலோ நிறையுடைய பூசணிக்காய்

கொழும்பு, ஜூன் 6
தம்புள்ளை பொருளாதார மைய நிலையத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட பூசணிக்காய்களில் பெரிய அளவிலான பூசணிக்காய் ஒன்று கிடைத்துள்ளது என்று தமபுள்ளை சந்தை வர்த்தகரொருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மரக்கறி வகைகள் வழமையாக தம்புள்ளை மரக்கறிச் சந்தைக்கு அனுப்பப்படுகின்றன. அதில் 28 கிலோ 100 கிராம் எடை உடைய ஒரு பூசணியும் காணப்பட்டுள்ளது. சந்தையில் ஒரு கிலோ கிராம் பூசணிக்காய் 110 முதல் 120 ரூபாய் விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந்தப் பூச ணிக்காய் 3ஆயிரத்து 160 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. பெரிய அளவிலான பூசணிக் காய் கிடைத்தமையால் நல்ல விலைக்கு விற்க முடிந்தமை மகிழ்ச்சியளிப்பதாகக் குறித்த வர்த்தகர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 1000 | 1200 |
| நண்டு | 500 | 350 | 500 | 500 |
| கணவாய் | 600 | 800 | 800 | 1200 |
| பாரை | 600 | – | 700 | – |
| சுறா | 500 | – | 1000 | – |
| சீலா | 400 | 400 | 600 | 500 |
| விளை | 500 | 400 | 600 | 700 |
| முரல் | 400 | 300 | 500 | – |
| கும்பிளா | 400 | – | 450 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 350 | 400 | 500 | 500 |
| திரளி | 250 | 300 | 200 | 200 |
| நகரை | 300 | 300 | 400 | – |
| சூடை | 150 | 400 | 200 | 200 |
| ஒட்டி | 250 | – | 350 | – |
| திருக்கை | 350 | 300 | 400 | – |
| மதனம் | 200 | – | 350 | – |
| கொய் | 150 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 600 | 500 |
| வாழை | 200 | – | 500 | – |





## இது புதுசு

பெண்களுக்கான பஞ்சாபி வகைகளில் தற்போது நவீன வடிவில் பஞ்சாபிகள் சந்தைக்கு வந்துள்ளன. இவை 3 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 70 | 80 | 60 |
| கத்தரி | 140 | 180 | 160 | 100 | 180 |
| கரட் | 200 | 240 | 160-300 | 300 | 320 |
| மரவள்ளி | 60 | 80 | 45–60 | 60 | 60 |
| பயிற்றை | 120 | 100 | 80 | 100 | 100 |
| பாகல் | 160 | 180 | 160 | 160 | 200 |
| வற்றாளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 75 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 300 | 260 | 260 | 300 | 240 |
| பூசணி | 60 | 80 | 55 | 70 | 80 |
| தக்காளி | 140 | 120 | 100 | 140 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 25–35 | 40 | 40 |
| கீரை | 25 | 30 | 15–25 | 15 | 25 |
| கெக்கரிக்காய் | 25 | 40 | 20 | 35 | 20 |
| பச்சை மிளகாய் | 300 | 450 | 350 | 400 | 450 |
| புடோல் | 100 | 100 | 60 | 100 | 100 |
| கோவா | 140 | 160 | 150 | 180 | 180 |
| வெண்டி | 120 | 120 | 70 | 180 | 100 |
| போஞ்சி | 200 | 240 | 180 | 240 | 180 |
| லீக்ஸ் | 120 | 120 | 100–110 | 120 | 100 |
| தேங்காய் | 70 | 65 | 35-60 | 60 | 65 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 95 | 100 | 120 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 240 | 220 | 160 | 200 |
| இராசவள்ளி | 200 | - | | 300 | 240 |
| முருங்கைக்காய் | 160 | 80 | 60-80 | 50 | 100 |

## வடக்குக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் நியமனம்



யாழ்ப்பாணம், ஜூன் 6
வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபராக றொசன் பெர்னாண்டோ நேற்று உத்தியோக பூர்வமாக பதவியேற்றார்.

காங்கேசன் துறையில் உள்ள வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் நேற்று காலை 9 மணிக்கு பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றது. பதவியேற் பின்போது மதகுருமார்களால் ஆசி வழங்கப்பட்டது.

இவருக்கு முன்னர் இருந்த வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் சரத் புஸ்பகுமார கடந்த 23ஆம் திகதி ஓய்வுபெற்றார். (ற-10.26)

## 87 லட்சம் ரூபா செலவில் மகிந்தவுக்குப் பதாகைகள்

### வட மாகாண விவசாய அமைச்சு அமைத்தது!

யாழ்ப்பாணம், ஜூன் 6
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வந்த மூன்று சந்தர்ப்பங்களில் பதாதைகள் அமைப்பதற்காக மாத்திரம் 87 லட்சத்து 63 ஆயிரத்து 550 ரூபா வடக்கு மாகாண விவசாய அமைச்சால் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தகவலை வடக்கு மாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் நாட்டின் அரச தலைவராகப் பதவி வகித்தவர்கள், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வந்தபோது மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பில், தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஊடாக, வடக்கு மாகாண விவசாய அமைச்சிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு வழங்கப்பட்டுள்ள பதிலில் தெரிவிக்கப்பட்டதாவது

அரச தலைவர் வருகையை முன்னிட்டு புதிய பதாதைகளை அமைத்தமைக்கும், பழைய பதாதைகளை அவ்வப் போது திருத்தியதற்குமான செலவுகள் 87 லட்சத்து 63 ஆயிரத்து 550 ரூபா ஆகும்.

2011 ஆம் ஆண்டு 10 பதாதைகளுக்காக 8 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவும், 2012 ஆம் ஆண்டு 70 பதாதைகளுக்காக 59 லட்சத்து 26 ஆயிரத்து 400 ரூபாவும், 2013 ஆம் ஆண்டு 18 பதாதைகளுக்காக 19 லட்சத்து 72 ஆயிரத்து 150 ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செலவுகளுக்குரிய பணம், அரச தலைவர் செயலகத்தால் மீளளிக்கப்படவில்லை. என்றுள்ளது. (ற-5)

## முன்னாள் போராளிகளுக்கு கட்சியில் இணைய அழைப்பு

எருவில்,ஜூன் 6
விடுதலைப் புலிகளின் அமைப்பில் போராளியாகவிருந்த அனைவரும் ஆயுத கலாசாரமற்ற ஜனநாயகப் போராளிகளாக மீண்டும்ஒருகுடையின்கீழ் அணிதிரண்டு மக்களுக்கு சேவை செய்யும் ஜனநாயகப் பயணத்தில் பங்கு கொள்ளுங்கள்.

இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சி அறைகூவல் விடுத்துள்ளது.

ஜனநாயகப்போராளிக்ளாக ஒரு வேண்டுகோளை முன்வைக்கின்றோம் எனும் தலைப்பில் கிழக்கு மாகாணத்தில் பல இடங்களில் வழங்கப்பட்டுள்ள துண்டுப் பிரசும் ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவான ஜனநாயக போராளிகளாக உங்கள் முன் வந்துநிற்கின்றோம்.

அச்சமின்றி அனைத்துப் போராளிகளும் ஜனநாயகப் போராளிகளாக மீண்டும் எமது சேவையை இலங்கை அரசின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு மக்களுக்கு வழங்குவோம்.

எம் தலைவன் மீது நம்பிக்கையும் பற்றும் கொண்ட எம்மக்கள் அனைவரும் எம்முடனும் கைகோர்க்கும் படி கேட்டுநிற்கின்றோம்" என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற - ய)

## உள்நாட்டுச் சோளத்தைக் கொண்டு கால்நடைத் தீவனம் தயாரிக்கத் தடை

யாழ்ப்பாணம், ஜூன் 6
கால்நடைத் தீவனத் தயாரிப்புக்கு உள்நாட்டுச் சோளத்தைக் கொள்முதல் செய்வதற்கு விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தடை விதித்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

நாட்டின் ஒரு பகுதி வெள்ளத்தாலும், மண்சரிவாலும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும்போது, மற்றுமொரு பகுதி கடுமையான வறட்சியில் திண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்த இக்கட்டான கட்டத்தில், மனிதப் பாவனைக்கே உள்நாட்டு சோளம் பற்றாக்குறையாக இருக்கும்போது, கால்நடைத் தீவனத்துக்கு அதைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகவே அமைச்சர் இந்தத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்று விவசாய அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கர்ப்பிணிகளுக்கும் குழந்தைகளுக்கும் வழங்கப்படும் திரிபோசவின் தயாரிப்புக்கு சோளம் பயன்படுகின்றது. நாட்டின் உலர் வலயத்தில் பயிராகும் சோளத்தின் அறுவடை வறட்சியான காலநிலையால் பெரிதும் குறைவடைந்துள்ளது. நிலைமை சீராகும்வரை உள்நாட்டு சோளத்தை கால்நடைத் தீவனத் தயாரிப்புக்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்று அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியிருக்கிறார்.

கால்நடைத் தீவன உற்பத்தியாளர்கள் தங்களது தேவைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற-5)

## 56,000 பேருக்கு டெங்குத் தொற்று

கொழும்பு, ஜூன் 6
ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் டெங்கு தொற்றுக்குள்ளான 56 ஆயிரம் பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதிகமான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 12 ஆயிரத்து 610 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பகா மாவட்டத்தில் வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 8 ஆயிரத்து 324 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 4 ஆயிரத்து 256 டெங்கு நோயாளர்கள் அடையாளம்காணப்பட்டுள்ளனர்என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது. (ற-5)

### சாவகச்சேரி வைத்தியசாலையில்

## சிற்றுண்டிச் சாலையை ஒழுங்காக இயக்காததால் பெரும் இடர்பாடு

### தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள் விசனம்

சாவகச்சேரி, ஜூன் 6
சாவகச்சேரி வைத்தியசாலை வளாகத்தில் உள்ள சிற்றுண்டி நிலையம் ஒழுங்காகச் செயற்படாததால் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

"சிற்றுண்டி நிலையத்தைக் குத்தகைக்கு எடுத்தவர் மு.ப.9 மணிக்குப் பின்னர் வியாபாரத்தை ஆரம்பித்து மாலையில் பூட்டிவிட்டுச் சென்று விடுகிறார். ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் திறப்பதில்லை. விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்கள் சுடுநீர் மற்றும் உணவுகளை வைத்தியசாலைக்கு வெளியில் உள்ள கடைகளில் வாங்க வேண்டியுள்ளது. நோயாளர் வைத்தியசாலைக்கு வெளியே செல்ல பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதிப்பதில்லை. நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் மூலம் வெளியிலிருந்து உணவுப் பொருள்களை வாங்க வேண்டியுள்ளது. வைத்தியசாலை வளாகத்தில் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதால் அவை விடுதிகளுக்குள் புகுந்து அங்கு வைத்திருக்கும் உணவுப் பொருள்களைத் தூக்கிச் செல்கின்றன. இதனால் சில நாள்களில் நோயாளர்கள் பட்டினியாக இருக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை." என்று நோயாளர்கள் தெரிவித்தனர்.

"ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் அங்கு பணியாற்றுவோருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளதால் திறப்பதில்லை. மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் தீர்வு காணப்படும்." என்று சிற்றுண்டிச் சாலையை குத்தகைக்கு எடுத்த சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார். (ற-9)

## வளலாய் எல்லை வகுப்பு தொடர்பில் உடன் ஆராய்க

### வலி.கிழக்கு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சித்தார்த்தன் எம்.பி. பணிப்பு

அச்சுவேலி, ஜூன் 6
வளலாய் கிராமத்தில் ஒரு பகுதி வலி. வடக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ளீர்ப்பு செய்யப்பட்டு புதிய எல்லை வகுக்கப்பட்டிருப்பது தொடர்பான முறைப்பாட்டை வலி. கிழக்கு பிரதேச செயலர், வலி. வடக்கு பிரதேச செயலர், மேலதிக அரச அதிபர் (காணி) மூவர் உள்ளடங்கிய குழு உரிய முறையில் நில அளவை படங்களுடன் நோக்கி உண்மை நிலையை தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு வலிகிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இணைத்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

வளலாய் கிராமத்தில் ஒரு பகுதியை வலி. வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குள் உள்ளீர்ப்புச் செய்து வலி. வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கான எல்லை புதிதாக வகுக்கப்பட்டுள்ளது என்று வளலாய் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் நிர்வாகிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது குற்றம் சாட்டினர். நில அளவைப் படங்களையும் கூட்டத்தில் சமர்ப்பித்து தமது நியாயத்தை வலியுறுத்தினர்.

அவற்றைச் செவிமடுத்த இணைத் தலைவர், "பொது மக்களுக்கு உண்மை நிலை தெளிவுபடுத்தப்பட வேண்டும். உண்மை நிலை கண்டறிந்து குறுகிய காலத்தில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்" என்று தெரிவித்தார். (ற-11)

## மலேரியா பரவும் அபாயம்: தடுப்பது தொடர்பில் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 6
நாட்டில் மலேரியாக் காய்ச்சல் மீண்டும் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி க.நந்தகுமார் தெரிவித்தார்.

நாட்டில் மலேரியா நோய் முற்றாக ஒழிக்கப்பட்ட போதிலும் எமது அயல்நாடுகளுக்குச் சென்று வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. பல்வேறு தேவைகளுக்காகச் சென்று வரும் இவர்கள் மூலம் மலேரியா இங்கு பரவக்கூடிய அபாயமுள்ளது.

இதைத் தடுக்கும் முகமாக திணைக்களத் தலைவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு "மலேரியா நோயின் மறு அறிமுகத்துக்கான தடுப்பு நடவடிக்கை" எனும் தலைப்பில் யாழ்.பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளது.

திணைக்களத் தலைவர் அல்லது அவரது பிரதிநிதியை அனுப்பி வைக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-9)

### வேலி அமைத்தும் பயனில்லை

## கிண்ணியாவில் தொடர்கின்றது காட்டு யானையின் அட்டகாசம்

மூதூர், ஜூன் 6
திருகோணமலை கிண்ணியா, ஆயிலியடியில் யானை வேலி அமைக்கப்பட்டும் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்கின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர்.



செவ்வாய்க்கிழமை ஆயிலியடியில் உள்ள ஒருவரின் காணிக்குள் புகுந்த யானை வீடு மற்றும் பயிர்களைத் துவம்சம் செய்துள்ளது.

இந்தப் பகுதியில் யானை வேலியமைத்தும் கூட மீண்டும் யானையின் அட்டகாசத்தை அடக்க முடியவில்லை. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. புனித றமழான் மாதத்தில் மதக்கடமை களை நிறைவேற்றுவதிலும் அச்சநிலை காணப்படுகின்றது என கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர். யானைவேலியை முறையாக அமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த காலங்களில் இந்தப் பகுதியில் இருவர் யானையின் தாக்குதலினால் உயிரிழந்தனர். (ற-ய-40)

# பிளாஸ்ரிக் கலந்த அரிசி இலங்கையில் இல்லை

## வர்த்தக, கைத்தொழில் அமைச்சும் சதொச நிறுவனமும் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 6
இலங்கையில் பிளாஸ்டிக் அரிசி விற்பனை செய்யப்படுகின்றது என்று வெளியான தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்று வர்த்தக, கைத்தொழில் அமைச்சும், சதொச நிறுவனமும் தெரிவித்துள்ளன.

இலங்கையில் பிளாஸ்டிக் அரிசி விற்கப்படுகின்றது என்றும், பாகிஸ்தானில் இருந்து சதொச நிறுவனம் பிளாஸ்ரிக் அரிசி கலந்த பாஸ்மதி அரியை இறக்குமதி செய்துள்ளது என்றும் சமூக வலைத் தளங்களிலும், இணையத்தளங்களிலும் தகவல்கள் வெளியாகி இருந்தன. அந்தத் தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்று தெரிவித்துள்ள வர்த்தக, கைத்தொழில் அமைச்சும், சதொச நிறுவனமும் உரிய பரிசோதனைகளின் பின்னரே பாகிஸ்தானில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறான தகவல்கள் பரவியதை அடுத்து அரிசி மீண்டும் ஒருமுறை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அரிசியில் எந்த பிளாஸ்ரிக் கலவையும் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சதொச நிறுவனம் கூறியது.

பாகிஸ்தான் பாஸ்மதி அரிசியைப் பொதுமக்கள் அச்சமின்றிப் பயன்படுத்தலாம் என்று வர்த்தக, கைத்தொழில் அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. (ற - 5)

## நீந்திக் கடந்த நெருப்பாறு ஆவணப் பதிவு வெளியீடு




யாழ்ப்பாணம், ஜூன் 6
தமிழர் தேசத்தின் மூத்த படைப்பாளி நா.யோகேந்திரநாதன் எழுதிய "பூநகரியில் இருந்து புதுமாத்தளன் வரை என்ற நீந்திக் கடந்த நெருப்பாறு" எனும் ஆவ்ணப் பதிவின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு கிளிநொச்சி, கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் கிளிநொச்சி மாவட்ட செயலர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண விவசாய கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்ள உள்ளனர்.

விடுதலை என்ற உன்னத இலட்சியத்தை அடைய நெருப்பாற்றை நீந்திய எமது மக்களின் வீரமும், தியாகமும் ஒளிவிடும் இலக்கியப்படைப்பாக இந்த நூல் வெளிவருகின்றது.

வெளியீட்டு விழாவுக்கு படைப்பாளிகள், தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், முன்னாள் போராளிகள் பல்துறைசார்ந்த அனைவரையும் ஏற்பாட்டாளர்கள் அழைத்துள்ளனர். (ற)

## முதிரை மரக் குற்றிகள் கடத்தியவர் கைது

கிளிநொச்சி, ஜூன் 6
சுமார் 5 லட்சம் பெறுமதியான முதிரை மரக் குற்றிகளை கடத்தி சென்ற வாகனம் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் விசேட பிரிவினர் தெரிவித்தனர்

கடந்த சனிக்கிழமை அதிகாலைப் பொழுதில் புதுக்குடியிருப்பில் இருந்து தருமபுரம் நோக்கிப் பயணித்த வாகனமே கைப்பற்றப்பட்டது. மேலதிக நடவடிக்கைகளுக்காக சாரதி தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிக்கன்னவின் சிறப்பு பிரிவினர் தெரிவித்தனர். (ற - 6)

## பாடசாலைக்கு முன்பாக கஞ்சாவுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, ஜூன் 6
மட்டக்களப்பு ஓட்டமாவடியில் பிரபல தேசிய பாடசாலைக்ருகில் கேரளக் கஞ்சாவுடன் நடமாடிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.



தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சனிக்கிழமை இரவு பாடசாலைச் சுற்றாடலை நோட்டமிட்ட பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் அங்கு சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய ஒருவரைக் கைதுசெய்தனர். அவரிடமிருந்து 29 சிறுபொதிகளாக அடைக்கப்பட்ட ஏழுபதாயிரம் மில்லி கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற -ய.46)

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பால் கள் உற்பத்தியாளர்கள் பாதிப்பு

கிளிநொச்சி, ஜூன் 6
கசிப்பு விற்பனையாளர்களால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று கிளிநொச்சி பனை, தென்னை வள தொழிலாளர்கள் கவலை தெரிவித்தனர்.

கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்குட்பட்ட கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசங்களில் முப்பது, கள் விற்பனை நிலையங்கள் சட்டரீதியான அனுமதிகளோடு இயங்குகின்றன. அவை மூலம் 650க்கும் மேற்பட்ட பனை தென்னை வள தொழிலாளர்கள் பயன் பெறுகின்றனர். கள்ளை குறித்த நிலையங்களில் வழங்குவதால் கிடைக்கும் வருமானத்தையே அவர்கள் நம்பியுள்ளனர்.

"நாம் நாற்பது அல்லது ஐம்பது அடி உயரமான மரங்களில் ஏறி மிகவும் அபாயகரமான நிலையில் தொழிலில் ஈடுபட்டுவரும் நிலையில், சமூகத்துக்கு தீங்கு விளைவிக்கும் கசிப்பு விற்பனையாளர்களால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு குடும்பங்கள் வறுமைக்கு தள்ளப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது" - என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.

"கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அதிகரித்துக் காணப்படும் கசிப்பு மற்றும் கஞ்சா விற்பனையால் பனை, தென்னை வள தொழிலாளர்கள் என்றுமில்லாதவாறு பெரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அதுமட்டுமல்ல கள் விற்பனையில் வீழ்ச்சி நிலையும் காணப்படுகிறது. சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி தொழிலாளர்கள் பாதிக்கப்படாத வகையில் செயற்றிட்டங்களை முன்னெடுத்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" - என்று கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் எஸ். துரைசிங்கம் தெரிவித்தார். (ற -10)

இடரால் பாதிக்கப்பட்ட பத்தேகம மக்களுக்கு

## ரெலோ, சிவன் அறக்கட்டளை இணைந்து உதவி



மன்னார், ஜூன் 6
காலி, பத்தேகமவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), சிவன் அறக்கட்டளை என்பன இணைந்து பல்வேறு உதவிகளை வழங்கின.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை வடக்கில் இருந்து சென்ற குழுவினரும், சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் மாணவர்களும் இணைந்து உதவிகளையும், சிரமதானப் பணிகளையும் மேற்கொண்டனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ரெலோவின் கொள்கைப் பரப்புச் செயலாளரும், சிவன் பவுன்டேசன் நிறுவுனருமான கணேஸ் வேலாயுதம், வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஆகியோரும் அங்கு சென்றிருந்தனர். இவர்களுடன் இணைந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தென் மாகாண சபை உறுப்பினருமான பத்தேகம சுமித்திர தேரரும் சிரமதானப் பணிகளை மேற்கொண்டார்.

பத்தேகம பகுதியில் வெள்ளத்தால் பல வீடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் இரு வீடுகளுக்கு மாத்திரமே தற்காலிகக் கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தென் மாகாணத்தில் தமிழ் நாடாளுமன்ற பிரதி நிதித்துவம் இன்மையால் தாங்கள் தொடர்ச்சியாக கல்வி மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளில் புறக்கணி க்கப்பட்டு வருகின்றோம் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் உரியவர்களை தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்தப் பகுதி மக்களுக்குத் தொடர்ச்சியான உதவிகளை வழங்குவதற்கு உதவி செய்யப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உறுதியளித்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் பத்தேகம சுமித்திர தேரரிடம் சிவன் அறக்கட்டளையின் சார்பில் 3 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. (ற - 10, 56)



# ஞானசார தேரர் சிகிச்சை பெற்ற மூன்று இடங்களில் சோதனை



கொழும்பு, ஜூன் 6
பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செய லாளர் கலகொட அத்தே ஞானசார தேரர். சிகிச்சை பெற்றதாகக் கூறப்படும் மூன்று இடங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

உடல் நலக் குறைவால் நீதிமன்றில் முன்னி லையாக முடியவில்லை என்று ஞானசார தேரர் சார்பில் அவரது தரப்புச் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தை அடுத்தே, இந்தச் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இன வாதத்தைத் தூண்டும் வகையில் செயற்ப டும் ஞானசாரரை நீதிமன்றில் முன்னி லை யாகுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. அத னோடு அவரைக் கைதுசெய்யும் நடவடிக் கைகளில் சிறப்புப் பொலிஸ் குழுக்க ளும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

சிகிச்சை பெற்றதாகக் கூறப்படும் இடங்களில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது, அங்கு ஞானசாரர் இருக்கவில்லை யென பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

ஞானசாரரைக் கைது செய்யப் பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தாலும், அவ ரது கைதை உயர்மட்ட அரசியல் சக்திகள் தடுத்து வருவதாகச் செய்திகள் வெளியாகியி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ - 10)

# சட்டத்துக்கு முரணான கட்டடங்கள்; உரிமையாளர்கள் மீது வழக்கு

கொழும்பு, ஜூன் 6
சட்டத்துக்கு முரணாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களின் உரிமையாளர்களுக்கு எதி ராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று நகர அபிவிருத்தி அமைச்சு தெரிவித் துள்ளது.

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுக்கு, சட்டத்துக்கு முர ணாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களே பெரிதும் காரணமெனச் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

நீர் வழிந்தோடும் கால்வாய்களை மறித்து, சட்டத்துக்கு முரணான முறையில் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்படு கிறது. இந்த நிலையில் அவ்வாறான கட்ட டங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. இது தொடர்பாக நேற்று, திங்கட்கிழமை முதல் ஆராய்ந்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிரா கக் குற்றப்பத்தி ரிகை தாக்கல் செய்யப்பட வுள்ளது.

கொழும்பில் மாத்திரம் சுமார் 10 ஆயிரம் சட் டத்துக்கு முரணான கட்டடங்கள் அங்கீகாரம் பெறாமல் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறான கட்டடங்கள் தொடர்பில் எதிர்வரும் மூன்று மாதங்களில் ஆளில்லா வானூர்திகள் மூலம் கண்காணித்து, மதிப்பீடொன்றை மேற் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 10)

# அமைச்சரின் தந்தைக்கும் காணிப் பிரச்சினை

கொழும்பு, ஜூன் 6
காணி அமைச்சின் நடமாடும் சேவையில், காணி ராஜாங்க அமைச்சரின் தந்தையார் கலந்து கொண்டு தனது காணிப் பிரச்சினை தொடர்பான முறைப் பாட்டை முன்வைத்தார்.

யப்பஹூவ தேர்தல் தொகுதியில் மக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான நடமா டும் சேவை ஒன்று காணி ராஜாங்க அமைச்சர் ரீ.பி. ஏக்க நாயக்கவின் தலைமையில் பொல்பித்திகமப் பிரதேச செயல கத்தில் அண்மையில் நடைபெற் றது.

இந்த நடமாடும் சேவையில் மக் களின் காணிப் பிரச்சினைக ளுக்குத் தீர்வு காணப்பட்டது. இந்த நடமாடும் சேவைக்கு வருகை தந்த அமைச்சரின் தந்தை, தனது காணிப்பிரச் சினை தொடர்பாகவும் முறைப் பாடு முன் வைத்தார்.

குறித்த அமைச்சரின் தந்தை, வீட்டில் அமைச்சரான மகனிடம் எதனையும் கோராது , உத்தி யோகபூர்வமாக நடமாடும் சேவையில் கோரிக்கை விடுத் தமை பலரது பாராட்டைப் பெறும் வகையில் அமைந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 10)


## சேவை
வெளிநாடுகளில் புலம்பெயர்நத மக்களுக்கான நிரந்தர வதிவிட சிபாரிசு கடிதம் இலவசமாக வழங்கப்படும்.
அருட்திரு. G. குமார் - 077 0286 050

## மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1974 ஆம் ஆண்டு, உத்தரட்டாதி 2ஆம் பாதம், மீன நட்சத்திரம் உடைய லண்டன் PR உள்ள மணமகனுக்கு மணமகள் அவசரமாகத் தேவை. (A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது)
076 839 2101

## கடை வாடகைக்கு உண்டு
இரண்டு பெரிய அளவிலான கடை வாடகைக்கு உண்டு. கடைக்குத் தனிப்பட்ட கார்ப் பாக் வசதிகள் உண்டு.
076 785 1067

## வீடு வாடகைக்கு
இல.10A, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தில் (சிறுவர் நீதிமன்றத்துக்கு முன்னால்) உள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.
021 222 9542, 076 641 0948

## டிஸ் dish ANTENNA SYSTEMS அண்டெனா சிஸ்டம்
தங்கு தடையின்றி உங்கள் அபிமான டிவி சானல்களைக் கண்டுகளிக்கக்கூடிய டிஸ் அண்டெனா சிஸ்டம் குறைந்த விலையில் துல்லியமான ஆடியோ வீடியோ குவாலிட்டி மற்றும் SD/ HD தொழில்நுட்பத்துடன் கிடைக்கும்

Full System 4500 தொடக்கம்
Rs 350 தொடக்கம் மாதாந்திர செலவில்
SATSTECH ENGINEERS
NO.300 K.K.S ROAD JAFFNA PHONE 0212228812 Mob 071 0986224

## பாராட்டி வாழ்த்துகிறோம்
எமது பாடசாலை ஆசிரியர்களான


சிவலிங்கம் சிவதாசன்
(Na-Dip in tech, B.A (Hons), PGDE, M.Ed)


திருமதி வ.சோமசேகரம்
(Sp.Trained Sc.B.A.PGDE (merit), M.Ed(2nd upper)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இவ்வருடம் நடைபெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில் எமது வித்தியாலய ஆசிரியர்கள் கல்வி முதுமாணி பட்டம் பெற்றமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகிறோம். அத்துடன் சிவலிங்கம் சிவதாசன் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராக பதவி உயர்வு பெற்றுச், செல்வதனையும் வாழ்த்தி நிற்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரி சங்கம் - யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்.


## மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சிக்கான உலர் உணவு விநியோகம் - 2017 /2018

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த கேள்விதாரர்களை 01.08.2017 தொடக்கம் 31.07.2018 வரையான காலப்பகுதிக்கு பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு விநியோகஸ்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ.இல | பெறுகை இல | கேள்விகள் | உத்தரவாத வைப்பு பணம் |
|---|---|---|---|
| 01 | DGH KOC/ D/2017 /01 | உலர் உணவு விநியோகம் | 100,000.00 |

1. விலைக்கேள்விதாரர்கள் உலர் உணவு விநியோகத்திற்கேற்ற வகையிலான வியாபார பதிவினை யுடையவராக இருத்தல் வேண்டும்.
2. அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்
3. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,000.00 வினைச் செலுத்திப் பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 07.06.2017 தொடக்கம் 27.06.2017 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
4. ஒவ்வொரு வழங்கல்கள் / சேவைகள் என்பவற்றுக்கான மீளளிக்கப்படும் வைப்புத் தொகைக்குரிய வங்கி உத்தரவாதப் பத்திரத்தினை (BID BOND ) சமர்ப்பித்தல் வேண்டும்.
5. விலைக்கேள்விகள் 28.06.2017ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக இவ் மாவட்ட வைத்தியசாலையின் கணக்கு கிளையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்பட வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்விநேர முடிவில் (மு.ப 10.30 மணிக்கு) விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.
6. தகுதிவாய்ந்த நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களையும், நடைமுறைகள் தொடர்பான படிவத்தினையும், விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல 0212285329 ) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
7. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

Dr. மைதிலி சிவானந்தன்
தலைவர் பெறுகைகள் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி.

(C/29131)(11)


Galaxy Star
வெற்றி வாரம் 165 திகதி 04.06.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
06 03,29,38,55
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,000,000/-

## காணவில்லை
சுழிபுரம் கிழக்கு சுழிபுரத்தைச் சேர்ந்த **மனோரஞ்சன் சஜீந்தன் (சயந்தன் ) 16.05.2017 ஆம் திகதி இரவு 9** மணியிலிருந்து காணவில்லை. இவர் அன்று **கறுப்புநிற முழுக்காற்சட்டையும் நீலக்கலர் சேட்டும்** அணிந்திருந்தார். தலைமுடி கறுப்பு நிறம். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


077 597 8714, 077 387 2218



# இனியும் அரசை நம்பாது
# தமிழரின் இரு குழல் துப்பாக்கியாக சம்பந்தன், விக்கி மாற வேண்டும்

## சிவாஜிலிங்கம் அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜூன் 6
இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இனி மேலும் அரசை நம்பி இருக்கக் கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவும், வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவும் எங்களுடைய இனத்தின் இரட்டைக் குழல் துப்பாக்கிகளாக மாற வேண்டும்.
இவ்வாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.
இலங்கைத் தமிழர் வரலாற்றில் காலிமுகத்திடலில் மேற்கொண்ட சத்தியாக்கிரகப் போராட்டம் மற்றும் முதல் போராளி பொன்.சிவகுமாரனின் நினைவு தினம் என்பன யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டன.
சத்தியாக்கிரகப் போராட்ட நினைவு நிகழ்வுகள் தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளைத் தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது. தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.
அதைத் தொடர்ந்து உரும்பிராயிலே அமைந்துள்ள பொன். சிவகுமாரனின் திருவுருவச் சிலை அமைந்துள்ள இடத்தில் அவரது 43 ஆம் ஆண்டு நினைவு கடைப்பிடிக்கப்பட்டது. சிவகுமாரனின் சகோதரி உள்ளிட்ட பெருமளவானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். நினைவுரைகளையும் நிகழ்த்தினர். அதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உரையாற்றினார்.
அவர் தெரிவித்ததாவது;
எமது இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு இனிமேலும் அரசை நம்பியிருக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவும், வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவும் எங்களுடைய இனத்தின் இரட்டைக் குழல் துப்பாக்கிகளாக மாற வேண்டும். எங்களுடைய இனம் விடுதலை பெறுவதற்கு எமது பேதங்களைக் கைவிட வேண்டும். தமிழினத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மாணவர் சமுதாயத்திலிருந்து உருவாகியதொரு விடுதலை உணர்வாளர்தான் பொன்.சிவகுமாரன். அன்று தலைமை அமைச்சராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவால் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தலுக்கெதிராக எழுச்சி கொண்ட மாணவர் சமுதாயத்தால் உருவாக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையின் முக்கிய தலைவராக அவரே விளங்கினார். இலங்கை அரசுடன் அகிம்சை வழியில் போராட முடியாது. ஆயுத வழியில் தான் போராட முடியும். என்றார்.



நினைவு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சோ.சேனாதிராசா, த.சித்தார்த்தன், வட மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மற்றும் வட மாகாண உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அ.பரஞ்சோதி, பா.கஜதீபன், திருமதி அனந்தி சசிதரன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-5,101,106)

# மனைவி தாக்கியதில் கணவர் கவலைக்கிடம்

பதுளை, ஜூன் 6
மனைவியின் தாக்குதலுக்கு இலக்கான நபரொருவர் ஆபத்தான நிலையில் பதுளை அரசினர் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
இதுகுறித்து தெரியவருவதாவது.
கணவனுக்கும் மனைவிக்குமிடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு மோதலாக மாறியுள்ளது. அதில் மனைவி பொல்லொன்றால் கணவனை பலமாகத் தாக்கியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிபிலையில் இடம்பெற்றுள்ளது.
தாக்குதலில் பலத்த காயங்களுக்குள்ளான கணவன், பிபிலை அரசினர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு ஆரம்ப சிகிச்சைகள் அளிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பதுளைக்கு மாற்றப்பட்டார்.
இவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மனைவியைக் கைது செய்துள்ளனர்.
(ந-ய-41)

# வினைத்திறன் மிக்கதான ஆட்சியை வழங்க வேண்டியது முதலமைச்சரே

## முன்னாள் எம்.பி. சுரேஸ் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 6
முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கையின் பின்பு சரியான முடிவுகளின் ஊடாக எதிர்வரும் காலத்திலாவது வினைத்திறன் மிக்க திறமையான ஆட்சியை வழங்க வேண்டிய பொறுப்பு முதலமைச்சருக்கே உண்டு.
இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.
வட மாகாண அமைச்சர்கள் தொடர்பாக குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது;
குற்றம் புரிந்தனர் என்று கூறப்படும் விடயம் நீண்டகாலமாக கூறப்பட்டது. வடக்கு மாகாணம் ஊழல் அற்ற ஓர் திறமையான மாகாணமாக இருக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும்.



அமைச்சர்களை மாற்றும் அதிகாரம் முதலமைச்சருக்கு உண்டு. வினைத்திறன் மிக்கதும் ஊழல் அற்றதுமான ஆட்சியை முன்னெடுப்பதும் முதலமைச்சரின் கடமையே. இவ்வாறான அறிக்கையின் பின்பும் சரியான முடிவுகளின் ஊடாக எதிர்வரும் காலத்திலாவது வினைத்திறன் மிக்க திறமையான ஆட்சியை வழங்க வேண்டிய பொறுப்பு முதலமைச்சருக்கே உண்டு.
மாகாண சபையின் எஞ்சியிருக்கும் ஒரு வருடத்திலாவது சரியான நிர்வாகம் இடம்பெற முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (ந-101)

# திருமலையில் மீண்டும் டெங்கு தொற்று தீவிரம்

திருமலை, ஜூன் 6
ஜூன் முதலாம் திகதி முதல் நேற்று 5ஆம் திகதி வரையான காலப்பகுதியில் டெங்குத் தொற்றுக்குள்ளான சுமார் 18 பேர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று என திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் அனுசியா ராஜ்மோகன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
மாவட்டத்தில் மீண்டும் டெங்குத் தொற்று தீவிரம் பெறுவதால் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பாலையூற்று, செல்வநாயகபுரம், ஆண்டாங்குளம், வில்கம பகுதிகளிலும், குச்சவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிக்குட்பட்ட நிலாவெளி, இக்பால் நகர் பகுதியிலும், கந்தளாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிக்குட்பட்ட பாதியகம பகுதியிலும் டெங்குத் தொற்றுக்குள்ளான அதிகமானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் மிகவும் அவதானத்துடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும். - என்றார். (ந-ய-45)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 07.05.2017 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவி
திருமதி சிவமணிதேவி யோகசிங்கம்
அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் இன்று (06.06.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாணமண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(Cs/ 4701) (14)
" சீதேவி இல்லம் "
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி

" தெல்லிப்பழை " பிரதேச செயலகத்தில்
கிராமசேவகராக கடமையாற்றும்
திரு.சி.அனுரதன் (J/245 வசாவிளான் மேற்கு)
அவர்களின் அன்புத் தந்தையார்
கதிரன் சின்னராசா
அவர்களின் மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த் துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரதேச செயலாளரும்
நலன்புரிசங்க அங்கத்தவர்கள் அனைவரும்.
நலன்புரிசங்கம்
பிரதேசசெயலகம், தெல்லிப்பழை.

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் திறன் அபிவிருத்தி
உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு. தெ.கீதாம்பரன்
அவர்களின் அன்புத் தந்தை
பொன்னம்பலம் தெட்சணாமூர்த்தி
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
நல்லூர் பிரதேச செயலக
உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்.

# வேலை தேடும் பட்டதாரிகளின் போராட்டம் 100 நாளை எட்டியது

## இன்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாண மாவட்ட வேலை தேடும் பட்டதாரிகளின் போராட்டம் இன்று 100ஆவது நாளை எட்டியது. அதைத் துக்க தினமாக கருதி கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று போராட்டத்தில் ஈடுபடும் பட்டதாரிகள் தெரிவித்தனர்.

அரச வேலை கோரியும்,தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்தில் முறையான கொள்கைகளை பின்பற்றக் கோரியும் கடந்த 99 நாள்களாக யாழப்பாண மாவட்டச் செயலகம் முன்பாக காலவரையற்ற கவனவீர்ப்பு போராட்டத்தில் வேலை தேடும் பட்டதாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் தெரிவித்ததாவது

எமக்கான கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என பாசாங்கு காட்டுகின்றார்கள். தற்போது ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அரசு தரப்பு கூறியிருந்தாலும். எம்மோடு 3 ஆயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகள் உள்ளனர். அவர்களுக்கான முடிவு என்ன என்பது எமக்கு இன்னமும் தெரியவில்லை. வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் ஒன்றிணைந்து எமது போராட்டத்தின் 100ஆவது நிறைவு நாளை துக்க தினமாக கடைப்பிடிக்கவுள்ளோம். எமது விவரங்கள் மற்றும் கோரிக்கை அடங்கிய மனு ஒன்றையும் முக்கியமான அரச பிரதிநிதிகளுக்கு சமர்ப்பிக்கவுள்ளோம் - என்றனர். (ற-ரி)

# நிலச் சரிவு அபாயம் நிலவுவதால் 4 கிராம மக்கள் வெளியேற முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 6

களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள பிரதேசத்திலுள்ள நான்கு கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 560 குடும்பங்கள் அங்கிருந்து வெளியேற முடிவு செய்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் புளத்சிங்கள பாஹியங்கல மலையின் ஒரு பகுதி சரிந்ததால் அங்கிருந்து வெளியேறிய மக்கள் அதன் அண்மையிலுள்ள நான்கு கிராமங்களில் தற்காலிகமாக குடியேறினர். அந்தக் கிராமங்களைச் சூழவுள்ள மேலும் 12 மலைகளில் வெடிப்புகள் ஏற்பட்டிருப்பதால் அவர்கள் அந்தப் பிரதேசத்தை விட்டே வெளியேறிவிடத் தீர்மானித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

அண்மையில் பாஹியங்கல மலையின் இடதுபக்கம் சரிந்து விழுந்ததில் ஜயலத்கொட எனும் கிராமம் முற்றாக மண்ணில் புதையுண்டது. சுமார் 30 அடி உயரமான மண்ணில் புதையுண்ட ஐந்து வீடுகளில் வசித்த 22 பேரின் சடலங்கள் இன்னும் மீட்கப்படவில்லை.

இராணுவத்தினரும் நிவாரணப் படையினரும் தற்போது மீட்பு நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளனர்.

அந்தப் பிரதேசத்திலுள்ள மேலும் 12 மலைகள் எந்நேரமும் சரியக்கூடிய அபாயம் நிலவுவதால் அங்குள்ள நான்கு கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 560 குடும்பங்களும் அப்பிரதேசத்தை விட்டு நிரந்தரமாகவே வெளியேற முடிவு செய்துள்ளனர் என்று தெரிய வருகின்றது. (ற-5)

# மகள் மீது வன்கொடுமை சந்தேக நபருக்குப் பிணை

யாழ்ப்பாணம்.ஜூன்.6

மகளை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கினார் என்ற சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இந்த வழக்கு விசாரணைகளுக்காக நேற்று யாழ்ப்பாணம் மேல் நீதி மன்றுக்கு முதல்முறையாகப் பாரப்படுத்தப்பட்டது. சந்தேக நபர் 25ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல மேல் நீதி மன்று அனுமதித்ததுடன், கைவிரல் அடையாளத்தை இட்டுச் செல்லுமாறும் பணித்தது. முதலாம், 2ஆம் சாட்சிகளுக்கு அழைப்பாணை விடுத்து வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

**பின்னணி**

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் 16 வயதுக்குட்பட்ட தனது மகளை வன்கொடுமைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் தந்தை ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்பு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். எட்டு வருடங்களின் பின்பு இந்த வழக்குடன் தொடர்புடைய குற்றப்பகர்வுப் பத்திரம் சட்டமா அதிபரால் யாழ்ப்பாணம் மேல் மன்றுக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது. (ற-12)

# அரச காணிகள் முறையாக பயன்படுத்தப்பட வேண்டும்

## கிழக்கு பிரதிப் பிரதம செயலாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 6

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மருதமுனை மக்களின் பொதுத் தேவைகளுக்காக வழங்கப்பட்ட அரச காணிகள் பொதுத் தேவைகளுக்கு முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் தெரிவித்தார்.

மருதமுனை கல்வி மற்றும் சமூக வலுவூட்டலுக்கான ஒத்துழைப்பு அமையத்தின் தலைவரும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பதிவாளருமான எம்.எப்.ஹிப்பதுல் கரீம் தலைமையில் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் ஒன்றுகூடல் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2004 ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலைக்குப் பின்னர் அரசால் சுவீகரிக்கப்பட்ட பொதுக்காணிகள் 33 ஏக்கர் ஆகும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டம் அமைப்பதற்காக 10 ஏக்கர் நிலப்பரப்பு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிலையில் மீதமாக உள்ள 23 ஏக்கர் நிலப்பரப்பையும் எதிர்கால சந்ததிகளின் தேவைகளுக்கு முறையாக திட்டமிடப்பட்ட ஒழுங்கில் பயன்படுத்த வேண்டும்.

எதிர்காலத்தில் அரச பொது நிறுவனங்கள் எமது பிரதேசத்தில் அமைக்கப்பட வேண்டுமானால் பொதுக் காணிகளின் தேவை அவசியமாகும். வீணான முறையில் அரச பொதுக் காணிகள் துண்டாடப்படுவது தடுக்கப்பட வேண்டும். - என்றார். (ற-ய-46)

# இடர் பாதித்த வீதிகளை திருத்த ரூ.8 பில். செலவு

யாழ்ப்பாணம், ஜூன் 6

இயற்கை இடரால் பாதிக்கப்பட்டுள்ள வீதிகளைத் திருத்துவதற்கு சுமார் 8 பில்லியன் ரூபா வரை செலவாகும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபை மதிப்பீடு செய்துள்ளது.

இந்த மதிப்பீட்டில் சேதமடைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வீதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஏனைய நடுத்தர மற்றும் சிறு வீதிகளும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன என்று அந்தச் சபையின் தலைவர் என்.ஆர். சூரியாராச்சி தெரிவித்திருக்கிறார்.

அவசரத் தேவைகளுள்ள பகுதிகளை இனங்காணும் பொறுப்பு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களின் ஆலோசனைப்படி அந்தப் பகுதிகளில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார். (ற-5)

# விகாரையை உடைத்து திருடிய மாணவர் கைது

பதுளை, ஜூன் 6

பதுளை வெலிமடைப் பகுதியில் விகாரையொன்று உடைக்கப்பட்டு லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டமை தொடர்பில் பிரிவெனாவில் அறநெறிக் கல்வி பயிலும் மாணவர்கள் இருவரை போகாகும்பர பொலிஸார் நேற்றுமுன்தினம் சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளனர்.

போகாகும்பர ஸ்ரீசுதர்சனாராமய என்ற விகாரை அண்மையில் உடைக்கப்பட்டு அங்கிருந்த இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான பல பொருள்கள்திருடப்பட்டிருந்தன. இதுகுறித்து, விகாரை தலைமைப்பிக்கு போகாகும்பரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளையடுத்து, விகாரையில் பௌத்த மத கல்விபயிலும் 16 வயதுடைய இரு மாணவர்கள் ஙகைது செய்யப்பட்டனர்.

விகாரை உடைமைகள் மாணவர்களின் உறவினர் வீடுகளிலிருந்து மீட்கப்பட்டன. பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ய-41)


## மரண அறிவித்தல்



### திருமதி ரதிதேவி நடராசா

நாவலப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் இளவாலை மாரீசன்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரதிதேவி நடராசா நேற்று (05.06.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் மனைவியும் ஜெயரூபராணி, ரஜனி, சுரேஸ் ஆகியோரின் தாயாரும் ஜெயக்குமார், கோகுலதாசன் ஆகியோரின் மாமியும் அருள்ராசாவின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2017) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக மட்டிவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

மாரீசன் கூடல்,
இளவாலை.

## மரணஅறிவித்தல்

### ஐயாத்துரை சந்திரராஜா

(ஓய்வு பெற்ற ஆசிரியர் பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயம், துர்க்காஜோதிட நிலைய ஸ்தாபகர், அகில இலங்கை சமாதான நீதிவான்களின் மனித உரிமை அமைப்பின் இணைப்பாளர் நுவரெலியா மாவட்டம்)



மலர்வு : 01.05.1945
உதிர்வு : 03.06.2017

யாழ்ப்பாணம் நவாலியூரைப் பிறப்பிடமாகவும் இணுவில், பூண்டுலோயா, வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி ஐயாத்துரை - இராசம்மா தம்பதிகளின் புதல்வனும் சந்திரராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர் பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயம், துர்க்கா ஜோதிட நிலைய ஸ்தாபகர் , அகில இலங்கை சமாதான நீதிவான்களின் மனித உரிமை அமைப்பின் இணைப்பாளர் நுவரெலியா மாவட்டம்) 03.06.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் பராசக்தி தம்பதிகளின் அன்பு மருமகனும் சுமந்திராதேவியின் அன்புக் கணவரும் சுபேஷ்வரன்(ஆசிரியர் கொழும்பு முகத்துவாரம் இந்துக் கல்லூரி), சுபநீதன்(சுவிற்ஸர்சலாந்து), குமரகுருபரன்(துர்க்கா ஜோதிட நிலையம் பூண்டுலோயா), அபிராமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரசாந்தி (வத்தளை), சிவரூபி(சுவிற்ஸர்லாந்து), தட்ஷாயினி(கொழும்பு), தயாபரன் (Jaffna stores - மஸ்கெலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் இராஜரட்ணம் (N.A.R & Company - இணுவில்), இரத்தினமணி(ஓய்வு பெற்ற ஆசிரியை) காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்(தபால் ஊழியர்), துர்ராஜா மற்றும் மல்லிகாதேவி(இணுவில்), மனோகரன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி, சிவபாதசுந்தரம்(இணுவில்),கமலேஸ்வரி, இந்திராதேவி, வசந்திராதேவி,'பத்மாசினி(ஓய்வு பெற்ற ஆசிரியர் - கொழும்பு கணபதி இந்து மகளிர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஆறுமுகதாஸ்(தபால் அதிபர்), திருமதி சுசிலா, சொர்ணலிங்கம்(ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற கமலநாதன்(ஓய்வூதிய முகாமையாளர்), பரஞ்சோதி, காலஞ்சென்ற சந்திரவதி, குணலக் ஷ்மி, காலஞ்சென்ற இராஜரத்தினம்(ஆசிரியர்),தர்மராஜா ஆகியோரின் மைத்துனரும் சந்தோஷ், சுஜிரா,சுமிரா, சுபினா, சஞ்ஜேஸ், ஆக்ஹாஸ், சிவீட்றா, கிறிஷிகேஷ் ஆகியோரின் பாட்டனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக் இல.77/1 ஹேக்கித்த வீதி, (ஹேக்கித்த முருகன் கோயிலுக்கு முன்பாக) வத்தளையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (06.06.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 10மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாதம்பிட்டி பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

0112936987/0777362664

## வதந்திகளை நம்பி மக்கள் அச்சமடையத் தேவையில்லை

### இடர் முகாமைத்துவ மைய நிலையம் அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 6

சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று ஹிக்கடுவவில் நேற்று பரவிய வதந்தி காரணமாக மக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான பொய்ப் பரப்புரைகளைக் கேட்டு ஏமாற வேண்டாம்.

இவ்வாறு இடர்முகாமைத்துவ மைய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடுப்பிலி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

இடர் நிலமைகள் ஏற்படின், சம்பந்தப்பட்ட தொழிநுட்ப நிறுவனங்களுடன் இணைந்து இடர் முகாமைத்துவ மைய நிலையம், மக்களுக்கு தெரியப்படுத்தும். சுனாமி எச்சரிக்கையுள்ளதாக பரவிய பொய்யான செய்தி காரணமாக ஹிக்கடுவ கடற்பகுதியைச் சேர்ந்த மக்கள் மத்தியில் நேற்றுக் காலைகுழப்பநிலைஏற்பட்டது. இதுபோன்ற பரப்புரைகள் குறித்த உண்மை நிலையை அறிய 117 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு மக்கள் தொடர்பு கொள்ளலாம். என்றார்.(ற5)

## மொத்த அரச கடன்களை குறைத்துக் காட்டி மோசடி

### சீறுகின்றார் விமல் வீரவன்ச

கொழும்பு, ஜூன் 6

நிதியமைச்சு 2016ஆம் ஆண்டுக்கான தனது அறிக்கையில் மொத்த அரச கடன்களின் தொகையை 463 பில்லியன் ரூபாவால் குறைத்துக் காட்டி மோசடி செய்துள்ளது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படி 2016ஆம் ஆண்டுக்கான அரசின் மொத்தக் கடன்கள் 9 ஆயிரத்து 864 பில்லியன் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. நிதியமைச்சு அதில் 463 பில்லியன் ரூபாவைக்குறைத்து2016ஆம் ஆண்டுக்கான மொத்தக் கடன் 9 ஆயிரத்து 401 பில்லியன் ரூபா எனக் காட்டியிருக்கிறது.

நிதியமைச்சின் இந்த அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையுடன் முரண்படுவதால் இலங்கையின் உண்மையான பொருளாதார உறுதித்தன்மை பற்றி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சந்தேகம் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மொத்த அரச கடன்களை இவ்வாறு குறைத்துக் காட்டி வெளிநாடுகளிலிருந்து மேலும் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அரசு முயற்சித்து வருவதாகத் தெரிய வருகின்றது.

இது நாட்டின் பொருளாதாரத்தை கேலிக் கூத்தாக்கும்செயற்பாடாகும். போலி அறிக்கைகளையும், பொய்யான வாக்குறுதிகளையும் வழங்குவதன் மூலம் இந்த அரசு நாட்டை அதலபாதாளத்துக்கு இட்டுச்செல்கின்றது. என்றார். (ற-5)

## வெளிநாடு செல்ல கம்மன்பிலவுக்கு நீதிமன்று அனுமதி

கொழும்பு, ஜூன் 6

ஆஸ்திரேலியக் குடிமகனுக்கு சொந்தமான நிறுவன மொன்றின் மூலமாக பங்குச்சந்தை வர்த்தகத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கும் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வெளிநாடு சென்று வருவதற்க்கான அனுமதியை கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர் ஆர். குருசிங்க நேற்று முன்தினம் வழங்கினார்.

முன்கொணர்வு மனுவொன்றின் மூலம் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

ஜூன் 12ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை லாலோனில் நடக்கும் நிகழ்வொன்றில் இலங்கை நாடாளுமன்றத்தின் சார்பில் உதய கம்மன்பில கலந்து கொள்ளவுள்ளார் எனத் தெரிவித்த அவரது சட்டத்தரணி அது தொடர்பில் நாடாளுமன்ற சபாநாயகர் வழங்கியிருந்த அத்தாட்சிக் கடிதத்தையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்தக் கோரிக்கைக்கு சட்டமா அதிபர் சார்பில் முன்னிலை யாகியிருந்த சட்டத்தரணி ஆட்சேபம் தெரிவிக்காததால் உதய கம்மன்பில வெளிநாடு சென்று வருவதற்கான தற்காலிக அனுமதி நீதிமன்றத்தால் வழங் கப்பட்டது. (ற-5)

## இடரால் பாதிக்கப்பட்டோருக்கு உளநல சிகிச்சைகள் அவசியம்

கொழும்பு, ஜூன் 6

அண்மையில் ஏற்பட்ட இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் மன விரக்திக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளனர்.

அவர்களுக்கு மன நல சிகிச்சையை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சுகாதார அமைச்சின் மனோதத்துவப் பிரிவின் பணிப்பாளரும் சிறப்பு மனோதத்துவ நிபுணருமான ரொஹான் ரத்னாயக்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

பாதிக்கப்பட்டவர்களின் மன விரக்திக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ள சிறுவர்களுக்கும் முதியவர்களுக்கும் மனநல சிகிச்சை மிகவும் அவசியம்.

இடர்களில் தங்களது பிள்ளைகளை இழந்த பெற்றோர்களும், பெற்றோர்களை இழந்த பிள்ளைகளும் மன ரீதியாக சிகிச்சை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. என்றார். (ற-5)

## பிரம்பால் விளாசி விரல் உடைத்த ஆசிரியைக்கு 14 நாள்கள் மறியல்

கொழும்பு, ஜூன் 6

வகுப்பில் முதல்நாள் கொடுத்த வீட்டுப் பாடத்தைச் செய்யாது வகுப்புக்கு வந்த மாணவனின் கைவிரல் உடையுமளவுக்கு பிரம்பால் விளாசினார் என்ற குற்றச்சாட்டில் கொழும்பு மாவட்டத்தின் பிரபல பாடசாலை ஆசிரியை ஒருவர் பொரளை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜாஎல பிரதேசத்தைச் சேர்ந்த இந்த மாணவன் ஐந்தாம் ஆண்டில் கல்வி கற்கின்றார். சம்பவதினம் வீட்டுப் பாடத்தைச் செய்யாமல் வந்தவரை இந்த ஆசிரியை பிரம்பால் கண்மூடித்தனமாக விளாசினார். மாணவனின் வலது கை விரலொன்று உடைந்துள்ளது. மாணவன் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார் என்று மாணவனின் தாயார் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகின்றது. முறைப்பாட்டுக்கு அமைய ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-5)



# வெள்ளப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடில் மீண்டும் அபாயம் வரும்

## அமைச்சர் வஜிர எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 6
வெள்ளப் பிரச்சினைகளுக்கு நிலையான ஒரு தீர்வு காணப்படாவிட்டால், இன்னும் 10 வருடங்களில் 20 ஆயிரம் உயிர் இழப்புக்களைச் சந்திக்க வேண்டிய அபாய நிலைக்கு நாடு தள்ளப்படும். முக்கிய மாகப் பிரதான கங்கைகளில் நீர் முகாமைத்துவம் செய்யும் கட்டமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேகுணவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஐக்கிய அமெரிக்காவின் நிறுவனம் ஒன்று இலங்கைக்கு 1968 ஆம் ஆண்டு வழங்கிய ஆய்வறிக்கை ஒன்றில், ஜின் கங்கை, நில்வள கங்கை, களு கங்கை ஆகிய மூன்று நதிகளுக்கும் செல்லும் நீரை நாம் முறையாகப் பாதுகாக்காத பட்சத்தில், அவற்றை அண்மித்து வாழும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அதேபோல் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 2001 ஆம் ஆண்டில் ஜின் கங்கைக்கு ஒரு அணை கட்ட வேண்டும் என்று கூறியிருந்தார். அதனை நில அபகரிப்பு என்றும் சதி முயற்சி என்றும் அரசியல் சக்திகள் எதிர்த்தன. அவர்கள் மக்களையும் தூண்டி விட்டனர். அன்று நாம் அந்தப் பாதுகாப்பான செயன்முறையை மேற்கொண்டிருந்தால் இன்று இத்தகைய அழிவு நேர்ந்திருக்காது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 2001ஆம்ஆண்டு ஜின் கங்கை பெரு அணை ஒன்றை அமைக்கும் பிரேரணையில் சீன அரசுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யத் தீர்மானித்திருந்தார்.

அந்த வகையில், 1968 இல் ஐக்கிய அமெரிக்க நிறுவன மொன்றால் விடுக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்த திட்டத்தை நிறைவேற்றியிருந்தால் வெள்ளம் ஏற்பட்டிருக்காது.

கடந்த நாள்களில் ஏற்பட்ட பெரு வெள்ளம் தொடர்பாகப் பலர் பலவித கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். நாம் முதலில் வெள்ளத்தைப் பற்றியே சிந்திக்க வேண்டும். பராக்கிரமபாகு கூறியதைப் போன்று பூமியில் விழும் ஒவ்வொரு நீர்த்துளி நீரும் வீண்போகாமல் நீர்பாசனத்துக்குச் சென்றிருக்குமானால், இன்று இப்படியானதொரு அழிவு ஏற்பட்டிருக்காது. 2003 ஆம் ஆண்டைப் போன்றே இன்னும் இரண்டு மாதங்களில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால், இடருக்கு உட்பட்ட பகுதிகளையும் மக்கள் வாழ்க்கையையும் விரைவாகச் சீராக்க முடியும். அரச நிறுவ னங்களான இடர் முகாமைத்துவ அமைச்சு உள்நாட்டு அலுவல்களை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, உள்ளிட்டவை மிகவும் அர்பணிப்புடன் செயற்பட்டிருந்தன.

தற்போது நாம் இந்தப் பிரச்சினைகளைச் சரியாகப் புரிந்துக் கொள்ளாவிட்டால், இன்னும் 10 ஆண்டுகளில் 20 ஆயிரம் உயிர்களை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். பொறுப்புமிக்க அரசு என்ற வகையில் வெள்ளத்தை முற்றாக வழிந்தோடச் செய்ய முடியும். பொது மக்களும் அரசியல் வாதிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டால் இது சாத்தியமாகும்.

ஆய்வறிக்கையின் படி குறித்த மூன்று கங்கைகளிலும் நீர் வழிந்தோடும் பகுதிகளை அறிந்து அதன் அணைகளைக் கட்டும் பட்சத்தில் வெள்ளப் பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும். அதேபோல் காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கான மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் முடியும் - என்றார். (ஐ-10)

# படையினர், அதிகாரிகளை எவரும் விமர்சிக்காதீர்கள்

## அரச தலைவர் வேண்டுகோள்



கொழும்பு, ஜூன் 6
படையினர், அரச அதிகாரிகள் தொடர்பில் எவரும் விமர்சனக் கருத்துக்களை வெளியிட வேண்டாம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரச அதிகாரிகள் மற்றும் முப்படை அதிகாரிகள், படையினர் தொடர்பில் ஊடகங்களில் விமர்சனக் கருத்துக்களை வெளியிட வேண்டாம். நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இடர்களின்போது மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்குப் படையினரும், அரச அதிகாரிகளும் முனைப்புடன் செயற்பட்டனர். அமைச்சர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு, அவர்களை விமர்சிக் கும் கருத்துக்களைத் தெரிவிப்பதை நிறுத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-10)

# அமைச்சுக்களின் நிர்வாக நடவடிக்கைகளில் சிக்கல்

கொழும்பு, ஜூன் 6
அமைச்சுக்களின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று உயர் மட்ட அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில அமைச்சுக்களுக்கு அமைச்சின் செயலாளர்கள் நியமிக்கப்படவில்லை. அதனால் அமைச்சுக்களின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

சுகாதாரம், தொழில், ஊடகம் உள்ளிட்ட சில அமைச்சுக்களின் செயலாளர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன. அதனால் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், எதிர்காலத் திட்டங்களை வகுத்தல், அவற்றை நடைமுறைப்படுத்தல் போன்றவை தொடர்பில் பெரும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் அநேக அமைச்சுக்கள் பெயரளவுக்கு மட்டும் அமைச்சுக்களாகச் செயற்பட்டு வருகின்ற நிலைமை உருவாகியுள்ளது. அமைச்சின் செயலாளர் பதவிகளில் நிலவும் வெற்றிடங்கள் துறைசார் அமைச்சர்களுக்கும் கடும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கொழும்பு அரசியலில் நீண்ட காலமாகப் பேசப்பட்டு வந்த அமைச்சரவை மாற்றம் கடந்த மாதம் 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. கூட்டு அரசின் முதலாவது அமைச்சரவை மாற்றமாகவும் இது அமைந்தது. ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று மிக முக்கிய அமைச்சுக்கள் கைமாறப்பட்டன.

9 அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களும் மாற்றப்பட்டனர். அயலுறவுத்துறை அமைச்சராக இருந்த மங்கள சமரவீர, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சராகவும், நிதியமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க அயலுறவுத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர். பதவியற்றிருந்த திலக் மாரப்பன மீண்டும் அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதேவேளை எஸ்.பி.திசநாயக்க சமூக அபிவிருத்தி, நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமை அமைச்சராகவும், ஜோன் செனிவிரத்ன தொழில், தொழிற்சங்க உறவுகள், மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சராகவும், மகிந்த சமரசிங்க துறை முகங்கள், கப்பல்துறை அமைச்சராகவும், கயந்த கருணாதிலக காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சராகவும், அர்ஜுன ரணதுங்க பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சராகவும், சந்திம வீரக்கொடி திறன் விருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சராகவும், திலக் மாரப்பன அபிவிருத்தி ஏற்பாடுகள் அமைச்சராகவும், மகிந்த அமரவீர கடற்றொழில், கடல் வளங்கள் அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் சில அமைச்சுக்களுக்கு செயலாளர்கள் நியமிக்கப்படவில்லை. அதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)



Facebook : UTH
Twitter : UTHA

# லண்டன் தாக்குதலுக்கு ஐ.எஸ். பொறுப்பேற்றது

லண்டன், ஜூன் 6
லண்டனில் நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட இருவேறு தாக்குதல்களுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புப் பொறுப்பேற்றது.
உலகப் புகழ்பெற்ற லண்டன் மேம்பாலத்தில் சென்றுகொண்டிருந்த வாகனமொன்று தாறுமாறாக ஓடி சாலையில் சென்றுகொண்டிருந்த பயணிகள் மீது மோதியது. இதைவிட மூவர் மேம்பாலத்துக்கு அருகிலுள்ள வர்த்தக நகருக்குள் சென்று கண்ணில் பட்டவர்களைக் கத்திகளால் சரமாரியாகத் தாக்கினர். இந்தத் தாக்குதல்களில் 7 பொதுமக்கள் உயிரிழந்தனர். 48 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
இந்தத் தாக்குதல்கள் நடைபெற்று இரண்டு மணி நேரத்துக்குள் இது ஒரு தீவிரவாதத் தாக்குதல் என்று பிரிட்டன் பொலிஸார் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தாக்குதலுக்குப் பொறுப்பேற்றது.
பொலிஸார் எடுத்த அதிரடி நடவடிக்கையின் விளைவாக மூன்று ஆயுததாரிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடத்தில் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. அவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைச் சார்ந்தவர்களா என்பது தொடர்பாகப் பிரிட்டன் பொலிஸார் உறுதிப்படுத்தவில்லை. (ம)





அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத் தீ தற்போது ஓரளவு கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. உலங்குவானூர்திகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் இன்னும் சில தினங்களில் தீ முழுமையாக முடிவுக்கு வரும் என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)


# வடகொரி
# தெரிவித்

மொஸ்கோ, ஜூன் 6
வடகொரியாவின் ஆயுத ம
றும் அணுவாயுத சோதனை
கள் எமக்கு நேரடி அச்சுறுத்த
என்று கருத்துத் தெரிவித்த
ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடி
உலக நாடுகள், ஐக்கிய நாடுக
சபை ஆகியவற்றின் எதிர்ப்பை
மீறி வடகொரியா பல்வே
அணுவாயுத சோதனைகளை
நடத்தியிருந்த நிலையில் அ
நாட்டின் மீது விதித்திருந்
பொருளாதாரத் தடைகளை ஐ
கிய நாடுகள் சபை இரட்டிப்பா
கியுள்ளது. 15 நனிநபர்கள்,
நிறுவனங்களின் உலகளாவி
சொத்துக்கள் முடக்கப்பட்டு

# அமெ. தனிமைப்படும் ரவுஹானி எச்சரிக்கை

தெஹ்ரேன், ஜூன் 6
பரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியுள்ளமை அந்நாட்டைத் தனிமைப்படுத்தும் என்று ஈரான் அதிபர் ரவுஹானி எச்சரித்துள்ளார்.
புவியின் வெப்பநிலை வருடா வருடம் 0.75 வீதம் அதிகரிக்கிறது என்று கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கத்தில் எச்சரித்தது உலக வானிலை ஆய்வு மையம். இதனையடுத்து உலக வெப்பமயமாதலுக்கான பரப்புரையை பெரும் எடுப்பில் ஆரம்பித்தது பிரான்ஸ். அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ஒபாமாவும் கடும் முனைப்புடன் செயற்பட்டார். இதன்விளைவாக ஐக்கிய நாடுகள் சபையின் ஒழுங்கமைப்பில் உலகத் தலைவர்களை ஒன்றிணைத்து பிரான்ஸின் தலைநகர் பரிஸில் 2015ஆம் ஆண்டு





நவம்பர் மாதம் 30ஆம் திகதி பெரும்கூட்டம் நடத்தப்பட்டது. உலக வெப்பநிலையை 2 செல்சியஸ் குறைவடையச் செய்தல், ஆயுத மற்றும் அணுவாயுத பயன்பாடுகளைத் தவிர்த்தல், தேவையற்ற போர்ப் பயிற்சிகளைக் குறைத்தல், அமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற வரலாற்று முக்கியத்துவம் மிகுந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த ஒப்பந்தம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த வேளையில் அதிலிருந்து வெளியேறியது அமெரிக்கா.
"இந்த ஒப்பந்தத்துக்காகப் பில்லியன் கணக்கான டொலர்களை அமெரிக்கா செலவு செய்கிறது. கிடைக்கும் நன்மைகளுக்கு இது பெரும் தொகை. இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளே இதனால் பயனடைகின்றன.
எனவே ஒப்பந்தத்தில் இருந்து நாம் விலகுகிறோம்" என்று அமெரிக்கா அறிவித்தது. இதற்கு உலகத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்திருந்த நிலையில் ரவுஹானியும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
"பரிஸ் ஒப்பந்தத்திலிருந்து விலகியுள்ளது அமெரிக்கவின் பொறுப்பற்ற நடவடிக்கையைக் காட்டுகிறது. இந்த நடவடிக்கை மூலம் அந்த நாடு எதிர்காலத்தில் தனிமைப்படுத்தப்படும்" என்று ரவுஹானி மேலும் தெரிவித்தார்.
"பரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியமையால் இந்த நூற்றாண்டில் உலக வெப்பநிலை குறைவடையச் சாத்தியமில்லை. 0.3 செல்சியஸ் உயர்வடைய வாய்ப்புக்கள் உள்ளன" என்று ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மக்ரோன் – நரேந்திரமோடி அண்மையில் சந்தித்தனர்

பரிஸ், ஜூன் 6
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, பிரான்ஸ் அதிபர் இம்மானுவல் மக்ரோன் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது.



ஜேர்மனி, ஸ்பெய்ன், ரஷ்யா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்கு உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டிருந்தார் மோடி. ஏனைய நாடுகளில் தனது பயணங்களை முடித்துக் கொண்ட அவர் இறுதியாக பிரான்ஸ் அதிபர் மக்ரோனை அண்மையில் சந்தித்தார்.
இந்தச் சந்திப்பை அடுத்து, பாதுகாப்பு, அணுசக்தி, நகர்ப்புறத் திட்டம் மற்றும் ரயில்வே உள்ளிட்ட துறைகளில் இந்தியா - பிரான்ஸ் இடையே ஒப்பந்தம் கைச்சாத்தாகியது.
"இந்தியாவின் மிகமுக்கிய நட்புநாடு பிரான்ஸ். பிரான்ஸுடனான உறவை மேலும் வலுப்படுத்தவே இங்கு வந்துள்ளேன்.
இந்தியாவில் முதலீடு செய்யும் நாடுகளின் வரிசையில் பிரான்ஸ் முன்னணி நாடுகளில் ஒன்றாக உள்ளது" என மோடி தெரிவித்தார். (ம)



பாப்பரசருக்கும் கனேடிய தலைமை அமைச்சர் ஜஸ்ரினுக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது. 45 நிமிடங்கள் நீடித்த இந்தச் சந்திப்பில் உலக அமைதி, ஆயுத கலாசாரத்துக்கு எதிரான நகர்வுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

## தண்ணீருக்கும் சுவையுண்டு

வொஷிங்டன், ஜூன் 6
தண்ணீர் சுவையற்ற திரவம் என்ற வாதம் இருந்த வந்தது. தற்போது தண்ணீருக்கும் சுவை உண்டு என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
கலிபோர்னியா பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மற்றும் பேராசிரியர்கள் இணைந்து நடத்திய ஆய்விலேயே இந்தத் தகவல் வெளிப்பட்டது.
"இந்த ஆய்வை நாம் சுண்டெலிகளிடம் மேற்கொண்டோம். அப்போது பல தரப்பட்ட அதாவது இனிப்பு, உவர்ப்பு, கசப்பு, உப்பு, காரம் உள்ளிட்ட சுவைகளை வழங்கினோம். முடிவில் குடிதண்ணீர் வழங்கப்பட்டது. அதை குடித்ததும் சுண்டெலிகள் புத்துணர்வு அடைந்தன. தண்ணீரின் சுவையை அறிந்ததால்தான் அவற்றின் செயல்பாடுகள் தூண்டப்பட்டன. எனவே தண்ணீரின் சுவையை நாக்கில் உள்ள செல்களால் அறிய முடிகிறது" என்று கலிபோர்னியா பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவன பேராசிரியர் யுகி ஒகாப் தெரிவித்தார். (ம)

# பசுமையான கால்பந்து மைதானம் மலேசியாவில்

கோலாலம்பூர், ஜூன் 6
மலேசியாவில் உள்ள ஒரு பசுமையான கால்பந்து மைதானம் பற்றிய தகவல் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது. மலேசியாவின் சபா மலையின் காட்டுக்குள் இருக்கிறது கண்களைக் கவரக் கூடிய இந்தக் கால்பந்து மைதானம். நான்கு பக்கங்களிலும் இருக்கும் வேலிகளைச் சுற்றி அடர்த்தியான செடிகளும் கொடிகளும் ஆக்கிரமித்துள்ளன. கதைகளில்வரும் அற்புத உலகங்களில் இருக்கும் மைதானம் போன்ற தோற்றத்தை அளிக்கிறது. மைதானத்துக்கு அருகில் உள்ள லாங் கோன்கோன் பள்ளியின் ஆசிரியர், இந்த மைதானத்தைப் ஒளிப்படம் எடுத்து வெளியிட்டிருக்கிறார்.
"இப்படிஓர் இடத்தை எவரும் நேரில் பார்த்திருக்க முடியாது. இயற்கையின் எழிலைச் சொல்ல வார்த்தைகள் இல்லை. வெயில் காலத்தில் கூட இந்த மைதானம் குளுகுளு வென்று இருப்பதற்கு இந்தத் தாவரங்களே காரணம்" என்று அவர் பதிவிட்டார். (ம)



# ாரியாவின் சோதனைகள் அச்சுறுத்தல்; வித்தார் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின்

6 ஆயுத மற் சோதனை அச்சுறுத்தல் தெரிவித்தார் மிர் புடின். கிய நாடுகள் ன் எதிர்ப்பை பல்வேறு தனைகளை லயில் அந்த த்திருந்த டகளை ஐக் இரட்டிப்பாக் நர்கள், 4 டகளாவிய க்கப்பட்டுள்



> “ அமெரிக்கா – ரஷ்யா ஓரணியில் திரண்டிருப்பதால் இது வடகொரியாவுக்கு எதிரான நகர்வுகளை மிகவும் இலகுப்படுத்தும்

என. இந்த நடவடிக்கை வட கொரியாவுக்கு பெரும் பின்னடைவைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் வடகொரியாவுக்கு எதிராக போர்க் கொடி தூக்கியுள்ளது ரஷ்யா.

வடகொரியா விவகாரத்தில் ஆரம்பம் முதல் இருந்தே அமெரிக்கா கண்டிப்புடன் செயற்பட்டு வருகிறது. ஆனால் ரஷ்யா மௌனித்திருந்தது. தற்போது ரஷ்யாவும் வடகொரியாவுக்கு எதிர்ப்பைக் காட்டியுள்ளது. அமெரிக்கா – ரஷ்யா ஓரணியில் திரண்டிருப்பதால் இது வடகொரியாவுக்கு எதிரான நகர்வுகளை மிகவும் இலகுப்படுத்தும். (ம)



# எழுதியது எழுதியதே

லண்டன், ஜூன் 6

பிரிட்டனில் தீவிரவாதத் தாக்குதல்கள் தற்போது அடிக்கடி நிகழ்த்தப்படுகின்றன. எனினும் நாடாளுமன்றத் தேர்தல் எவ்வித மாற்றமும் இல்லாமல் ஏற்கனவே அறிவித்ததைப் போன்று நாளைமறுதினம் நடைபெறும் என்று அறிவித்தார் பிரிட்டன் தலைமை அமைச்சர் திரேசா மே.

பிரிட்டனில் கடந்த 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்றது. தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் 2020இல் முடிவடைகிறது. ஆனால், பதவிக்காலம் முடியும் முன்னரே தேர்தலை நடத்த திட்டமிட்டார் தலைமை அமைச்சர் திரேசா மே. இதன்படி, ஜூன் 8ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படுகிறது.

லண்டனில் நேற்றுமுன்தினம் அதிகாலை (இலங்கை நேரப்படி) நடந்த தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர். 48 பேர் காயமடைந்தனர். இதனால், தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டுள்ள தலைவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தேர்தல் பிற்போடப்படுமா என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இந்தநிலையில், “தேர்தல் பிற்போடப்பட வாய்ப்பில்லை. ஜனநாயக நடைமுறைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வன்முறைகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இனி பயங்கரவாத தாக்குதல்களை சகித்துக்கொள்ள முடியாது. பரப்புரைகளைத் தொடருங்கள். தேர்தலில் மாற்றமில்லை” என மே மேலும் தெரிவித்தார். (ம)

# கட்டாருடனான உறவுகளை முடிவுக்குக் கொண்டுவந்தன அரபு நாடுகள்

டோகா, ஜூன் 6

இஸ்லாமிய ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவு தெரிவிப்பதால் கட்டாருடனான தங்கள் ராஜாங்க உறவுகளைத் துண்டித்துக் கொள்வதாக சவூதி அரேபியா, பஹ்ரைன், எகிப்து, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 4 அரபு இராச்சியம் அறிவித்துள்ளன.

சவூதியின் தலைமையில் ஏமன் அரசுக்கு ஆதரவாகவும் ஹௌதி ஆயுதக் குழுவுக்கு எதிராகவும் கூட்டுப்படைகள் போரிட்டு வருகின்றன. இந்தக் கூட்டுப் படையில் கட்டாரும் உள்ளது. இதிலிருந்து மிக விரைவில் கட்டார் விடுவிக்கப்படும் என்றும் சவூதி அறிவித்தது.

ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளின் செயல்பாடுகளுக்கு ஆதரவளித்தும் நிதியுதவி செய்தும் கட்டார் தீவிரவாதத்தை வளர்த்து வருகிறது. பஹ்ரைனில் குழப்பத்தை ஏற்படுத்தவும், நாசவேலைகளை மேற்கொள்ளவும் ஈரானியக் குழுக்களுக்கு கட்டார் நிதியுதவி அளிக்கிறது என்று பஹ்ரைன் குற்றம்சாட்டியது. (ம)

# உயிருடன் அகப்பட்டார் ஜிஹாதி ஜாக்

டமஸ்கஸ், ஜூன் 6

பிரிட்டன் நாட்டில் இருந்து சென்று ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் இணைந்த முதலாவது நபரான ஜிகாதி ஜாக், குர்தீஸ் படைகளிடம் பிடிபட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஜிகாதி, கடந்த 2014ஆம் ஆண்டு சிரியாவுக்குச் சென்று ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்தார். பிரிட்டனில் இருந்து சென்று ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்த முதல் நபர் ஜிகாதியே. (இவரது பிறப்புப் பெயர் ஜாக் லெட். பின்னர் இவர் தனது பெயரை ஜிகாதி ஜாக் என மாற்றினார்)



சிரியாவில் உள்ள ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுததாரிகளின் முகாம்கள் மீது பிரிட்டன் விமானப்படை நடத்திய தாக்குதல்களுக்கு முன்னர் கண்டனம் தெரிவித்திருந்த ஜிஹாதி ஜாக், பிரிட்டன் நாட்டை நாங்கள் நாசப்படுத்தாமல் விடமாட்டோம் என அந்நாட்டின் முன்னாள் தலைமை அமைச்சர் கமரூனுக்கு எச்சரிக்கை விடுத்தார். தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ஜிகாதி, சிரியாவில் உள்ள குர்தீஸ் படைகளிடம் அகப்பட்டுள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

HYUNDAI
NEW THINKING.
NEW POSSIBILITIES.
GRAND i10
அதிக விருதுகளை வென்ற கச்சிதமான கார்
இது ஒரு தானியங்கி
ரூ. 100,000/- விலைக்கழிவு
இச் சலுகை 2017 ஜூலை 31 வரை மட்டுமே



ரூ. 3,590,000 ரூ. 3,490,000
Phantom Black Star Dust Wine Red Red Passion Golden Orange Twilight Blue Aqua Blue Sleek Silver Pure White
நாடளாவிய ரீதியிலான எமது எந்தவொரு விற்பனை முகவர் நிலையத்திலும் பரீட்சார்த்த ஓட்டம்

விநியோகஸ்தர்கள் தொடர்புகளுக்கு:
இரத்தினபுரி : 0716 779 898, 0770 440 220
மாத்தறை : 0714 298 487, 0778 460 878
காலி : 0714 773 449, 0714 773 007
அனுராதபுரம் : 0718 723 432, 0719 872 104
கம்பஹா : 0777 574 857
கண்டி : 0755 939 940
குருநாகல் : 0718 642 074
அம்பாறை : 0773 377 629
மட்டக்களப்பு : 0773 133 144

விற்பனை ஆலோசகர்கள் (கொழும்பு):
செனாலி : 0717 333 398
பர்ஸான் : 0770 447 697

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
ஹூண்டாய் லங்கா (பிரைவட்) லிமிடட் #. 1035, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல, இலங்கை | தொ.பேசி 94-112 866 866 | மின்னஞ்சல்: hyundaiauto@hyundailanka.lk

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# விதியை நோகும் தமிழர்கள்

பெரும் எதிர்பார்ப்போடு அதிகாரத்திற்கு வந்தவடக்கு மாகாண சபை இப்போது ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்காக அதன் அமைச்சர்களைப் பதவி நீக்க வேண்டும் என்கிற பரிந்துரையில் வந்து நின்றிருப்பதைப் பார்க்கையில் பரிதாபமாக இருக்கிறது. தமிழர்களின் விதியைத்தான் நொந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

மற்றெல்லா மாகாணங்களுக்கும் முன்மாதிரியாகச் செயற்படுவோம் என்கிற முழக்கத்துடன் களமிறங்கிய முன்னாள் நீதியரசர் தலைமையிலான மாகாண சபை மீது, தமிழ் மக்களுக்குப்பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. மாகாண சபைத் தேர்தல் நடந்தபோது அதுவொருசாதாரண தேர்தல் களமாக மட்டும் இருக்கவில்லை. தெற்கில் ஆட்சியில் இருந்த மகிந்தராஜபக்ச ஆட்சியுடன்பொருதும்போர்க்களமாகவே இருந்தது. அதனால் அந்தத் தேர்தல் பெரும் எதிர்பார்ப்பையும் பரபரப்பையும் கொண்டிருந்தது.

மாகாணசபைகள் அதிகாரங்கள் அற்ற வெள்ளையானைகள், அவை தமிழர்களின் அதிகாரப் பசிக்கு ஏற்ற தீனியல்ல என்பது தமிழர்கள் எல்லோருக்கும் அப்போதே தெரிந்துதான் இருந்தது. ஆனால், போரில் அடிபட்டு நொந்து நூலாகிக் கிடந்த தமிழ்ச் சமூகத்துக்கு மயிலிறகால் மருந்து தடவும் பணியையாவது மாகாண சபை செய்யவேண்டும் என் கிற வேணவாவும், நலிந்துபோனநேரமானாலும்கூட அரசியல் போரில் தெற்கிடம் தோற்றுப் போகக்கூடாது என்கிற வீறும் வடக்கு மாகாணசபை மீது மக்கள் அதிக எதிர்பார்ப்பு வைப்பதற்குக் காரணமாயிற்று.

அதிலும் முன்னாள் நீதியரசர் ஒருவரே மாகாண சபைக்குத் தலைமையேற்கிறார்என்கிறபோது, நீதியையும் நேர்மையையும் வடக்கு மாகாண சபையிடம் இருந்து மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் மாகாண சபை பதவியேற்ற சிறிது காலத்திலேயே அதன் மீதான மக்களின் நம்பிக்கையை அது தக்க வைக்கத்தவறிவிட்டது. ஆளும்தரப்புக்குள்ளேயே குழுக்களாகப் பிரிந்து நின்று கருத்து மோதலில் ஈடுபடுதல், மக்களின் நலன்களில் காட்டிய அக்கறையைவிட தமக்குச் சேர வேண்டிய வசதி வாய்ப்புகளைப் பெறுவதில் காட்டிய அக்கறை, நியதிச்சட்டங்களை உருவாக்குவதில் காட்டப்படும் காலதாமதம், அமைச்சர்கள் மீதான ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் என்று மக்களின் நம்பிக்கையைச் சிதைக்கும் வகையிலான செயல்களே மாகாண சபையில் இடம்பெறலாயின.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடந்தது திட்டமிட்ட இனப்படுகொலை என்பதுபோன்ற சில நல்ல அரசியல் தீர்மானங்களைநிறைவேற்றியதைத்தவிர, தான்வரிந்துகொண்டதைப் போன்று ஒரு முன்னுதாரணமான மாகாண சபையாக, மக்களால் போற்றப்படும் ஒரு மாகாண சபையாகச் செயற்படுவதற்கு வடக்கு மாகாண சபை தவறிவிட்டது.

இப்போது அது தவறான முன்னுதாரணமாக மாறியிருக்கும் அவலம் நிகழ்ந்துள்ளது. இது எதிர்பார்க்கப்படாத மாற்றம். அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிக்க முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட சுயாதீனக் குழு தனது அறிக்கையில் இரு அமைச்சர்கள் பதவி விலகவேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பலவற்றில் அமைச்சர்களைக் குற்றவாளிகளாகக் கண்டதன் பேரிலேயே குழு இந்தப் பரிந்துரையை வழங்கியுள்ளது.

மாகாணத்தின் மிக முக்கியனவையான கல்வி மற்றும் விவசாய அமைச்சர்களையே பதவி விலக்கவேண்டும் என்று விசாரணைக் குழு பரிந்துரைத்துள்ளது. இந்த அமைச்சுக்களை முறையே அமைச்சர் த.குருகுலராசாவும், அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் வகிக்கிறார்கள்.

இந்த எதிர்பாராத முடிவு முதலமைச்சருக்கு மேலும் தலையிடியைக் கொடுத்துள்ளது. விசாரணைக் குழுவின் பரிந்துரையைச்செயற்படுத்த முதலமைச்சர் உடனடி நடவடிக்கை எதனையும் எடுத்துள்ளார் என்பதாகத் தெரியவில்லை. விசாரணை அறிக்கையை உரிய அமைச்சர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். அமைச்சர்களைப் பதவி நீக்கியோ அல்லது பதவிநீங்குமாறோ இன்னும் உத்தரவிடவில்லை. அறிக்கை முழுமையாக இன்று மாகாணசபையில் முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் முதலமைச்சரின் நடவடிக்கைக்காக காத்திருக்கிறது முழுத் தமிழ்ச் சமூகமும்.

# அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து நாடு பிளவுபடுவதைத் தடுக்கலாம்

## அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு

[தமிழாக்கம் எம்.ஐ.முபாறக் ]

"அதிகாரம் பகிரப்படுவதன் மூலம் நாடு பிளவுபடுவதைத் தடுக்க முடியும். கொழும்பில் ஒரு வகுப்பினரிடம் குவிந்து கிடக்கும் அதிகாரங்களைப் பிரித்து அவற்றைப் பகிர்ந்தளிக்க வேண்டும். வடக்குகிழக்குக்கு மாத்திரமல்ல, மகியங்கனை, மொனராகலைக்கும் அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார். அந்த நேர்காணலின் முழு விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி**: மகிந்த ஆட்சி கவிழ்வதற்கு அவர் சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படாமைதான் காரணம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுகின்றார். இதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

**பதில்:** அதை முழுமையாக ஏற்க முடியாது. பிரதான காரணங்களுள் ஒன்றாக அதுவும் இருக்கலாம். பொருளாதார வீழ்ச்சிதான் மகிந்தவின் வீழ்ச்சிக்குக் காரணம். பொருளாதாரம் சரிந்து ஆட்சி கவிழ்வதற்கு முன் தேர்தலை நடத்தி ஆட்சியைத் தக்கவைப்பதற்கு விரும்பி இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே தேர்தலை நடத்தினார். ஆட்சியை இழந்தார். இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்கின்ற விடயத்திலும் கவனம் செலுத்தப்படவேண்டும். இந்த விடயத்தில் நாம் மெதுவாகப் பயணிக்கின்றோம் என்று கூட்டமைப்புக் கூறுகிறது. அதி வேகமாகப் பயணிக்கின்றோம் என்று தெற்கு குற்றஞ்சாட்டுகின்றது. இரண்டுக்கும் நடுவில் பொதுவான வேகத்தில் நாம் பயணிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்கின்ற விடயத்திலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.இந்த விடயத்தில் நாம் மெதுவாகப் பயணிக்கின் றோம் என்று கூட்டமைப்புக் கூறுகிறது.அதி வேகமாகப் பயணிக்கின்றோம் என்று தெற்கு குற்றஞ்சாட்டுகின்றது. இரண்டுக்கும் நடு வில் பொதுவான வேகத்தில் நாம் பயணிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் நாம் பேசிக்கொண்டு இருக்கின்றோம். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எமது ஆட்சியில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எமது ஒரே நோக்கமாகும். அது எப்படியும் நிறைவேறும்.

### சிவாஜிலிங்கத்தின் குழப்பகரமான கருத்து வெளிப்பாடுகள்

**கே:** இந்த அரசின் நல்லிணக்கச் செயற்பாடுகள் அதிகமாகி அது பிரிவினைவாதத்துக்கு இட்டுச் செல்லும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளதை நீங்கள் அவதானிக்கிறீர்களா? சிவாஜிலிங்கத்தின் கூற்று இதை உணர்த்தவில்லையா?

**ப:** சிவாஜிலிங்கம் நடத்திய நிகழ்வில் ஐந்து பேர்கூட இல்லை. மே 18ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்கு இரண்டு அர்த்தங்களைக் கொடுக்க முடியும். ஒன்று புலிகளின் மரணத்தை நினைவு கூர்ந்ததாகவும், அடுத்தது மக்களின் மரணத்தை நினைவு கூர்ந்ததாகவும் இரண்டு கோணங்களில் அதைப் பார்க்கலாம்.

இறுதிப்போரில் மக்களும் மரணித்தார்கள்தான? அவர்களை யார் கொன்றார்கள் என்பது வேறு விடயம். ஆனால், மக்கள் கொல்லப்பட்டார்கள் என்பது உண்மைதானே?

தெற்கில் 89புரட்சியின்போது மக்கள் கொல்லப்பட்டார்கள். அவர்கள் இன்றும் நினைவு கூரப்படுகின்றனர். அதுபோன்றதான நினைவுகூரலாக வடக்கு நினைவு கூரலையும் எடுத்துக் கொள்ள முடியும். அது புலிகளின் மரணத்தை அனுஷ்டிக்கும் நிகழ்வு என்று சிவாஜிலிங்கம் சொன்னாரா என்று தெரியவில்லை.

**கே:** மக்களைக் கொன்றவர்கள் படையினர் என்று அவர் கூறுகின்றாரே?





**ப:**அந்தக் குற்றச்சாட்டை சம்பந்தன் முன்வைத்தாரா?சுமந்திரன் முன்வைத்தாரா?அல்லது ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்ததா?சிவாஜிலிங்கம், ரெலோ கட்சியைச் சேர்ந்தவர்.அவரது தலைவர் சம்பந்தன் அல்ல; செல்வம் அடைக்கலநாதன்.
உண்மையில் இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சினை.சிவாஜிலிங்கம் போன்றவர்களை கூட்டமைப்புத்தான் கட்டுப்படுத்த வேண்டும்.
இவர் இதற்கு முன்பும் பல தடவைகள் இவ்வாறு கூறி இருக்கின்றார். என்னுடம் பல தடவைகள் சண்டை பிடித்தும் இருக்கின்றார்.நான் அவருக்குப் பதில் கூறப் போவதில்லை. அவர் ஒரு குழப்பவாதி.அவரைக் கணக்கில்எடுக்காமல்இருப்பதேமேல்.

> உண்மையில் இது தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரச்சினை. சிவாஜிலிங்கம் போன்றவர்களை கூட்டமைப்புத்தான் கட்டுப்படுத்த வேண்டும்.

**கே:** சிவாஜிலிங்கத்தின் கூற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதா?

**ப:**இது பாரதூரமான பிரச்சினையை ஏற்படுத்தக்கூடியது என்றால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.நான் மீண்டும் சொல்கிறேன்.அவரை ஊடகங்கள் மிகைப்படுத்தாமல் இருந்தாலே போதும்.

**கே:**அவர் மக்களின் மரணத்தை அனுஷ்டித்தல் என்ற போர்வையில் புலிகளின் மரணத்தை அனுஷ்டித்தார் என்று அர்த்தம்கொள்ள முடியாதா?

**ப:**அப்படியென்று நான் எப்படி நினைப்பது?சிவாஜிலிங்கத்தின் கட்சிகூட புலிகளுக்கு எதிரான கட்சிதானே? அந்தக் கட்சியின் முன்னாள் தலைவர் சிறி சபாரத்தினத்தைக் கொன்றவர்கள் புலிகள்.ரெலோ அப்போது புலிகளுக்கு எதிராகப் போராடியது. இதனால்அவர்புலிகளைநினைவு கூர்ந்தார் என்று சொல்ல முடியாது.
ஆனால்,போரில் மக்கள் இறந்தமைக்குப் படையினர்தான் காரணம் என்று அவர் கூறுகின்றார்.அப்படிக் கூறமுடியுமா என்று சட்டமா அதிபர் தான் பதில் கூற வேண்டும்.நான் சிவாஜிலிங்கத்தை ஒரு பாரதூரமான பெரிய அரசியல்வாதியாகப் பார்ப்பதில்லை.

**கே:**இவரின் கூற்றுத் தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் தெற்கு கலவரமடையாதா?

**ப:**தெற்கு மக்கள் பக்குவமானவர்கள்.அரசு சில பிரச்சினைகளுக்கு பதிலளிக்கப் போய் அது மிகப்பெரிய பிரச்சினைகளில் முடியும் வாய்ப்பும் உண்டு.அப்படியே விட்டுவிட்டால் அது தானாக மறைந்துவிடும்.

**கே:**நகத்தால் சுரண்டி வீச வேண்டிய பிரச்சினைகள் கணக்கில் எடுக்காமல் விடப்பட்டதால் அதை இரும்பால் அடித்துக்கூட கழட்ட முடியாமல் போன வரலாறு இருப்பதை மறந்து விட்டீர்களா?

**ப:**மறக்கவில்லை.இதெற்கெல்லாம் ஒரே தீர்வு. நாட்டு மக்களிடையே முடியுமானவரை அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுப்பதுதான்.அதிகாரம் பகிரப்படுவதன் மூலம் நாடு பிளவு படுவதைத் தடுக்க முடியும்.கொழும்பில் ஒரு வகுப்பினரிடம் குவிந்து கிடக்கும் அதிகாரங்களைப் பிரித்து கிராமிய ரீதியில் வழங்கவேண்டும்.வடக்குகிழக்குக்கு மாத்திரமல்ல மகியங்கனை, மொனராகலைக்கும் அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும்.
அதிகாரங்கள் இவ்வாறு பகிரப்படுவதன்மூலம் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது.இருக்கின்ற பிரச்சினைகள் தீருமே தவிர புதிதாக எந்தப் பிரச்சினையும் தோன்றாது.தெற்கில் அன்று புரட்சி ஏற்பட்டமைகூட இந்த அதிகாரப் பகிர்வைக் கோரித்தான்.
இதைத் தெளிவாக விளங்கிக்கொண்டால் எம்மால் பிரச்சினைகளை மிக இலகுவாகத் தீர்த்துக்கொள்ள முடியும். இந்த அதிகாரப் பகிர்வைக் கொடுப்பதற்காகவே நாம் இப்போது பாடுபட்டுக்கொண்டு இருக்கின்றோம்.

### பொது வாக்கெடுப்பு யோசனையை சுதந்திரக்கட்சி நிராகரிக்கிறது

**கே:**நீங்கள்தான் அதிகாரப் பகிர்வுக்குத் தடையாக உள்ளீர்கள் என்று அமைச்சர் டிலான் பெரேரா கூறுகின்றாரே?

**ப:**அதிகாரங்கள் பகிரப்பட்டு அவை கிராம மட்டங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று நான் கூறுவதையே டிலானும் கூறுகின்றார்.பிரச்சினை என்னவென்றால், நாம் பொது வாக்கெடுப்பைக் கோருவதும் அதைச் சுதந்திரக் கட்சி நிராகரிப்பதும்தான். இந்த விடயத்தில்தான் நாங்கள் முரண்பட்டு நிற்கின்றோம்.
புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதுமில்லை, பொது வாக்கெடுப்பை நடத்துவதுமில்லை என்று சுதந்திரக் கட்சி தீர்மானம் எடுத்துள்ளது.இருக்கின்ற அரமைப்பு திருத்தப்பட்டால் போதும் என்பது அவர்களின் நிலைப்பாடாகும்.
ஆனால்,ஐக்கிய தேசிய முன்னணியான எமது நிலைப்பாடானது புதிய அரசமைப்பு கொண்டு வரப்பட வேண்டும்;அது பொது வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் என்பதாகும். இதுவே உண்மையை மறைக்காமல் மக்களிடம் வெளிப்படைத்தன்மையுடன் நடந்துகொள்வதாக இருக்கும்.
மக்களிடம் உண்மையைக் கூறுவதற்கு முற்படும் எமது முயற்சியை எப்படிக் குறைகூற முடியும்? அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டதன் பின்னர் பிரச்சினைகள் எவையும் ஏற்படாமல் இருப்பதற்கு எமது வெளிப்படைத் தன்மை காரணமாக அமையும்.
பொது வாக்கெடுப்புக்கு விடப்படுவதன்மூலம் நாம் எதைக் கொடுக்கப் போகிறோம் என்பதை மக்கள் அறிந்துகொள்வார்கள்.அதை ஏற்றுக்கொண்டால் ஆதரித்து வாக்களிப்பர்;ஏற்காவிட்டால் தோற்கடிப்பர்.இதுதான் ஜனநாயகம்.
ஆனால்,இந்தச் சந்தர்ப்பத்தில் பொது வாக்கெடுப்புக்குச் செல்வது பொருத்தமற்றது.அப்படிச் சென்றால் அரசமைப்புக்கு மேலதிகமாக மக்கள் எழுப்பும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் நிலை ஏற்படும் என்று சுதந்திரக் கட்சி கூறுகின்றது.

**கே:** இது தொடர்பில் பிரதான இரண்டு கட்சிகளும் மாறுபாடான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள் ?

**ப:** இதுதான் ஜனநாயகம்.இரண்டு கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைத்திருப்பதால் அந்தந்தக் கட்சிகளின் நிலைப்பாடு மூடி மறைக்கப்பட வேண்டும் என்று அர்த்தமில்லை. இரண்டு கட்சிகளும் பேசி இறுதியில் ஒரு நல்ல முடிவுக்கு வருவோம்.அதிகாரப் பகிர்வை மக்களுக்கு வழங்கி அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முற்றுப் புள்ளி வைப்போம்.


### சம்பந்தன் சரியான எதிர்க்கட்சித் தலைவரல்லர்

**கே:** இறுதியாக உங்களிடம் ஒரு கேள்வி.நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்கட்சித் தலைவர் யார்?

**ப:** தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன்.

**கே:**அந்தப் பதவியின் பெயரை அவர் காப்பாற்றுகிறாரா?

**ப:** அவர் பிரதான எதிர்கட்சித் தலைவர் பதவியை வகித்தாலும், உண்மையான எதிர்கட்சித் தலைவர் சம்பந்தன் இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.சம்பந்தன் முழு நாட்டின் பிரச்சினைகளையும் நாடாளுமன்றில் பேசுவதில்லை.வடக்கு கிழக்கு பிரச்சினைகளை மட்டும் தான் பேசுகின்றார்.அரசியல் காரணங்களுக்காக அவர் இந்தப் பதவியை வகிக்கின்றார்.
ஆனால்,அவர் எதிர்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டதன்மூலம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டது என்ற செய்தி சிங்கள மக்களுக்குச் சொல்லப்பட்டுள்ளது. இது மிக முக்கியமான விடயம்.அதிகாரப் பகிர்வு விடயத்திற்கு இந்தச் செய்தி பெரிய உதவியாக இருக்கும்.
நாம் இந்தத் தேசத்தின் ஒரு பங்காளியாக மாறிவிட்டோம் என்பதும் தனி நாட்டுக் கோரிக்கையை கைவிட்டு விட்டோம் என்பதும்தான் அந்தச் செய்தியாகும்.உண்மையில் இது அவசியமான செய்தி.சிங்கள மக்கள் மத்தியில் இருந்த சந்தேகத்தை, தப்பெண்ணத்தை நீக்குவதற்கு இந்தச் செய்தி உதவியுள்ளது என்றே கூற வேண்டும், என்றார்.



## ஆசிரியருக்கான கடிதம்

### சாமானியனுக்கு எட்டாத தொலைவில் மரக்கறி வகையும், கடலுணவுகளும்

குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் உச்சத்தைத் தொட்டு நிற்பதுடன் அவற்றுக்குத் தட்டுப்பாடும் நிலவி வருகின்றது.
இதைப்போன்றே கடலுணவுகளும் சாதாரண மனிதர்கள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவுக்கு அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.
இங்குள்ள மக்களின் அன்றாட உணவில் மரக்கறியும், கடலுணவும் பிரதான பங்கை வகிக்கின்றன.
ஆனால் தற்போத இவையிரண்டையும் விலக்கிவைக்க வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.
கடுமையான வெப்பமும், வறட்சியும் மரக்கறி வகைகளின் உற்பத்தியைப் பெரிதும் பாதித்துவிட்டதாகக் கூறப்படுகின்றது. தற்போது கடும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவுவதால் கடலுணவுகளை அதிகளவில் பிடிக்க முடியவில்லையெனக் கூறப்படுகின்றது.
குடாநாட்டு மக்கள் தாம் குடியிருக்கும் இடங்களில் சிறிய அளவிலான வீட்டுத் தோட்டங்களை அமைப்பதன் மூலமாகத் தமது மரக்கறித்தேவைகளை ஓரளவு நிவர்த்தி செய்து கொள்ள முடியும். பிறநாடுகளில் மாடிகளில் வசிப்பவர்கள் சாடிகளில் மரக்கறி வகைகளைப் பயிரிட்டுப் பயன்பெறுவதைக் காணமுடிகின்றது. இந்த நிலையில் வீட்டுத் தோட்டங்களை அமைப்பதில் எம்மவர்கள் தயக்கம் காட்டுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் வீட்டுத் தோட்டங்களில் பெறும் மரக்கறிகளால் எமது தேவைகளை ஓரளவாவது சமாளிக்க முடியும். மேலும் மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவுகள் அதிகூடிய விலைகளில் விற்பனை செய்யப்படுவதற்குச் சந்தை வியாபாரிகளும் காரணமாகவுள்ளனர். அவர்கள் நிலைமைக்கு ஏற்றாற்போன்று விலைகளைத் தமது எண்ணம் போன்ற நிர்ணயம் செய்கின்றனர். நுகர்வோர் தொடர்பாக இவர்கள் சிறிதுகூட அக்கறை கொள்வதில்லை. பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவும் போது விலைகள் அதிக ரிக்கப்படுவது இயல்பானதே. ஆனால் தற்போது தாறுமாறான வகையில் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. உண்மையைக் கூறப்போனால் உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் பயன்பெறாத நிலையை இடையில் உள்ளவர்கள் செயற்கையாக உருவாக்கி வருகின்றனர் என்பதே யாதார்த்தமாகும்.

பொ.திருநாவுக்குரசு
கந்தரோடை சுன்னாகம்




# பொருளாதாரத்தை வலுப்படுத்த வரி முறைமையை ஒழுங்குமுறைக்குட்படுத்தவேண்டும்

## அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு வரி அறிவீடு தொடர்பிலான முறைமையினை மேலும் பயனுள்ளதாக ஒழுங்கு முறைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதான கருத்துக்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, அரச நிறுவனங்கள் மற்றும் சில தனியார் வர்த்தகங்கள் அவை மேற்கொள்வதான முதலீட்டு வேலைத் திட்டங்களின் மூலமாக அரசின் வரி வருமானத்தில் சேர வேண்டியதான வரி வகையறைகள் இழக்கப்படுவதான சந்தர்ப்பங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் வரி அறிவிடுவதில் நிலவும் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளால் இந்த நிலை ஏற்பட்டுள்ள தான விடயதானங்களும் அவரது கருத்துக்களில் குறித்துக்காட்டப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

# வரித்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சுட்டிக்காட்டு




2017 ஆம் ஆண்டுக்கானவரவு செலவுத்திட்டத்தில் பிரேரிக்கப்பட்டதானசிலவரித்திருத்தங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கருத்து வெளியிட்டுள்ளது.

குறிப்பாக, வரவு செலவுத்திட்ட பிரேரணைகளுக்குஏற்பஅமையப்பெற்றதான வருமான வரி மற்றும் பொருளாதார சேவைக் கட்டணங்களில்திருத்தங்களை நடைமுறைப்படுத்தவேண்டும். 2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்கவருமானவரிசட்டத்தின்படி முதலீடுகளுக்கான வரிச்சலுகை, ஏற்றுமதிக்கான வரிச்சலுகை, மற்றும் மூலதனக் கொடுப்பனவு உள்ளிட்ட பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனாலும் வரித்திருத்தம் தொடர்பிலானஅமைச்சரவைப் பத்திரம்இதுவரையாகஇறைவரித் திணைக்களத்துக்குக் கிடைக்கவில்லைஎனதெரிவிக்கப்பட்டுள்ளது.

வரிதொடர்பானதிருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவைதொடர்பானவிபரங்கள் நாடாளுமன்றில் முன்வைக்கப்படுவதுடன் அது தொடர்பிலான சட்ட மூலத்துக்கு அனுமதி பெறப்பட வேண்டுமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சிறுவர்களின் சிந்தனைகளை ஊக்குவிக்கும் செயற்றிட்டம்

## அஸ்ட்ரா நிறுவனம் மேற்கொண்டது

சிறுவர்களின்புத்தாக்கமானசிந்தனைகளை ஊக்குவிக்கும் வர்ணம்தீட்டல்செயற்திட்டமொன்றை அண்மையில்அஸ்ட்ராநிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இதன்பிரகாரம்சிறுவர்களின்தூய்மையான, தன்னலமற்ற மற்றும் புத்தாக்கமான கனவுகளின் தொனிப்பினை ஊக்குவிக்கும் வகையில்"ரப்பில்வரையச்சொல்லுங்கள்"(draw on you Tub) எனும் தலைப்பிலான அஸ்ட்ரா ரப்களுக்குவர்ணம்தீட்டும் மேற்படி செயற்றிட்டம் அமைந்திருந்தது.



இவ்வாறு சிறந்த முறையிலேதங்களது சிந்தனை வெளிப்பாட்டினைவர்ணங்களாக தீட்டிய சிறுவர்களிலிருந்து 50 வெற்றியாளர்களைஅஸ்ட்ராஇறுதிப்போட்டியில் தெரிவு செய்திருந்தது.

இந்தசெயற்றிட்டம்தொடர்பில்கரத்துரைத்துள்ளயுனிலீவர்சிறீலங்காவின்பிரதானஉணவுகள்பிரிவின் தலைமைஅதிகாரிசமாராசில்வா, "சிறுவர்கள்வித்தியாசமானகனவுகளைக் காண்பார்கள். கடந்த மூன்று மாதங்களில் எமக்குக் கிடைத்திருந்த வர்ண ஓவியங்களிலிருந்து இது உறுதியாகியிருந்தது. சமூகத்துக்குச் சிறந்த நன்மைகிடைப்பதுபற்றிஅவர்கள் கனவு காண்கின்றனர். நாட்டுக்கும், உலகுக்கும் சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு சிறுவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் ஊக்குவித்து, இந்த கனவுகளின் பின்னால் காணப்படும் புத்தாக்கங்களின் முக்கியத்துவத்தை உணர வைக்க வேண்டும் என்பதில் அஸ்ட்ரா நம்பிக்கை கொண்டுள்ளது" என்றார்.

இதன்படி மேற்படி செயற்றிட்டமானது மூன்று மாத காலப்பகுதி எனும் வரையறையினுள் யுனிலீவர் மூலமாக 10 ஆயிரம் விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டதுடன் அஸ்ட்ரா ரப்களில் சிறுவர்களின் கனவுகளை வர்ணம் தீட்டி வெளிப்படுத்துமாறு கோரியிருந்தது.

பின்னர் அவர்களின் கனவு என்ன என்பதையும் அதை எவ்வாறு அடைந்துகொள்ள திட்டமிட்டுள்ளனர்என்பதையும்தெளிவுபடுத்தும் கடிதமொன்றையும் அனுப்புமாறு கோரியிருந்தது. தொடர்ந்து மாகாண வருமானத் திணைக்களத்தின் உதவியுடன் 50வெற்றியாளர்கள்தெரிவுசெய்யப்பட்டதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின்கலைப்பீடத்தின் விரிவுரையாளர் குழுவினால் மிகவும்சிறந்தகனவுவெளிப்பாடு தெரிவு செய்யப்பட்டிருந்தது. மேலும் 50 போட்டியாளர்களுக்கும் 2 லட்சம் பெறுமதியான பணப்பரிசுகள் வழங்கப்பட்டிருந்தமை நோக்கத்தக்கது.

# இறக்குமதி வாகனங்களின் கொள்விலை அதிகரிப்பு




ஜப்பானில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதான வாகனங்களின் கொள்விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படிஇறக்குமதிசெய்யப்படும்வாகனம்ஒன்றின்விலைநிர்ணயமானது 2 லட்சம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜப்பான்யென்னின்நாணயப்பெறுமதி விகிதாசாரம் அதிகரித்தமையே இதற்கானகாரணம்எனவாகனஇறக்குமதியாளர்கள்தெரிவித்துள்ளனர். ஆனாலும் நாட்டினுள் தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ளதான வாகனங்களின் கொள் விலை நிர்ணயத்தில்எந்தவிதமானமாற்றங்களும் காண்டுகொள்ளப்படவில்லையென வாகன இறக்குமதியாளர்கள் கருத்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய அனுபவக் காட்சியறையை ஆரம்பித்தது வொல்வோ கார்ஸ் சிறீலங்கா

ஜ.டபிள்யு.எஸ் கோல்டிங்ஸ் குழுமத்தின் புதிய அங்கத்துவ நிறுவனமானவொல்வோகார்ஸ்சிறீலங்கா தனது சகல வசதிகளையும் கொண்டமைந்த அனுபவக் காட்சியறை ஒன்றினைபேலியகொடயில்அண்மையில் ஆரம்பித்துள்ளது.

20 ஆயிரம்சதுர அடிபரப்பிலமைந்துள்ள இந்த 3 எஸ் நிலையமானது விற்பனை, சேவைமற்றும உதிரிப்பாகங்கள்போன்றவற்றைகொண்டுள்ளதுடன் ஆசிய பிராந்தியத்தில் காணப்படும்மிகச்சிறந்தகாட்சியறைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. 250மில்லியன்ரூபாய்முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி நிலையமானது பன்னாட்டுத் தரங்களுக்கு நிகரான வாடிக்கையாளர் சேவையை வழங்கும் வகையில் வடிவமைப்பு பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி புதிய உத்தியோகபூர்வ இறக்குமதியாளரும், விற்பனையாளருமான வொல்வோ கார்ஸ் சிறீலங்கா பல புதிய மாதிரிகளை அறிமுகம் செய்துள்ளது. இதில் எக்ஸ் 90, ஏ 40, எஸ்60, எக்ஸ் 60 மற்றும் புத்தம் புதிய எஸ் 90 ஆகியன அடங்கியுள்ளன. இவை அனைத்தும் ஆரம்ப நிகழ்வின் போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வொல்வோ இன் மேம்படுத்தப்பட்ட தயாரிப்புகளில் உருவாக்கப்பட்டுள்ள எஸ் 90 என்பது அளவிடக்கூடிய தயாரிப்புக் கட்டமைப்பைக் கொண்டுள்ளதுடன், வாகனங்கள் பாதுகாப்புத் துறையில் வொல்வோ இன் தலைமைத்துவத்தை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளது. எஸ் 90 என்பது பன்னாடுகளின் கௌரவிப்பைப் பெற்றுள்ளதுடன் ஜெனிவா மோட்டார் கண்காட்சியில் ஆண்டின் சிறந்த அலங்காரம் என்பதற்கான விருதைப் பெற்றுள்ளதாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக்காட்சியறையின் மூலமாகபரிபூரண உதிரிப்பாகங்களின்தெரிவுகள்விற்பனைசெய்யப்படும் என்பதுடன் தொழில்நுட்பரீதியில் மேம்பட்டதாக அமைந்திருக்கும் உள்ளக வீல் எலைன்மன்ட் வசதிகள் காணப்படுவதுடன் நாடு முழுவதிலும் 24 மணி நேர பழுதுபார்ப்பு சேவை வழங்கப்படுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள ஜ.டபிள்யு.எஸ் கோல்டிங்ஸ் தலைவர் ஆர்தர் சேனநாயக்க, "இலங்கையில்இதுவரைகாலமும் வேறெந்தவாகனவிற்பனைநிறுவனத்தினாலும் வழங்கப்படாத ஒன்றுக்கு மேற்பட்ட சேவை அம்சங்களைநாம்எமதுகாட்சியறையினூடாக வழங்க முன்வந்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். புதிய வகைக் கார்களை அறிமுகம் செய்வதை பெரும் பேறாக நாம் கருதுகிறோம். உள்நாட்டுச்சந்தைக்கு இது மிகவும் பொருத்தமானதாக அமைந்திருக்கும்" என்றார்.

கே.எஸ்.சிவஞானராஜா

# வீட்டுக்கு ஒரு நூலகம் நாட்டுக்கு விடிவு தரும்



ஏடுகளும், நூல்களும், கல்வெட்டுக்களும், படிமங்களும், புதைபொருள் கிடக்கைகளும், இயற்கையின் விந்தைகளுமே மனிதர்களைச் சிந்திக்க வைத்தன. ஞானிகளும், விஞ்ஞானிகளும், புலவர்களும், படைப்பாளிகளும் விட்டுச் சென்ற பொக்கிசங்களே எமக்கு வரமாக இன்றும் விளங்குகின்றன. அந்தப் பொக்கிசங்களில் தூரநோக்கோடு வானசாஸ்திரம், கணிதம், பூமி சாத்திரம், இலக்கண இலக்கியங்கள், சமய விழுமியங்கள், தத்துவங்கள், பிரளயம், அழிவு, கலியுகம், நிவாரணம், பேரின்பம் யாவற்றையும் வரிவடிவங்களில் ஏடாக நூலாக குறிப்பாகப் படைக்கப்பட்டதன் விளைவாகவே இன்று நாம் இலகுவாக எளிதாக நிறைவாக கண்ணார உளமார பசியாற நவீன வடிவங்களில் வாசிக்கின்றோம், படிக்கின்றோம், எழுதுகின்றோம், அனுபவிக்கின்றோம், படைக்கின்றோம். நாம் இப்போது தாராளமாக அனுபவிப்பதை எமது அடுத்த சந்ததியினர் முழுமையாக அடைவதற்கு நாம் உருப்படியான கைங்கரியத்தைச் செய்துவிட்டே முதுமையை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். ஆகவே எம் பிள்ளைகளுக்கு அறிவுப்பசியாற அறிவுப் புதிர் தேட அறிவு நாற்றினை நாட்ட அறிவுப் புதுமை படைத்திட வீட்டுக்கு ஒரு நூலகத்தை அவசியம் உருவாக்க வேண்டும். வீடு அறிவு பெற்றால் நாடு பேறாகும். நாடு பேறாகினால் ஒவ்வொரு வீடும் தோதாகும். நாடும் விடியும். மேற்கும் விடியும்.

**நூலகங்களின் அவசியம்**

இன்று உலகில் மிளிரும் அத்தனை மேதாவிகளும் நூல்களைப் பேணிப் பாதுகாத்து வாசித்துத் தம்மை உன்னதப் பேறாக்கியவர்களாவார்கள்.



வாசிப்பதும், எழுதுவதும், சிந்திப்பதும், படைப்பதும், திருந்துவதும், திருத்துவதும், போதிப்பதும், பெரியனாவதும், தலைவனாவதும், தத்துவஞானியாவதும், நூல்களை ஈயும் நூலகங்களினாலேயே தான். பொதுநூலகங்கள், தனிப்பட்ட நூலகங்கள், வாடகை நூலகங்கள் வாராந்த நூலகங்கள், நூலகக் கண்காட்சி, நூலகப்போட்டிகள், நூலகவாரம், நூலகப்பரிசு, நூலகத் தேர்வுகள் என நூலகமாண்பினை ஒவ்வொரு நாடுகளும் பேணுவதனால் அதிசிறந்த அறிவாளிகள் பிறந்த வண்ணம் உள்ளனர். அறிவுப் பசியானது அரிசிப் பசியிலும் பார்க்கப் பன்மடங்கு அதிகமானது. அது படிக்கப் படிக்க வாயூறவல்லது. தேனாக இனிக்கும் தன்மையது. உடம்பெல்லாம் புல்லரிக்க வல்லது. உள்ளொளி பெருக்க வல்லது. உருப்படியாக உடலியக்கத்தைத் தூண்டவல்லது. உருவாகும் சந்ததிக்கு வரமும், வளமும், வாழ்த்தும் தரவல்லது.

**யாவருக்குப் பயன்**

இத்தகு நூலகம் ஒவ்வொரு வீட்டிலேயும் யாவருக்கும் பயன்படத்தக்க வகையில் பாதுகாப்பானதும் போதுமானதுமான வெளிச்சம் வருமாறு உள்ளதுமான ஓரிடத்தில் அலுமாரி அல்லது பெட்டிகள் அல்லது திறந்த சட்ட கட்டிடத்தில் அமைத்தல் நன்மை பயக்கும். பிள்ளைகள் பெற்றோர் நண்பர்கள் உறவினர்கள் ஆசிரியர்கள் எனப்பலரும் படிக்க ஏதுவாக இது விளங்க வேண்டும். மற்றும் யாருக்கும் இரவல் கொடுப்பதாக இது அமைந்தால் ஒரு போதும் பயன்தரமாட்டாது. அமைதியாக இருந்து வாசிப்பதே இதன் நோக்கமாகும். வாசிப்பவர்கள் யாராக இருந்தாலும் குறிப்பு எடுப்பதும் எழுதுவதற்குப் பேனா கொண்டு வருவதும் ஒழுங்காகப் புத்தகங்களை நோகாமல் கையாள்வதும் பிரதானமானதாகும்.

**பிள்ளைகளுக்கான முதலீடு**

பெற்றோர்கள் நம்பிக்கையோடு இந்தத் திட்டத்தில் பிள்ளைகளின் வெற்றிக்காக முதலீடு செய்யலாம். பாடசாலைத் தேவைகள் என்பதற்கு அப்பால் சமயம் தமிழ் குட்டிக் கதைகள் சிறுகதைகள் நாளாந்த புதினப் பத்திரிகைகள் மருத்துவம் விவசாயம் சரித்திரம் விஞ்ஞானிகள் மெஞ்ஞானிகள் கண்டுபிடிப்புக்கள் பறவைகள் பிராணிகள் இலக்கிய கர்த்தாக்கள் இயற்கை வனப்புக்கள் போர்கள் அழிவுகள் மலைகள் ஆறுகள் சிறுவர் கதைகள் கீழைத்தேய மேலைத்தேய ஹிந்துஸ்தானி இசை ஆலயங்கள் விண்வெளி ஆராய்ச்சி உயர்கல்விப் பீடங்கள் கலை கலாசாரப் பண்பாட்டு விழுமிய அம்சங்கள் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த நாடுகள் இந்திய மாத ஆரோக்கிய இதழ்கள் அரசியல், ஜனநாயகம், மனித உரிமைகள், சூழல் மாசடைதல், போதை வஸ்துப் பாவனையை ஒழித்தல், சாதனைகள், தற்போதைய பிரதமர்கள் ஐக்கிய நாடுகள் சபை, நோபல்பரிசு, உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், ஒலிம்பிக், மூலிகை கைவைத்தியம் போன்ற

எம் பிள்ளைகளுக்கு அறிவுப் பசியாற, அறிவுப் புதிர் தேட அறிவு நாற்றினை நட, அறிவுப் புதுமை படைத்திட வீட்டுக்கு ஒரு நூலகத்தை அவசியம் உருவாக்க வேண்டும். வீடு அறிவு பெற்றால் நாடு பேறாகும்.

இன்னோரன்ன குறிப்புக்களைத் தாங்கும் நூல்கள், பத்திரிகைகள் மாத இதழ்கள், வெளியீடுகளைச் சீராகவும், நேர்த்தியாகவும், கவினுறு நிலையிலும், காத்திரமாகவும் அடுக்கி இலக்க மிட்டு பகுதிகளை வகுதிகளாக்கிப் பெயரிட்டு நூலகத்தை அமைத்துக் கொடுத்து பிள்ளைகளுக்கு வாழ வழிகாட்டுவது பிள்ளைகளின் பெற்றோர்களே யாவர். இதுவரை எவராவது செய்திருந்தால் அவர்களை வணங்குகின்றேன்.

---

கே.எஸ்.சிவஞானராஜா



# பிள்ளைகளால் மகிழ்ச்சியைப் பெறுவதற்கு குடும்பம் எவ்வாறு செயற்பட வேண்டும்

மனித சமுதாயத்தில் ஒரு முக்கிய பங்கை வகிக்கும் குடும்பம் மிகப் பழமை வாய்ந்த அமைப்பாகும். பலமான சமுதாயத்தை அமைப்பதில் குடும்பங்களுக்குத்தான் அதிக பங்கு உள்ளது. பிள்ளைகளை முதிர்ச்சி வாய்ந்த பெரியவர்களாக வளர்ப்பதற்கு மிகச் சிறந்த உதவியாக இருப்பது குடும்பமே. ஒரு குடும்பம் தம் பிள்ளைகளால் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அதுதான் இலட்சியக் குடும்பம் எனப்படும். பிள்ளைகளை எவ்வளவுக்கு அவதானமாக வளர்க்கின்றோமோ அந்தளவுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிலவும்.

மகிழ்ச்சியான குடும்பம் பத்திரமும், பாதுகாப்பும் அளிக்கிற புகலிடமாய் உள்ளது. அக்கறையுள்ள பெற்றோர் ஒரு பிள்ளை நோயால் பீடிக்கப்பட்டிருக்கும்போது பக்கத்திலிருந்து அக்கறையுடனும் அன்புடனும், பொறுமையுடனும் பார்த்துக் கொள்வர். இதன் மூலம் பிள்ளை தன் பெற்றோரின் அன்பை புரிந்து கொள்கின்றது.

**உணவு உண்ணும் வேளையில்....**

குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து உணவு உண்ணும் வேளைகளில் பிள்ளைகளுடன் பல்வேறு சம்பவங்கள் தொடர்பாகக் கலந்து பேசிக் கொள்ள வேண்டும். இதன் வளர்ச்சிப் படிநிலையாக பிள்ளைக்கு ஏதும் பிரச்சினைகள் தோன்றின் அவற்றைத் தாயிடமோ அல்லது தந்தையிடமோ சொல்லி புத்திமதிகளையும் ஆதரவையும் பெற்றுக் கொள்ள முடியும். வெளியுலகம் எவ்வளவு துன்பம் நிரம்பியதாக இருந்தாலும் பிள்ளை பாதுகாப்பைப் பெற இவை உதவியாக இருக்கும்.

இன்று பிள்ளைகளை வளர்த்து பெரியவர்களாக்குவது மிகவும் கடினமான பொறுப்புள்ள வேலையாய் இருக்கிறது. எனினும் அநேகர் அதை வெற்றிகரமாய் நிறைவேற்றி மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் பகுத்துணர்வு, உண்மைப் பற்றுறுதி, மரியாதை, சட்டங்களை மதித்தல், அன்பு பாராட்டுதல், தீயவற்றை வெறுத்தல் இப்படியான பண்புகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு பிள்ளைப் பருவத்தின் ஆரம்ப காலம் முதலே வளர்த்துக் கொள்வதற்கு பெற்றோர் உதவ வேண்டும்.

பெற்றோர் எல்லா விடயங்களிலும் முன்மாதிரிகளாகவும் நண்பர்களாகவும் கருத்துப் பரிமாற்றம் செய்பவர்களாகவும் போதனையாளர்களாகவும் இருக்க வேண்டும்.

எனது பெற்றோர் தேவையான போது உதவி வழங்குவதற்கு தயாராக இருக்கிறார் என்பதையும் எதுவாயினும் புரிந்து கொள்ளும் திறன் உள்ளவர்கள் என்பதையும் பிள்ளை அறியும் வண்ணம் பெற்றோரின் நடத்தைகள் காணப்பட வேண்டும். பெற்றோரே நீங்கள் பிள்ளைகளாக இருந்த சமயம் எப்படி இருந்தீர்கள் என்பதை நினைவுக்குக் கொண்டுவர மறந்து விடாதீர்கள். உங்கள் நடத்தையின் மூலம் சரியான நியமங்களைப் பிள்ளை கற்றுக் கொள்கின்றது என்பதைச் சிந்தித்து நகருங்கள்.


சுயங்களைக் குறித்து வேறு எவரிடமிருந்தாவது கற்றுக் கொள்ள முன் உங்களிடமிருந்து கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். இல்லையென்றால் பிறரிடமிருந்து தவறான தகவல்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படலாம். பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர் சமநிலை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். கோப உணர்வைத் தவிர்ப்பது நல்லது.

தீய வார்த்தைப் பிரயோகங்களை விலக்குவது சிறப்பு. பிள்ளைகள் தன்னம்பிக்கையை இழந்து விடும் அளவுக்குக் கண்டிப்பாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும். கண்டிப்பு இல்லாமலும் விடக்கூடாது. அன்பாக அக்கறையுடன் நடவுங்கள் உங்களுக்கு அவர்கள் பேரில் அன்பு உள்ளது என்பதை பிள்ளைகள் உணர்ந்தால் அவர்கள் அந்த அன்பை உங்கள் மீது திரும்பக் காண்பிப்பதற்கான சாத்தியம் அதிகம் உள்ளது.

தெய்வீக நியமங்களுக்குக் கீழ்ப்படிவதே சிறந்த வாழ்க்கைமுறைக்கு அடிப்படை என்பதை சிறு வயது முதலே ஊட்ட வேண்டும். உங்கள் பிள்ளை அறிய வாய்ப்பளிக்க வேண்டும். செய்யக் கூடாத விடயங்களைச் செய்ய முனையும் போது செய்யக்கூடாது என்பதை சாந்தமாகவும் நியாயமான முறையிலும் சொல்ல முயற்சி செய்ய வேண்டும். இளம் வயது முதலே பிள்ளை நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்தினால் அவன் முதிர்விலும் அதை விடாதிருப்பான். அத்துடன் அவர்கள் நீங்கள் பெருமைப்படத்தக்க பெரியவர்களாக வளருவார்கள்.

**அனுபவமில்லாத பிள்ளைகள்**

அனுபவமில்லாத தம் பிள்ளைகளைத் தான் தாங்கள் கையாளுகிறார்கள் என்பதைப் பெற்றோர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பிள்ளையின் நடத்தை தவறுமாயின் ஏன் அந்த நடத்தை தவறு என்பதையும் மீண்டும் அந்தத் தவறு ஏற்படுவதை எவ்வாறு தவிர்க்கலாம் என்பதையும் விளக்குவதன் மூலம் தவறான நடத்தையே கெட்டது நான் கெட்டவன் இல்லை என உணர்ந்து கொள்ள அது வாய்ப்பளிக்கும். கீழ்ப்படியாத பிள்ளையாயின் அந்தப் பிள்ளை தன் போக்கை மாற்றிக் கொள்ள உற்சாகப்படுத்துங்கள். புத்தி கூறுங்கள். உங்கள் பிள்ளை கோபப்பட்டு வீட்டை விட்டு வெளிச் செல்லும் அளவுக்கு முரண்டு பிடிக்காதீர்கள். உங்கள் பிள்ளை உங்களிடம் திரும்பி வருவதை கடினமாக்கும் காரியங்களைச் செய்யாதீர்கள். கொல்லாதீர்கள். கட்டுப்பாடில்லாத கோபத்தையும் கசப்பையும் தவிருங்கள் நியாயமான நடத்தை வரம்புகளைத் தொடர்ந்து காத்துவரும் பெற்றோரின் குடும்பமே பிள்ளைகளால் மகிழ்ச்சியான குடும்பமாக மிளிர்கின்றது.



# உங்கள் பிறந்த திகதிக்கு பொருத்தமான தொழில்

எம்மில் பலருக்கும் எமக்கு எந்தத் தொழில் சிறப்பாக இருக்குமென்ற கேள்வி மனதில் எழும். இருப்பினும், பலமுறை நாம் எமது விருப்பத்துக்கு ஏற்ப எமக்கான தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம். ஆனால், இது அனைவருக்குமே பொருந்தும் என்று கூற முடியாது.
நீங்கள் பிறந்த திகதிக்கு எந்த மாதிரியான தொழிலைத் தேர்ந்தெடுத்து ஈடுபடுவது சிறப்பாக இருக்கும் என இங்கு காட்டப்பட்டுள்ளது.

7

**7,16,25** ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் ஆராய்ச்சி துறையில் சிறப்பானவர்களாக இருப்பர் என்று கூறப்படுகிறது. இவர்கள் மிகவும் புதுமையானவர்கள் மற்றும் ஆக்கப்பூர்வமாக சிந்திப்பவர்கள். நமது கற்பனைக்கு எட்டாத அளவில் சிந்தித்து, செய்யும் காரியத்தை வெற்றிகரமாக இவர்கள் முடிப்பார்கள். இந்த நாள்களில் பிறந்தவர்களுக்கு ஆய்வு சம்பந்தமான துறை அல்லது தனது கற்பனை வளத்தை வெளிக்காட்டும் படியான துறை பொருத்தமானதாக இருக்கும்.

8

**8, 17, 26** ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள், தமது 35 வயது வரை பல போராட்டங்களை சந்திப்பார்கள். இவர்கள் எதையும் நேரடியாகப் பேசக்கூடியவர்கள் மற்றும் கடுமையாக வேலை செய்யக்கூடியவர்கள். இதனால் தாமதமானாலும் செய்யும் காரியத்தில் வெற்றி காண்பார்கள். இவர்களுக்கு அரசியல், ஆசிரியர் தொழில் அல்லது சொந்தத் தொழில், நிதி போன்ற துறைகள் சிறப்பானதாக இருக்கும்.

9

**9, 18, 27** ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் விளையாட்டில் நல்ல ஈடுபாடு கொண்டவர்களாக இருப்பர். உலகில் உள்ள மிகவும் பிரபலமான விளையாட்டு வீரர்கள் பலரும் இந்தத் திகதிகளில் பிறந்தவர்கள் தான். இவர்களுக்கு விளையாட்டு, பாதுகாப்பு படைகள் அல்லது ரியல் எஸ்டேட் போன்ற துறைகள் சிறப்பாக இருக்கும்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1674- மராட்டியப் பேரசை உருவாக்கிய சிவாஜி முடி சூடினார்.
1683 -உலகின் முதலாவது பல்கலைக்கழக தொல்காட்சிச் சாலை அஸ்மோலியன் மியூசியம் ஒக்ஸ்போர்டில் திறந்து வைக்கப்பட்டது.
1808 -நெப்போலியனின் சகோதரர் யோசப் பொனபார்ட் ஸ்பெயினின் அரசராக முடி சூடினார்.
1833 -தொடருந்தில் பயணித்த முதலாவது அமெரிக்க அரச தலைவர். அன்றூ ஜாக்ஸன்.
1844-கிறிஸ்தவ வாலிபர் சங்கம் வை.எம்.சி.ஏ லண்டனில் உருவாக்கப்பட்டது.
1844-உலகின் முதலாவது பொறிமுறையால் உறைய வைக்கப்பட்ட பனிச் சறுக்கல் அரங்கி க்லாசியறியம் திறந்து வைக்கப்பட்டது.
1939 - நீதிபதி யோசப் போர்ஸ் கிறேற்றர் நியூயோர்க்கில் காணாமல் போன நிலையில் சட்டபூர்வமாக இறந்து போனவராகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
1954-மொஸ்கோவில் பிரதான நினைவுச் சின்னங்களில் ஒன்றான யூரி டொல்கோறாக்கி சிற்பம் திறந்து வைக்கப்பட்டது.
1968-முதல்நாள் ஏற்பட்ட சூட்டுக் காயத்தால் அரச தலைவர் வேட்பாளரும் அமெரிக்காவின் 35ஆவது அரச தலைவருமான ஜோன் எப்.கெனடியின் சகோதரருமான றொபேட் எப்கெனடி சாவடைந்தார்.
1981 -இந்தியாவின் பாக்மதி ஆற்றுக்கு மேலான பாலத்தில் பயணிகள் தொடருந்து தடம் புரண்டதில் 268 பேர் உயிரிழந்ததாகவும் 300 பேர் வரை காணாமற் போனதாகவும் அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்தது. ஆயினும் ஆயிரம் பேர் வரை உயிரிழந்திருக்கலாமென நம்பப்படுகின்றது.
1982-லெபனான் போர் தொடங்கியது. இஸ்ரேலியா பாதுகாப்பு அமைச்சர் ஏரியல் ஷரோன் தலைமையிலான படைகள் கலிலி சமாதானத்துக்கான நடவடிக்கை எனும் பெயரில் தெற்கு லெபனானுள் நுழைந்தது. கடைசியில் தெற்கே தலைநகர் பெய்ரூட்வரை படைகள் சென்றன.
2003-குடாநாட்டில் குற்றங்களைத் தடுக்க புலிகளின் நடவடிக்கை தேவையென பிர முகர்கள் கோரிக்கை.
2004 -நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளின் கூட்டு அமர்வில் இந்திய அரச தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாமால் தமிழ் மொழி செம்மாழியாக உறுதிப்படுத்தப்பட்டது.
2016 -கடற்பாறையில் சிக்குண்டு இருந்த 101 கிலோ கஞ்சா மீட்பு.

**நாளை**

**வைகாசி-24**
புதன்கிழமை -07.06.2017
திதி: திரயோதசி பி.ப.03.16
நட்சத்திரம்: விசாகம் பி.இ.12.32
சுபநேரம்:04.22-05.52 வரை
ராகுகாலம்:11.52-01.22 வரை
வைகாசி விசாகம்

# யாழ்ப்பாண மக்கள் எதிர்கொண்ட அவலம் மலையகத்தில் வேண்டாம்

இந்திய அரசின் நிதியுதவியுடன் மலையகத்தில் 4ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. நாட்டின் ஏனைய மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மலையக மக்கள் மிகக் குறைந்த அளவிலான வசதிகளையே கொண்டிருக்கின்றனர். இதில் அவர்களது இல்லிடங்களும் உள்ளடங்குகின்றன. ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்ட வசதிகள் எதுவுமில்லாத தொடர் கொட்டகைகளே இன்றும் ஏராளமான மலையக மக்களின் இல்லிடங்களாகவுள்ளன. ஏனையவர்கள் போன்று தனி வீடுகளில் வசிக்கின்ற உரிமை இந்த மக்களுக்கும் உண்டு என்பதை எவருமே மறுக்க முடியாது. இந்த நிலையில்தான் இந்திய வீட்டுத் திட்டங்கள் மலையகத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. யாழ்ப்பாணத்தில் இந்திய வீட்டுத் திட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதி, வீடுகளை அமைப்பதற்குப் போதுமானதாக இல்லையென்ற குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே எழுந்து வலுப்பெற்று நிற் கின்றன. ஐந்து இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் இந்திய வீடொன்றை அமைப்பது என்பது வெறும் பகற்கனவே யாகும். யாழ்ப்பாணத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட மக்களில் பலரும் பெரியளவில் நிதி நெருக்கடிக்குள் சிக்கித் தவித்தனர். நகைகளை விற்கவும், அடைவு வைக்கவும் வேண்டிய நிலைக்குப் பலரும் தள்ளப்பட்டனர்.
பலர் வெளியில் அதிக வட்டிக்குக் கடன் வாங்கித் தமது வீடுகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆகக் குறைந்தது 8 இலட்சம் ரூபாவாவது வழங்கியிருந்தால் உரிய மதிப்பீடுகளின் பிரகாரம் இந்திய வீடுகளை மக்கள் பூர்த்தி செய்திருக்க முடியும்.
மலையக மக்களுக்கான இந்திய வீட்டுத் திட்டத்துக்கும் யாழ்ப்பாணம் போன்று குறைந்த அளவிலான நிதி வழங்கப்படுமாயின் அந்த மக்களும் யாழ்ப்பாண மக்கள் போன்று துன்பங்களை எதிர்கொள்ள வேண்டிய அவல நிலை தோன்றிவிடும். மலையக அரசியல்வாதிகள் இதைக் கவனத்தில் கொண்டு வீடுகளை அமைப்பதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அன்றாட வாழ்க்கை முறை இனிதாக அமையும். தொழில், வியாபாரத்தில் பண வரவு அதிகரிக்கும். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர்கள். மனைவியின் ஆலோசனை நன்மை தரும்.

**இடபம்:** உங்களின் செயற்பாடு கண்டு மற்றவர்கள் புகழ்வர். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறு விலகும். விலை உயர்ந்த ஆடம்பரப் பொருள்கள் வாங்கு வீர்கள். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** அனைவரையும் அன்புடன் மதித்துப் பழகுவீர்கள். சமுதாயத்தில் கௌரவம் கூடும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். தெய்வத் திருப்பணிக்குப் பணம் கொடுத்து உதவுவீர்கள்.

**கடகம்:** பொறுமையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். உங்களின் நற்குணம் புரிந்து பகைவரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும்.

**சிங்கம்:** நண்பர்களின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தடை நீங்கி லாபம் பெருகும். குடும்ப த்தில் திடீர்ச் செலவு ஏற்படும். பணியாளர்கள், நிர்வாகத்தின் குறிப்பறிந்து செயற்படுவது நல்லது.

**கன்னி:** எதிர்கால வளர்ச்சிக்குத் திட்டமிடுவீர்கள். பெற்றோர் நலனில் அக்கறை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**துலாம்:** மனதில் புத்துணர்ச்சி மேலோங்கும். அக்கம் பக்கத்தினருடன் நட்புப் பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் விரிவாக்கப் பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**விருச்சிகம்:** பொது விடயங்களில் ஆர்வம் உண்டாகும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் உண்டாகும். நண்பர்களின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** பழைய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். தொழில், வியாபார வகையில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். இல்லறத் துணையின் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** உறவினர்கள் அதிக எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் படிப்படியாக உயரும். சேமிப்புப் பணம் முக்கிய செலவுக்குப் பயன்படும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**கும்பம்:** உழைப்புக்குரிய பலன் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபார விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். பணியாளர்கள் அதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவர். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மீனம்:** நண்பர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் காண்பீர்கள். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். உடல்நலத்தில் கவனம் தேவை.

# நடிகராகிறாரா இசையமைப்பாளர்



தமிழ் சினிமாவில் இசையமைப்பாளர்களாக அறிமுகமான பலரும், தற்போது நடிப்பில் தீவிரம் காட்டி வருகின்றனர். பிரபல இசையமைப்பாளர் ஒருவரும் அந்த வரிசையில் இணையவிருக்கிறாராம். முதல் படத்திலேயே தனது இசையால் உலக மக்களைத் திரும்பிப் பார்க்க வைத்த இசையமைப்பாளர் அனிருத்துக்கு தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களின் படங்களுக்கும் இசையமைக்கும் வாய்ப்பு கிடைத்தது. தொடர்ந்து பல்வேறு படங்களில் இணைந்து பணியாற்றி வந்த அனிருத்துக்கும் நடிகர் தனுஷ்க்கும் இடையேயான கருத்து வேறுபாடு காரணமாக, அவருடைய படங்களுக்குத் தற்போது இசைமைப்பதில்லை. இந்த நிலையில், நடிகர் சிம்புவுடன் இணைந்து `பீப்' பாடல் சர்ச்சையிலும் சிக்கிய அனிருத், பின்னர் ஒருவழியாக அந்தப் பிரச்சினையில் இருந்து மீண்டார். இதையடுத்து அனிருத்துக்குப் பிரபல நகைக் கடை உரிமையாளரின் மகளுக்கும் திருமணம் என்று ஒரு செய்தி பரவி வந்தது. ஆனால் அதனை மறுத்த அனிருத், தற்போது நகைச் சுவைப் படம் ஒன்றில் நடிக்க இருக்கிறார் என்று கூறப்படுகிறது. அனிருத்திடம் கதை சொல்லிய புதுமுக இயக்குநர் ஒருவர் அந்தப் படத்தில், அனிருத்தான் நடிக்க வேண்டும் என்று நச்சரிக்கிறாராம். கதையைக் கேட்ட அனிருத்துக்கு கதை பிடித்துப் போக நல்ல பதில் கூறுவதாக இயக்குநரிடம் உறுதி அளித்திருக்கிறாராம்.

நில நடுக்கம்-இராணுவத்தைக் கூப்பிடுங்கள்
வெள்ளம்- இராணுவத்தைக் கூப்பிடுங்கள்
தீவிரவாத தாக்குதல்- இராணுவத்தைக் கூப்பிடுங்கள்
ஆழ்துழை கிணற்றில் குழந்தை- இராணுவத்தை கூப்பிடுங்கள்

மற்ற நேரங்களில்- (திறப்பு விழா, சுப நிகழ்ச்சி, பண்டிகை)
அரசியல்வாதி, நடிகர், நடிகையைக் கூப்பிடுங்கள்...



அடேய் உங்க அம்மா சத்தியமா வீட்டுக்கு வந்த உன் கேர்ள் பிரன்ட்ட நான் விரட்டல நம்புடா என்ன...



Wife cool ஆ இருந்தா சாப்பாடு Hot ஆ கிடைக்கும்...



Wife Hot ஆ இருந்தா சாப்பாடு cool ஆ கிடைக்கும் அவ்ளோ தானுங்க வாழ்க்கை...!

பிழையழகு...



இடது வலது செருப்புகளைக் கால்மாற்றி அணியும் குழந்தைகள்...

ஆசிரியர்: சிவா ஏன்டா நேற்று பள்ளிக்கூடம் வரல?



மாணவன்: அதான் சேர் உங்களுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம். நீங்க கூடத்தான் போன வாரம் ஒரு நாள் வரல, நான் ஏனென்டு கேட்டேனா?

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 4 | | 9 | | | | |
| | 9 | | | | 2 | | 5 | 7 |
| | | | 8 | | | 2 | | |
| | | 9 | | | 4 | | | 2 |
| 6 | | 8 | | | 1 | | 3 | |
| | | | 9 | | | | | |
| 4 | 8 | | | 1 | | | | 6 |
| | 7 | 2 | | | | | | 8 |
| 9 | | 1 | | 5 | 8 | | | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 4 | 1 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 9 | 8 | 7 | 6 | 2 | 3 | 1 | 4 |
| 1 | 3 | 2 | 8 | 5 | 4 | 9 | 6 | 7 |
| 3 | 2 | 5 | 6 | 4 | 8 | 1 | 7 | 9 |
| 8 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 | 4 | 3 |
| 7 | 4 | 9 | 5 | 1 | 3 | 6 | 2 | 8 |
| 9 | 5 | 3 | 4 | 7 | 6 | 2 | 8 | 1 |
| 4 | 8 | 6 | 3 | 2 | 1 | 7 | 9 | 5 |
| 2 | 1 | 7 | 9 | 8 | 5 | 4 | 3 | 6 |

# நானும் புறாதான்

ஒரு காட்டில் மிகப் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தில் வெள்ளை வெளேர் என்ற நிறத்தில் நான்கு வெண் புறாக்கள் வசித்து வந்தன. அந்தப் புறாக்கள் வேளா வேளைக்குத் தீனி தின்று கொழுத்துக் காணப்பட்டன. வெகு நாள்களாக அந்த நான்கு புறாக்களையும் உன்னிப்பாகக் கவனித்து வந்தது ஒரு காகம். அவற்றைப் போலவே தானும் நன்கு கொழுக்க வேண்டும் என்று அது ஆசைப்பட்டது. ஒரு நாள் அந்த நான்கு புறாக்களும் இரை தேடிச் சென்று போதிய அளவுக்கு தின்று விட்டு வெகு திருப்தியுடன் தங்களது இருப்பிடத்தை அடைந்தன. பின் உண்ட களைப்பு நீங்க ஓய்வெடுக்கத் தொடங்கின.

புறாக்களை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த காகத்துக்கு ஒரு யோசனை தோன்றியது. மறுநாள் புறாக்க ளுடன் போய்த் தங்கி அவர்களைப் போவே நன்கு தின்று வளர வேண்டும் என்று நினைத்தது. தன் சக காகங்களிடம் அந்த யோசனையைச் சொல்லாமல் தான் மட்டும் உண்டு கொழுத்து சுகபோகத்தில் திகழ விருப்பம் கொண்டது.




மறுநாள் வீடுகளின் பூச்சு வேலைக்கு சுண்ணாம்பு கலவை தயாரிக்கும் ஒரு பகுதிக்குச் சென்று கரைத்து வைத்திருந்த சுண்ணாம்புக் கலவைத் தொட்டிக்குள் குதித்து குளித்து வெளியேறியது. பின்னர் சுண்ணாம்பின் ஈரத்தை வெயிலில் உலர வைத்த பின் மாலை வரும் வரை காத்திருந்தது. அதற்குள் தனது மேனி வெண்ணிறமாகத் தெரிவதையும் நினைத்து பெருமைப்பட்டுக் கொண்டது. மாலையானது. பறவைகள் தங்கள் கூடுகளை அடையும் நேரம் பார்த்து காகம் அந்தப் புறாக்கள் வாழ்ந்து வந்த மரத்தை நோக்கிப் பறந்து சென்றது.

வெள்ளை நிறத்தில் இருந்த காகத்தைப் புறாக்கள் தங்கள் இனம்தான் என நினைத்து அதனைத் தம்முடன் சேர்த்துக் கொண்டன. இரவு நேரமானதும் காகம் தான். பசியாய் இருப்பதாக அவைகளிடம் கூறி பாசாங்கு செய்தது. புறாக்களோ தம்மிடமிருந்த உணவுகளைக் காகத்துக்குக் கொடுத்தன. அவை கொடுத்த தானிய வகைகளையும். இதர உணவுகளையும் தின்று தீர்த்தது காகம். காகத்தின் மிகப் பொருத்தமான வேஷத்தைப் புறாக்களால் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

மறுநாள் அதிகாலை நேரம் விடியலை நோக்கி பறவைகள் எல்லாம் தங்களது குரல்களை எழுப்பி சூரியனை வரவேற்றன. சேவல்கள் சிறகடித்துக் கூவ, கிளிகள் கீச் கீச் ஒலி எழுப்ப, குயில்கள் கூ கூ எனப் பாட புறாக்களும் குறு குறு என்று ஓசை எழுப்பின. கூடவே காகமும் கா... கா... கா.. என ஆனந்தமாக குரல் எழுப்பியது. அதன் குரலைக் கேட்ட புறாக்கள் அதிர்ச்சியுற்றன. தமக்குள் ஒரு அந்நியன் வந்து விட்டதைக் கண்ட புறாக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து காகத்தைக் கொத்திக் கொத்தி விரட்டி அடித்தன.

தப்பிப் பிழைத்த காகம் மறுபடியும் தன் இனத்தார் இருந்த இடம் நோக்கி வேகமாகப் பறந்து சென்றது. காகத்தின் இனத்தாரோ அதன் நிறத்தைப் பார்த்து விட்டு. அவையும் தமக்கு அந்நியன் இவனென்று கருதி. தங்களது அலகுகளால் ஆளுக்காள் அதன் முதுகில் கொத்திக் கொத்தி விரட்டின. உடல் உழைப்பால் வயிற்றை நிரப்ப சோம்பல் பட்டு அடுத்தவர் உழைப்பில் வாழ நினைத்து வேஷம் போட்ட காகம் எங்கு போவதென்று தெரியாது. அங்கும் இங்கும் அலைந்து திரிந்தது.

**உழைத்து வாழ வேண்டும். பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே. சுயமாகத் தேடுவதே நிலைக்கும்.**



**எல்லாப் பழங்களும் ஒரே வரிசையில் வருமாறும் ஒரேபழம் அருகருகே வராதபடியும் இடைவெளியான கட்டங்களை நிரப்புங்கள்!**

# கொய்யா



விலை குறைவாகவும் தெருக்கடைகளில் இலகுவாகவும் கொய்யாப்பழம் கிடைக்கும். அதிக சத்துக்கள் கொண்ட பழங்களுள் கொய்யாவே முதலிடம் வகிக்கிறது. கொய்யாப்பழத்தில் ஏராளமான மருத்துவக் குணங்கள் உள்ளன. நான்கு அப்பிள்கள் சாப்பிட்டால் கிடைக்கும் நன்மைகள் ஒரே ஒரு கொய்யாப் பழத்தில் கிடைக்கும் எனக் கூறுவார்கள். இதில் விற்றமின் பி, சி மட்டுமன்றி பொஸ்ப ரஸ், இரும்புச்சத்து என்பனவும் உள்ளன. நார்ச்சத்து இதில் இருப்பதால் நீரிழிவு நோயைக் கட்டுப் படுத்தி குருதியில் உள்ள சக்கரையின் அளவைக் குறைக்கும். மலச்சிக்கல் பிரச்சினையையும் தீர்க்கும். தினம் ஒரு கொய்யாப்பழம் சாப்பிட்டு வந்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். உடலில் புற்று நோய்க் கட்டிகள் ஏற்படுவதையும் தடுக்கும். கொய்யாப் பழத்தின் தோலில் அதிக சத்துக்கள் இருப்பதால் தோலை நீக்காமல் அப்படியே சாப்பிடுவது நலம். பங்களாதேஷின் தெற்குப் பகுதியில் தண்ணீர் கரை புரண்டோடும் ஆறு, கால் வாய்ப் பகுதிகளில் கொய்யாவை அதிகம் விளைச்சல் செய்கிறார்கள். நிலம் முழுக்க நீரிருந்தாலும் அங்கேதான் கொய்யாப் பழங்கள் காய்த்துக் குலுங்குகின்றன. படகுகளில் சென்றே விவசாயிகள் பழங்களை அறுவடை செய்வர். பங்களாதேஷின் ஜாலோகாட்டி மாவட்டத்தில் கிர்டிபஷா கால்வாய் பகுதியில் மிதக்கும். கொய்யாப் பழச் சந்தை உள்ளது. சத்துக்கள் பல நிறைந்த கொய்யாப் பழத்தை அதிகம் சாப்பிட்டால் வாந்தி மயக்கம் ஏற்படும். ஒரு நாளைக்கு 2 பழங்களுக்கு மேல் உண்பது கூடாது.

# விடுகதைக்கு விடை என்ன?

1. ஆண்டு தோறும் வரி; அடுத்தடுத்து வரும் வரி. அது என்ன?
2. கண்டது இருவர்; எடுத்தது பத்துப்பேர்; உண்டது ஒருவர். யார் அவர்கள்?
3. நீரும் இல்லை; நிலமும் இல்லை; கரை மட்டும் உண்டு. அது என்ன?
4. பந்திக்கு முந்தும்; படைக்குப் பிந்தும். அது என்ன?
5. வாசலிலே வண்ணப்பூ; தினம் தினம் மாறும் பூ. தெளிவாகத் தோன்றும் பூ. அது என்ன?
6. கயிற்றுக்கு வேலை கொடுத்தால் கல கல ஆட்டம். அது என்ன?
7. கண்டு பூக்கும் பூ; காணாமல் காய்க்கும் காய். அது என்ன?
8. வேட்டை ஆடாத மான்; .வேடர்கள் நிறைந்த மான். கொம்பு இல்லாத மான்; குரல் இல்லாத மான். அது என்ன?
9. பாடி வந்து பார்த்திடுவார்; பாகவதரும் அல்ல; நாடி வந்து ஊசியிடுவார். வைத்தியரும் அல்ல. அவர் யார்?
10. தச்சர், கொத்தர் செய்யாத தேர். தானே கிளம்பும் சரிவான தேர். அது என்ன?
11. தாறு மாறாகச் சுற்றினாலும் தலை சுற்றாது இவனுக்கு. இவன் யார்?
12. ஆயிரம் நூல் கொண்ட பின்னலை அள்ளி அள்ளித் தின்னலாம். அது என்ன?
13. உனக்குச் சொந்தம் இது; ஆனால் இதனை உபயோகிப்பவரோ அதிகம் பேர். அது என்ன?
14. வெள்ளைச் சீமாட்டிக்கு தலைமேல் விளக்கு. அவள் யார்?
15. நீரில்லாக் குளத்திலே நீண்ட கொடி ஒன்று இது. வாடாது; வதங்காது; பூக்காது; காய்க்காது அது என்ன?

## விடுகதைகளுக்கான விடைகள்

*1. ஜனவரி, பெப்ரவரி*
*2. கண்கள், விரல்கள், வாய்*
*3. சர்க்கரை*
*4. வலது கை*
*5. கோலம்*
*6. ஸ்கிப்பிங் (கயறு அடித்தல்)*
*7. வேர்க் கடலை (கச்சான்)*
*8. அந்தமான் (அந்தமான் தீவு)*
*9. நுளம்பு (கொசு)*
*10. புற்று (கறையான் புற்று)*
*11. காற்றாடி*
*12. இடியப்பம்*
*13. பெயர் (எமது பெயர்)*
*14. மெழுகுவர்த்தி*
*15. கைரேகை*

# நெருக்கடிகளைச் சந்திக்கும் நெஞ்சுறுதி

கிரேக்க மன்னனான அலெக்ஸ் சாண்டர் பாரசீகத்தை வெல்லவிருந்த சமயத்தில் அவர் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகி விட்டார். அது ஒரு விசித்திரமான நோயாக இருந்ததால் அவருடன் போர் முனைக்கு வந்த கிரேக்க மருத்துவர்களால் அந்த நோயைக் குணப்படுத்த முடியவில்லை. எதிரி நாட்டு பாரசீக மன்னனின் அரண் மனை மருத்துவர் அந்த நோயை எளிதில் குணப்படுத்தி விடுவார் என மன்னனுக்கு கூறப்பட்டது. எதிரி நாட்டு மன்னிடம் அலெக்ஸ் சாண்டர் சிகிச்சை பெறுவது ஆபத்தான ஒன்று என அரசனது நண்பர்கள் பலர் கருத்துத் தெரிவித்தார்கள். ஆனால் மன்னன் அந்த மருத்துவரையே அழைத்து வரச் சொன்னான். மருத்துவர் வந்தார். மன்னனின் உடலைப் பரிசோதித்தார். மறுநாள் மருந்துடன் வருவதாகக் கூறிச் சென்றார். மறுநாள் வைத்தியர் வந்த வேளை அலெக்ஸ் சாண்டரின் தளபதி மன்னனுக்கு அவசர அவசரமாக ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதில் "எதிரி நாட்டு மருத்துவரை நம்ப வேண்டாம். அவர் மருந்தெனக் கூறி விஷம் கொடுத்து உங்களைக் கொல்ல முயற்சிப்பார்" என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. அதனை வாசித்து முடித்த மன்னன். தன்னை நாடி வந்த மருத்துவரிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்து விட்டு அவர் கையில் இருந்த மருந்தை வாங்கி மள மள என குடிக்க ஆரம்பித்தார். கடிதத்தைப் படித்த மருத்துவர் "மாவீரரே நண்பர் எச்சரித்திருந்தும் என் மீது உங்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட்டது?" என்று கேட்டார். "நீங்கள் எதிரி நாட்டு மருத்துவராக இருப்பினும் நோயைக் குணப்படுத்துவதே உங்கள் தொழில். அந்தத் தொழிலுக்கு களங்கம் ஏற்படும் செயலை நீங்கள் செய்ய மாட்டீர்கள் என நான் நம்பினேன். அவ்வளவுதான்" என்றார். மன்னன் அலெக்ஸ் சாண்டரின் நோயும் குணமாயிற்று. கிரேக்க மருத்துவர்களுக்கு நோயைக் குணப்படுத்தும் வழி தெரியவில்லை. அந்த நோயைக் குணப்படுத்தும் எதிரி நாட்டு வைத்தியரை நம்பாது விடினும் பிரச்சினை தீரப் போவதில்லை. அந்த சிக்கலான சூழ்நிலையில் தான் அலெக்ஸ்சாண்டர் ஒரு தெளிவான முடிவுக்கு வந்தார்.



நெருக்கடிகளில் மனிதர்கள் எடுக்கும் முடிவுகளே அவர்களின் மன உறுதிக்கு அடையாளம் ஆகின்றன. அது மட்டுமல்ல அவர்களின் வாழ்க்கைச் சாதனைகளுக்கும் அவைகளே வழிவகுக்கின்றன.

## அமைச்சர்கள் இருவரும்...

ஒன்றான் ரெலோ. கட்சியின் செயலாளர் ந.சிறிகாந்தா இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச்செய்திக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வடக்கு மாகாண சபையின் இரண்டு அமைச்சர்கள் மீது தொடுக்கப்பட்ட ஊழல் மற்றும் அதிகார முறைகேடு குற்றச்சாட் டுக்கள் நிரூபிக் கப்பட்டிருப்பதாக இது குறித்து விசாரணை செய்வதற்கு என்று நியமிக்கப்பட்ட சுயாதீன விசாரணைக் குழு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்திருப்பதாக ஆதாரபூர்வமான செய்திகள் வெளியாகியுள்ளன. இது மிகப்பாரதூரமான விவகாரமாகும். 2014ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாகாண சபைத்தேர்தலில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வேண்டுகோளை ஏற்று மகத்தான மாபெரும் ஆதரவை வழங்கிய மக்களின் நம்பிக்கைக்கு மோசடி செய்த எவரையும் சகித்துக் கொள்ளமுடியாது.

ஏனைய இரண்டு அமைச்சர்கள் மீது தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட வில்லை என்று விசாரணைக்குழு தெரிவித்து இருந்தாலும்கூட ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது வடமாகாண சபையின் அமைச்சரவை முற்றுமுழுதாக மாற்றியமைக்கப்படுவதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அபார நம்பிக்கை வைத்த மக்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வழங்கக்கூடிய பிராயச்சித்தமாக இருக்கும்.

தனது தலைமையிலான அமைச்சரவையை முற்றுமுழுதாக மாற்றியமைப்பதற்கு முதலமைச்சர் இப்போது கடமைப்பட்டுள்ளார்.

அமைச்சர்களை நியமிப்பதற்கு முன்னர், ஆளும்கட்சி உறுப்பினர்களிடம் இருந்து அவர்களின் சுயவிபரக்கோவையை முதலமைச்சர் தானாகவே பெற்றுக்கொண்டார் என்பதையும், அதன் பின்னரே அமைச்சர்களை அவர் நியமித்தார் என்பதையும் நாம் மறந்துவிடவில்லை.

முதலமைச்சர் தவிர, ஏனைய நான்கு அமைச்சர்கள் மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாக, இரு வருடங்களுக்கு முன்னர் தந்தை செல்வநாயகத்தின் பிறந்தநாள் அன்று கொழும்பில், கூட்டமைப் பின் தலைவர் சம்பந்தனின் இல்லத்தில் நிகழ்ந்தகூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நான் சுட்டிக்காட்டி இருந்தேன். கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்களும் முக்கிய பிரமுகர்களும் சமுகம ளித்திருந்த அந்தக் கூட்டத்தில் எவரும் என்னை மறுத்துரைக்கவில்லை. ஆயினும் இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கைகள் எதனையும் அமைப்பு ரீதியாக முன்னெடுக்க கூட்ட மைப்புத் தவறியிருந்தது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறியே ஆக வேண்டும். வடக்கு மாகாண சபையில் ஆளும் கட்சியாக உள்ள கூட்டமைப்பு, தமிழினம் சம்பந்தப்பட்ட அடிப்படை அரசியல் பிரச்சினைகளை, அதன் ஒருங்கிணைப்புக்குழு ஊடாகக் கையாளும் அதேநேரத்தில், வடமாகாண சபையின் ஆளும் கட்சி, ஊழலற்றதும் பொதுமக்கள் நலன் சார்ந்ததுமான தூய நிர்வாகத்தை தனது எஞ்சிய பதவிக் காலத்தில் வடக்கு மாகாண மக்களுக்கு வழங்குவதற்கு உறுதிபூண்டு செயற்படவேண்டும். தூய்மையான கரங்களைக் கொண்டுள்ள முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் இதனைச் செயலாக்க முடியும் என்ற நல்ல நம்பிக்கை எங்கள் எல்லோருக்கும் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. (உ-5)

**தேவை**

ஜேர்மன் சப்பட் நாய் உடன் தேவை.

**076 638 8861**

**கடைகள் வாடகைக்கு**

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் கடைகள் வாடகைக்குண்டு அலுவலகங்களுக்கு ஏற்றது.

**077 162 0626** (CS 4730) (14)

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் தொடர் மாடியில் அமைந்துள்ள வீட்டிற்கு சமையல் தெரிந்த 50 வயதிற்குட்பட்ட பணிப் பெண் தேவை. மாதாந்த சம்பளமாக 20 000 ரூபா வழங்கப்படும்.

**077 732 0012, 011 238 0208**

**பணிப்பெண் தேவை**

சாவகச்சேரியிலுள்ள வீடு ஒன்றிற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு - 0774815025

**வீடு வாடகைக்கு**

யாழ். நகரில் குளிரூட்டப்பட்ட வசதியுடன் (A/C) கூடிய பெரிய மேல்மாடி வீடு தளபாடங்களுடன் நாள். கிழமை. மாத அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

A/C. NON A/C ROOMS FOR RENT.
077 2017824

SUPER BALL
සුපර් බෝල්
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 659
சீட்டிழுப்பு திகதி 05.06.2017 திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
30 47 62 64 X
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 47, 699, 768/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2886 திகதி: 05.06.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
09 27 39 58 Z
போனஸ் இல. 32
புதன்கிழமை ஜக்பொட்
ரூ. 64, 679, 307/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 1919

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1369
சீட்டிழுப்பு திகதி 2017.06.05
வெற்றி இலக்கங்கள்
05 09 27 37 K
ரூ. 12,848,808/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**சமையல் பணியாளர் தேவை**

இராசவீதி, நீர்வேலியில் அமைந்துள்ள கருணாலயம் சிறுவர் இல்லத்திற்கு தங்கிநின்று பணியாற்றக்கூடிய வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். நேரிலோ தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல: **021 321 6449, 077 416 1002**

தொடர்பு கொள்ளலாம் நேரம் : காலை 9.30 மணி முதல் பி.ப 3.30 மணிவரை

கருணாலயம்,
சிறுவர்இல்லம் கரந்தன், நீர்வேலி.
முகாமையாளர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11.03.1986 — விண்ணில் 17.06.2016



அமரர் **பரமேஸ்வரன் சஞ்செயன்** (ஜெனா)

கண்ணின் மணியாய் கட்டழகில் பெட்டகமாய்
மண்ணில் மலர்ந்த என் மகனே
மின்னி முழங்கமுன்
எம்மைவிட்டு பிரிந்தாயோ
கண்கள் குளமாகிறதே கண்ணே
உன்னைப் பிரிந்த
ஆண்டொன்று ஆகிறதெடா என்று
எம்மை பார்க்க வருவாயோ ஜெனா

ஜேர்மனி. அம்மா, அப்பா, சகோதரி, மைத்துனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நித்தியலட்சுமி குணபாலசிங்கம்

*(இளைப்பாறிய போதனாசிரியர்)*



தலையாழி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நித்தியலட்சுமி குணபாலசிங்கம் (இளைப்பாறிய போதனாசிரியர்) நேற்று (05.06.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேக்ஸ்பியர் நாகலிங்கம் - சொர்ணலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான செல்லையா - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குணபாலசிங்கம் (அதிபர்) இன் அன்பு மனைவியும் வளர்ப்பு மகனாகிய வீரையாவின் அம்மாவும் காலஞ்சென்றவர்களான Dr.யோகநாதன், இராமநாதன், அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி சிவகுமாரி யோகநாதனின் அன்பு மைத்துனியும் Dr.பவானி, சின்னையா (எஞ்சினியர் அமெரிக்கா), மாலினி, Dr.காந்திஜி, பாமினி, வதனி, சிவயோகன், சுதர்சினி, சறோ, Dr.சஞ்ஜெயன் சிவாஜினி, சிவசங்கர், ராதபிரியா, Dr.சிவந்தன், வித்தியா ஆகியோரின் அன்பு மாமியும் ஆரூரன், அரவிந்தன், அபிராமி ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2017) புதன்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல் மு.ப. 11 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

958/31, கே.கே.எஸ். வீதி,
தலையாழி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
0212220890

## நவாலி கலையோடை கண்ணகை அம்மன் ஆலயம் வைகாசி விசாகம்

வைகாசி விசாகத்தை முன்னிட்டு நவாலி கலையோடை கண்ணகை அம்மன் ஆலயத்தில் அம்பாளுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிசேகம், பூசை என்பன நடைபெற உள்ளன.

07.06.2017 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10 .00 மணிக்கு அபிஷேகமும், நண்பகல் 12.00 மணிக்கு பூசையும் நடைபெறும். பி.ப. 4.30 மணிக்கு பூசை நடைபெற்று அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலா வர உள்ளார்.

மேற்படி அபிசேகம், பூசை ஆகியவற்றில் கலந்து கொண்டு அம்பாளின் திரு அருட்காட்சியைத் தரிசித்து, இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அம்பாள் அடியார்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்றைய தினம் அடியார்கள் பொங்கல், வழிபாடுகளில் ஈடுபட்டு தங்கள் நேர்த்திகளை நிறைவு செய்யலாம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

ஆலய அறங்காவலர்கள்.

Job! Job! Job! ........ 077 802 1371 நீங்கள் O/L பயின்றவரா? இவ்விலக்கங்களுக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க. நாடு முழுவதும் 30 பேருக்கு முன்னுரிமை.

- நிர்வாக அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- செயல்திட்ட அதிகாரி
- முகாமைத்துவ உதவியாளர்
- மேற்பார்வையாளர்

அனுபவம் இல்லையா? தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலம் 12,000/= - 15,000/= பின் குறைந்தது 45,000/= + EPF, ETF

**உடனடி வேலை வாய்ப்பு**

1. OFFICE GIRL/ அலுவலக பெண்
2. OFFICE BOY / அலுவலக ஆண்
3. REGISTRAR / பதிவாளர் (தகைமை:- RETIRED REGISTRAR)
4. ADMINISTRATIVE OFFICER
5. LECTURER /விரிவுரையாளர் (தகைமை :-MCA ,M.Sc in Comp. Sc)
6. MARKETING OFFICER

CV உடன் நேரில் சமூகமளிக்கவும்

NORTH LANKA IIT
TOP FLOOR, PEOPLE'S BANK BUILDING
STANLEY ROAD, JAFFNA

**15 வகைத் தானியங்கள் கலந்த சத்துமா**

இலங்கையில் முதன் முதலாக குறிஞ்சாவில் இருந்து மென்பானம் (D-Cola), குறிஞ்சா தேயிலை, கோப்பி யுத்த கால சூழ்நிலையில் தயாரித்த பெருமை BIO TEC International Ltd Thirunelvely Company பெற்று கொண்டுள்ளது. தற்போது 15 வகை தானியங்களையும் சேர்த்து மிகச்சிறந்த சத்துமா தயாரித்து மக்கள் மனதில் நீங்கதாக இடம் பிடித்துள்ளது. நீங்களும் இதை உபயோகப்படுத்தி பயன் பெறுங்கள் இப்பொழுது குறுகிய காலத்தில் 06.06.2017 முதல்

கிடைக்கக்கூடிய இடம் - யாழ். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபம்.
இல.161, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
நிரந்தரமாக கிடைக்கக்கூடிய இடம்

BIO - TECH International Ltd
131/2, Palaly Road, Thirunelvely Jaffna.
T.P : 021 459 0907, 021 32 22 0156
Mobile - 077 7048 181

விநியோகஸ்தர் - அம்பிகைபாகன் மல்ரி சொப்
பண்டத்தரிப்பு வீதி, தெல்லிப்பழை.
077 0059 741, 071 3080 947
(சந்தைப்படுத்த விரும்பிய விநியோகஸ்தர்கள் தயவு செய்து கொம்பனியுடன் தொடர்பு கொள்ளவும்)

## வடக்கில்...

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்துக்கு உட்பட்ட பெரியவெளி கிராமத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவிகள் மூவர் கூட்டாகப் பாலியல் வதைக்கு உட்படுத் தப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவத் தைக் கண்டித்து கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மூதூரில் பாடசாலை மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், வடக்கு மாகாணத்தில் இதற்கு ஆதரவாகக் குரல் கொடுத்து முதலாவது போராட்டம் நடைபெறவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் வித்தியானந்தக் கல்லூரிச் சமூகத்தினர், இன்று காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரையிலான ஒரு மணி நேரம் பாடசாலையின் முன்பாக, முதன்மை வீதிக் கரையில் நின்று கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர். இதற்கான தீர்மானம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நேற்றைய நிர்வாகக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது. (து-5-102)

## இன்றைய...

மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவரது நெருங்கிய உறவினரின் இறப்புச் சடங்கில் கலந்துகொள்வதற்காக நேற்றுக் காலை திடீரெனக் கொழும்புக்குச் சென்றமையினால் இன்றைய அமர்வில் அவர் பங்கேற்கமாட்டார். இதனால் அறிக்கை இன்று சபை யில் முன்வைக்கப்படாது.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசா ரணை செய்த குழுவின் அறிக்கை, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம்கடந்தமேமாதம்19 ஆம்திகதி கையளிக்கப்பட்டது. மாகாண சபையின் கடந்த அமர்வில், விசாரணை அறிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, அடுத்த அமர்வில் (இன்றைய) வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கிடையில், விசாரணை அறிக்கையின் முக்கிய விடயங்கள்நேற்றைய தினம் வெளியே கசிந்திருந்தது. கல்வி அமைச்சர் த.குருகுலராசா மற்றும் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் பதவி விலக வேண்டும் என்று அதில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கை இன்றைய மாகாண சபை அமர்வில் முன் வைக்கப்பட்டு விவாதிக்கப்ப டும் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முதலமைச்சர் சபை அமர்வில் கலந்துகொள்ள மாட்டார் என்பதால், அறிக்கை வெளியிடப் பட மாட்டாது என்று தெரிய வருகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சரின் சம்பந்தியான, வர்த்தகர் குணசேகர கொழும்பில் உயிரிழந்தார். அவரது இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறவுள்ளன. அதில் பங்கேற்பதற்கு நேற்றுக் காலை, கொழும்பு நோக்கி முதலமைச்சர் பயணமானார். (உ-5-101)


## அமைச்சர்கள்...

கசிந்த நிலை யில் உதயன் அவற்றை நேற்று வெளியிட்டது. இதனையடுத்து முதலமைச்சருக்கு நெருக்கீடுகள் வராத வகையில் அமைச்சர்கள் இருவரும் உடனடியாகப் பதவி விலகுவார்கள் என்ற எதிர்பார்ப்பு அரசியல் வட்டாரங்களில் இருந்தது. ஆனால், அமைச்சர்கள் இருவரும் உடனடியாகப் பதவி விலகுவ தற்கான சாத்தியங்களோ ஏற்பாடுகளோ தென்படவில்லை என்று மாகாண சபை அரசியல் வட்டாரங்கள் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தன. அமைச்சர்களின் இந்த நிலைப்பாடு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வர னுக்கு கடும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்று அரசியல் அவதானிகள் எடுத்துக்காட்டுகின்றனர். விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து சமூக ஊடகங்களில் அமைச்சர்கள் இருவரும் பதவி விலகவேண்டும் என்று சரமாரியாகக் கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன. அவர்களைப் பதவியிலிருந்து முதலமைச்சர் நீக்க வேண்டும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இத்தகையதொரு நிலையில் முதலமைச்சர் மீது அழுத்தம் அதிகரிக்கவே செய்யும் என்று அவதானிகள் கூறுகின்றனர். (உ)

---

# மரண அறிவித்தல்கள்

## அப்பையா இராசலிங்கம்



கொக்குவில் மேற்கு, வராகி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், 77/48, இராமநாதன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா இராசலிங்கம் நேற்று (05.06.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பையா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற துரை - பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயராணியின் அன்புக்கணவரும் ரஜனிகாந், சிறிரஞ்சினி காலஞ்சென்ற விஜயகாந் மற்றும் சன்ஜீவ்காந் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சியாமளா, தயாபரன், சுயாத்தா (பிரதேச செயலகம் வேலணை) ஆகியோரின் அன்புமாமனாரும் தனுஜன், அபினாஷ் காலஞ்சென்ற யஸ்மிதன் மற்றும் லக்ஸ்மிதன், ருஷானி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2017) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**77/48, இராமநாதன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 222 6307**

---



## குமாரசாமி யோகராஜா (யோகர்)

திருகோணமலை, சாம்பல்தீவைப் பிறப்பிடமாகவும் கைதடி, நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி யோகராஜா நேற்று (05.06.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் அற்புதராணியின் அன்புக் கணவரும் கம்ஷாயினி (கனடா)யின் பாசமிகு தந்தையும் தபோதரனின் (கனடா) அன்பு மாமனும் இனிபன், அதிபன், மதீபன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் சிவலட்சுமி (திருகோணமலை), சிவ றஞ்சிதம் (திருகோணமலை), மகேஸ்வரன் (திருகோணமலை), தயாளகுமாரி (பிரான்ஸ்), ரவீந்திரகுமாரி (பிரான்ஸ்), கோகிலகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அம்பிகாதேவி மற்றும் சரஸ்வதி, விஜயலட்சுமி, செந்தில்நாதன் (மினிபஸ்சாரதி), புனிதராணி (கனடா), கணேசலிங்கம், கமலினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாடசாலை வீதி,**
**கைதடிநுணாவில், சாவகச்சேரி.**

**தகவல்: குடும்பத்தினர்**
**075 506 0390**

---

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கச்சிப்பிள்ளை கணபதிப்பிள்ளை



பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி இணுவில் தெற்கைச் சேர்ந்த தங்கச்சிப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்கள் 03.06.2017 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07.06.2017 புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி,
இணுவில் தெற்கு

தகவல்
குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்

## திருமதி ஜெயஸ்ரீ சற்குணலிங்கம்



பிறப்பு 14.06.1960 இறப்பு 05.06.2017

இராஜவீதி, சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், மார்க்கம்புரை கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயஸ்ரீ சற்குணலிங்கம் (05.06.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - இரத்தினம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் மனோன்மணி தம்பதியரின் மருமகளும் சற்குணலிங்கம் (பிரதேச செயலகம் கோப்பாய்) அவர்களின் அன்பு மனைவியும் சசிரேகா (மாநகரசபை), கேசவரூபன் (மாநகரசபை), கேசனா (மாணவி-பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தாயும் பிரதீபனின் (ஆசிரியர் - கிளிநொச்சி பாண்டின்குளம் மகா வித்தியாலயம்) அன்பு மாமியும் இரத்தினேஸ்வரி (சிறுப்பிட்டி), சத்தியபாமா (சிறுப்பிட்டி), விமலாதேவி (சிறுப்பிட்டி), இரவீந்திரன் (ஜேர்மனி), ஸ்ரீபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மார்க்கம்புரை கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 5782 371**

---

# மரண அறிவித்தல்

## கௌசலா யோகநாதன்



யாழ். ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கௌசலா யோகநாதன் (03.06.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் யோகநாதன் - சுப்புலெட்சுமி தம்பதியரின் அன்புமகளும் ரவீந்திரனின் அன்புச்சகோதரியும் தர்சினியின் மைத்துனியும் திவ்யசங்கர், கோபிசங்கர், திவ்யா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோம்பயன்மணல் இன்பம் மலர்ச்சாலையில் இன்று (06.06.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**573, மானிப்பாய் வீதி,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்: சிவசங்கர் யோகநாதன்**
**077 0250 339**

---

# மரண அறிவித்தல்

## தவப்பிரகாசம் டேவிட் தேவபாலன்

ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவப்பிரகாசம் டேவிட் தேவபாலன் 04.06.2017 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் சர்மிளாவின் அன்புக் கணவரும், தவப்பிரகாசம் - காலஞ்சென்ற பொன்மலர் தம்பதிகளின் அன்பு மகனும், அந்தோனிப்பிள்ளை - மேரியோசப் தம்பதிகளின் அன்பு மருமகனும், கிங்ஸ்லி கிருபாகரன் (ஜேர்மனி), மேரி ஜெயந்தினி (ஆசிரியர் - யா/கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்), ஜெயதர்சினி (முத்து பிறிண்ரேர்ஸ் - சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சதீஸ்குமார், யூட்குமார், சியாமளா, வினோத்குமார், துயாவந்தி கிறிஸ்தோபல் சில்வா, மரியகஷில்டா, நிரஞ்சினி, சத்தியன், பவிதா ஆகியோரின் மைத்துனரும், ஜோய்ஸ், மார்க் சறோமி, சமிக்கா ஆகியோரின் சிறிய தந்தையும், எட்வின் அன்றூ, கிறிஸ்ரினா, ஓஷனேஸ் லவன்சியா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.06.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று கிறிஸ்து அரசர் ஆலய கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாகியப்புலம் வீதி,**
**ஏழாலை வடக்கு, ஏழாலை.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## அடையாள...

எனினும் சந்தேக நபர்கள் எவரும் அடையாளம் காட்டப்படாத நிலையில், அவர்களை இம்மாதம் 12ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.றிஸ்வான் உத்தரவிட்டார்.

கடந்த 28ஆம் திகதி அறநெறிப் பாடசாலைக்குச் சென்ற 7 மற்றும் 08 வயதுடைய மூன்று சிறுமிகளையும் பாலியல் வதைக்கு உட்படுத்தினர் என்ற சந்தேகத்தில் மூதூர் பொலிஸாரினால் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களை இனம்காட்டுவதற்காக நேற்று நீதிமன்றத்தில் அணிவகுப்பு நடத்தப்பட்டது.

எனினும், இந்த அணி வகுப்பில் சந்தேகநபர்கள் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை. சந்தேகநபர்களின் விந்தணுக்கள் பரிசோதனைக்கு அனுப்பிவைத்துக்கப்பட்டுள்ளன என மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-ய-45)

## மூதூர்...

விடுதி வளாகத்திலிருந்து ஆரம்பமான பேரணி பல்கலைகழக பிரதான வாயில் வரை சென்றது.

நாமத்தில் மட்டும் நல் லாட்சியா, நீதி வேண்டும் பெண்கள் நீண்டு வாழ, பிஞ்சுகளை வதைக்கும் நஞ்சுகளைத் தூக்கிலிடுங்கள், மொட்டுக்களை மலர விடுங்கள் போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வித்தியா மற்றும் சேயா போன்ற சிறுமிகளுக்கும் நடந்த சம்பவங்களுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. குறித்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கிழக்குப் பல்கலைகழகக் கலைத்துறை மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

(த-ய-47)

## லஞ்சம்...

முன்தினம் கைது செய்யப்பட்டார்.

தனது பிள்ளையை அந்தப் பிரதேசத்தின் பிரபல ஆண்கள் பாடசாலையில் அடுத்த வருடம் முதலாம் ஆண்டில் சேர்க்க அந்தப் பெண் விண்ணப்பம் செய்திருந்தார். விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதியப்பட்டிருக்க வேண்டியது கட்டாய நிபந்தனை என்பதால் அவரது பெயரைப் பதிவதற்காகக் கிராம அலுவலரிடம் சென்றுள்ளார். ஆனால் பெயரை வாக்காளர் பட்டியலில் பதிவதற்கு கிராம அலுவலர் 75 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகக் கேட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதில் முற்பணமாக 35 ஆயிரம் ரூபாவை வழங்க ஒப்புக்கொண்ட அந்தப் பெண், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்குத் தகவல் கொடுத்த பின் முற்பணமாக 35 ஆயிரம் ரூபாவை கிராம அலுவலரிடம் வழங்கினார். அந்தச் சமயம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளிடம் கையும் மெய்யுமாக மாட்டிக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-5)

## நிதி அமைச்சு...

அமெரிக்கா சென்றுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் ரவியையும், ரவி குற்றம் சுமத்தும் மற்றைய அமைச்சரையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

“தேசியப்பட்டியல் ஊடாக வந்த அவர் நாடு பற்றிச் சிந்திப்பதில்லை. அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையே மோதலை ஏற்படுத்துவதற்கு கூட்டு அரசில் இருக்கும் சிலர் முயற்சிக்கின்றனர். நிதி அமைச்சிலிருந்து விலக்கப்பட்டுள்ளதால் எனக்குக் கவலை எதுவும் இல்லை. ஏனெனில், அரசு என்ற பெரும்வட்டத்தில் நான் ஒரு சிறுபுள்ளி மாத்திரமே. பதவி என்பது நிரந்தரமல்ல. அது எந்நேரத்திலும் மாறலாம்” என்று ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார் அமைச்சர் ரவி.

பதவியேற்பு நிகழ்வின்போது நிதி அமைச்சர் மங்கள சமரவீர வழங்கிய முத்தம் பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கும் அவர் பதிலளித்தார். “இதை வேறு கோணத்தில் திரிபுபடுத்தப் பார்க்கின்றனர். நாட்டில் கணக்கீட்டுத் துறையில் அனுபமிக்க அமைச்சர் ஒருவரிடமிருந்து நிதி அமைச்சு எடுக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றிப் பேசாது, இவ்வாறான விடயங்களைப் பற்றிக் கதைப்பதில் என்ன பயன்?'' என்றார் அவர்.

(உ-5)

## 3 சிறுவர்கள்...

செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 3 பேர் தேடப்பட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது:

குறித்த பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 8 இல் பயிலும் இரு சிறுவர்களையும், தரம் 9 இல் பயிலும் ஒரு சிறுவனையும் கடற்றொழிலுக்குச் சென்று வரும் 7 பேர் நீண்ட காலமாகப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கி வந்துள்ளனர்.

குறித்த சிறுவர்களில் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்துப் பொலிஸார் துரிதமாகச் செயற்பட்டமையினால் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனைய மூவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களை வைத்தியசாலையில் அனுமதித்து மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கும், சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-101)

## வற்றாப்பளை..

முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தின் அம்மன் மண்டபத்திலிருந்து தீர்த்தக் குடம் எடுக்கப்பட்டது. முள்ளியவளை பெருந்தெரு வழியாக வற்றாப்பளை வீதிக்கு வந்து புரரிக்குடா ஊடாக ஊற்றங்கரை விநாயகர் அலயத்தை சென்றடைந்தனர். அங்கிருந்து தண்ணீரூற்று முல்லைத்தீவு வீதி வழியாக சிலாவத்தை சந்திக்குச்சென்று பின் அங்கிருந்து கள்ளப்பாடு ஆதிவைரவர் கோயிலில் மடப்பண்டம் எடுத்தது. கள்ளப்பாடு தீத்தக்கரையில் வைத்து வைரவருக்கும், அம்பாளுக்கும், கடலன்னைக்கும் சிறப்பு பூசைகள், அபிசேக ஆராதனைகள் நடைபெற்றன. மாலை 6 மணியளவில் சமுத்திரத்தில் இறங்கி சரியான அலை வந்ததும் தீர்த்தம் பெறப்பட்டது.

எடுக்கப்பட்ட தீர்த்தக் குடம் சென்ற வழியூடாகவே காட்டா விநாயகர் ஆலயத்திற்குத் திரும்பியது. வீதிகள் தோறும் பக்தர்கள் கும்பம் வைத்தும், தேங்காய் அடித்தும் அம்மனை வழிபாடு செய்தனர். முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தை வந்தடைந்த தீர்த்த நீரில் ஒருகிழமைக்கு விளக்கு எரிக்கப்படும். எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காட்டா விநாயகருக்கு பொங்கல் இடம்பெறும்.

12ஆம் திகதி திங்கட்கிழமை காலைவேளை அங்கிருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்குத் தீர்த்தம் கொண்டுவரப்பட்டு வைகாசி விசாகப் பொங்கல் சிறப்புற இடம்பெறும்.

(உ-7)

## சக கைதிகள்...

இவர் திடீர் சுகவீனம் காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார். உடற்கூற்றுச் சோதனைகளின் பின்னர் சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு சனிக்கிழமை மாலை தருமபுரத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்றையதினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் கைதிகள் மூவரை முன்னிலைப்படுத்தினர். சிறைச்சாலையில் சக கைதிகள் நடத்திய தாக்குதலிலேயே மகேந்திரன் உயிரிழந்தார் என அவர்கள் சாட்சியம் அளித்தனர்.

கைதிகள் மூவரையும் வவுனியா மற்றும் தருமபுரம் பொலிஸ் நிலையங்களில் முழுமையான வாக்குமூலம் அளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். வாக்குமூலம் வழங்குவதில் திருப்தி இல்லாவிடில் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகி முழுமையான வாக்குமூலம் வழங்குமாறும் பணித்தார்.

அதேநேரம் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தி விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

(உ-ய)

## ஐ.நா. தீர்மானம்...

பெறவுள்ளது. இதற்கான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள மகிந்த அணியால் கொண்டுவரப்பட்டுள்ளது. விவாதத்தை மகிந்த அணி நாடாளுமன்ற உறுப் பினர் தினேஸ் குணவர்தன ஆரம் பித்து வைப்பார். ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு கடந்த மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெற்றது. இதில் இலங்கை தொடர்பான தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. 2015இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தி லுள்ள விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தி இலங்கைக்கு மேலும் இரண்டு வருடகால அவகாசம் வழங்கப்பட்டு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்குரிய பிரேரணையை மகிந்த அணி கொண்டு வந்திருந்தது. விவாதம் நடைபெறும் தினத்தன்று, 52 உறுப்பினர்களைக் கொண்ட பொது எதிரணியான மகிந்த அணிக்கு விவாதத்தில் உரையாற்றுவதற்கு குறைந்த நேரமே ஒதுக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டி மகிந்த அணி சர்ச்சையைக் கிளப்பியது. இதனால் நாடாளுமன்றத்தில் அமளிதுமளி ஏற்பட்டது. இதையடுத்து சபை நடவடிக்கைகள் மறுநாள் வரை ஒத்திவைக்கப்பட்டது. இதனால், ஜெனீவாத் தீர்மானம் குறித்த விவாதமும் பிற்போடப்பட்டது. அந்த விவாதமே இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

போரால் உயிரிழந்த அனைத்து மக்களையும் நினைவுகூருவதற்குப் பொதுவானதொரு நாளை ஒதுக்க வேண்டும் என்ற விடயம் உட்பட முக்கிய விவகாரங்கள் தொடர்பான தனிநபர் பிரேரணைகள் மீதான விவாதம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

(உ-5)

## பதவி விலக...

வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீதான ஊழல், நிர்வாக முறைகேடுகள் தொடர்பில் விசாரணை நடத்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நியமித்த குழு தனது அறிக்கையில், வடக்கு மாகாண அமைச்சர்களான ஐங்கரநேசன் மற்றும் குருகுலராசா இருவரும் பதவி விலக வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

“இந்தியாவில் நேருவின் காலத்தில், தொடருந்து தடம்புரண்டதற்கு அந்தத் துறைக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் உடனடியாகப் பதவி விலகியிருந்தார். அந்த அமைச்சர், தொடருந்துப் பாதையை அமைக்கவுமில்லை, தொடருந்தைச் செலுத்தவுமில்லை. ஆனால் பொறுப்புக் கூறுதல் அடிப்படையில் பதவி விலகியிருந்தார் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுகின்றேன் ” என்றார் தவராசா.

(உ-5)

## திருடி...

மற்றும் த.குருகுலராசா இருவரையும் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நியமித்த விசாரணைக் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்த நிலையில் யாழ். நகரில் நேற்று மாலை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டிருந்த விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம், மேற்படி விடயம் தொடர்பில் உதயன் செய்தியாளர் கருத்துக் கேட்டார்.

“ஊடகத்துக்கு கருத்துக் கூற மாட்டேன். இது முறையல்ல. உதயன் திருடிப் போட்டமை தொடர் பில் கருத்துக் கூற முடியாது. நெறிமுறைகளுக்கு கட்டுப்பட்டவன் நான்” என்று பதிலளித்துள்ளார்.

இதேவேளை, விசாரணை அறிக்கை அமைச்சர்களுக்கு முதலமைச்சரால் அனுப்பப்பட்டுள்ளது என்று தகவலறிந்து அது பற்றி விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் கடந்த சனிக் கிழமை பிற்பகல் உதயன் வினவியது. ஆனால், “அப்படியெதுவும் நடக்கவில்லை” என்று அவர் மறுத்திருந்தார். இந்த நிலையிலேயே உதயன் திருடிச் செய்தி வெளியிட்டது என்று அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

(உ-5-8)

## மகிந்த...

பத்து நாள்கள் பயணமாக ஜப்பான் சென்றுள்ள மகிந்த ராஜபக்ச, டோக்கியோவில் இருந்து கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு கூறினார்.

“இலங்கை அரசின் அழிவுகரமான கொள்கைகளால், தம்மால் தப்பிப்பிழைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, ஜப்பானில் வசிக்கும் இலங்கையர்கள், குறிப்பாக வாகன ஏற்றுமதியாளர்களான வர்த்தகர்கள் தெரிவித்தனர். இந்த விவகாரத்தை அரசிடம் எடுத்துச் செல்லுமாறு அவர்கள் கூட்டு எதிரணியிடம் கேட்டுக் கொண்டனர்” என்றும் மகிந்த ராஜபக்ச கூறினார்.

(உ-5)

## அதிகார...

அவற்றைச் செய்வது தவிர்க்க முடியாது என்று வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ. ஐங்கர நேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் உலக சுற்றாடல் தின நிகழ்ச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள எருமைத்தீவில் நேற்று நடைபெற்றது. ‘மக்களை இயற்கையோடு இணைத்தல்’ என்னும் கருப்பொருளுக்கு அமைவாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அமைச்சு அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

13ஆவது திருத்தச் சட்டத்தில் சுற்றுச்சூழல் தொடர்பான விடயங்கள் கொழும்பு அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் பொதுவான ஒருங்கிசை நிரலில் இடம்பெறுகிறது. இதற்கு, நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறாமல் சுற்றுச்சூழல் விவகாரங்களில் நாங்கள் தலையிட முடியாது என்று வியாக்கியானம் செய்யப்படுகிறது.

மாகாணசபை முறைமை, இலங்கையில் இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வாக, குருதி சிந்திய ஆயுதப் போராட்டத்தின் விளைவாகத் தரப்பட்ட ஒரு தீர்வு. இதற்கு அதிகாரங்கள் இல்லை என்பது எங்களுக்குத் தெளிவாகவே தெரியும். ஆனால், எமது அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கும் அதிகாரங்களைப் பெறுவதற்குமான தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்பதற்கான ஒரு தளமாகவே மாகாண சபையை ஏற்றுக்கொண்டோம். அதிகாரங்களுக்காகப் போராடிய இனம் நாம். அதிகாரிகளுக்கு சுற்றறிக்கைகளை மீறிச் செயற் படுவது முடியாமல் இருக்கலாம். ஆனால் எமது இயற்கை வளங்கள் அபிவிருத்தி என்ற பெயரால் சுரண்டப்படும்போது அரசியல்வாதிகள் சுற்றறிக்கைகளுக்கு கட்டுப்பட்டு, அதிகாரங்கள் இல்லை என்று சொல்லிவிட்டுக் கண்டும் காணாமல் இருக்கமுடியாது.

சுற்றுச்சூழல் பாதிப்பு என்று நிராகரிக்கப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்த விழைந்தவர்கள், தங்கள் எண்ணம் ஈடேறவில்லை என்ற காரணத்துக்காகக் குற்றஞ்சாட்டலாம். எங்கள் எல்லோரையும்விட எமது சூழல் முக்கியம். நாம் மட்டுமல்லாமல், அடுத்த சந்ததிகள் வாழுவதற்காகவும் அதிகாரங்கள் இல்லாத விடயங்களாக இருந்தாலும், உரிமைகளைக் கேட்டுப் போராடும் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் அவற்றைக் கையில் எடுப்பது தவிர்க்க இயலாதது - என்றார்.

“அண்மையில் மன்னார் பகுதியில் விளையாட்டு நிகழ்வொன்றிற்குச் சென்றிருந்தேன் அங்கு விளையாட்டுக்கள் நடந்து கொண்டிருந்தபோதே பெரும் வெடி சத்தங்கள் கேட்டன. இராணுவத்தினரின் பயிற்சி முகாம் பாடசாலைக்கு அருகில் இருக்கிறது என்பதை அதிபர் சொல்லக் கேட்டறிந்துகொண்டேன். அங்கு பெரிய அளவிலான வெடி சத்தங்கள் அடிக்கடி கேட்பதாகவும் அவர் தெரிவித்தார். இவ்வாறான பயிற்சி முகாம்களை வேறு இடத்திற்கு மாற்றவேண்டும்” என்றார் நிகழ்வில் பேசிய வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராசா.

வடமாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, விவசாய அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் சி.வசீகரன், கூட்டுறவு ஆணையாளர் க.சிவகரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.குயின்ரஸ், பூநகரி பிரதேச செயலாளர் சி.கிருஷ்ணேந்திரன், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். சுற்றுச்சூழல் நாள் நினைவாக மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன.

(உ-5-3-34)

## சிறிமுருகன் இறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 6
புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்டத் தொடரில் மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகம் இறுதிக்குத் தகுதி பெற்றது.
புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் கொக்குவில் காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகமும் மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதின.
நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது காமாட்சி அணி.
அந்த அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெயரூபன் 20 ஓட்டங்களை பெற்றார்.
84 ஓட்டங்களை இலக்காக கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய சிறிமுருகன் அணி 9 பந்துப்பரிமாற்றங்களில் 88 ஓட்டங்களை பெற்று 5 இலக்குகளால் வெற்றிபெற்றது. அதிக பட்சமாக தனுசன் 35 ஓட்டங்களையும் வரன் 19 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-108)



# சென். ஹென்றிஸ் கபடியில் மகுடம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கபடியில் 20 வயது ஆண்கள் பிரிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 42:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாம் இடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி தனதாக்கியது. (ம-422)

## றேஞ்சர்ஸ் - இளைஞர் இறுதிக்குள் சென்றன

யாழ்ப்பாணம், ஜூன் 6
கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட 19 வயது அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் அண்ணா சிலையடி இளைஞர் கழகம் என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.
கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது. முதல் பாதியில் கோல் எதுவும் பதிவாகவில்லை. இரண்டாம் பாதியிலும் அதே நிலைதான். வெற்றியாளர்களைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமனிலை தவிர்ப்பு உதையில் 4:2 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற அரையிறுதியில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகமும் வல்வை ஆதி சக்தி விளையாட்டுக் கழகமும் மோதின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் அண்ணா சிலையடி இளைஞர் அணியின் சிந்துயன் ஓர் கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகம். (ம-108)

## எல்லேயில் சிறிபதி சம்பியனானது

கிளிநொச்சி, ஜூன் 6
பச்சிலைப்பள்ளி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான எல்லே தொடரில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது சிறிபதி இளைஞர் கழகம்
பச்சிலைப்பள்ளி இளைஞர் கழகங்களுக்கு இடையிலான எல்லே தொடர் கடந்த சனிக்கிழமை பளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. அதிசயம் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து துர்க்கா விளையாட்டுக் கழகமும் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து சிறிபதி விளையாட்டுக் கழகமும் இறுதியாட்டத்தில் மோதின.
இரு அணிகளுக்கும் தலா 35 பந்துவீச்சுக்கள் வழங்கப்பட்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய துர்க்கா அணியினர் 3 ஓட்டங்களை பெற்றனர். 4 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிறிபதி அணி 11 பந்துகள் மீதமிருக்க வெற்றிபெற்றது. (ம-6)

## எறிபந்தாட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுக்கள்வரிசையில் இருபாலாருக்குமான எறிபந்தாட்டத் தொடர் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளன.
17 வயது ஆண்கள் பிரிவு ஆட்டத்தில் 18 பாடசாலை அணிகளும் 20 வயது ஆண்கள் பிரிவில் 13 அணிகளும், 17 வயது பெண்கள் பிரிவில் 21 அணிகளும், 20 வயது பெண்கள் பிரிவில் 18 அணிகளும் பங்கு பற்றவுள்ளன. (ம-108)

## பாண்டியாவை பாராட்டுகிறார் விராட் கோக்லி

முதல் பந்திலிருந்தே அடித்தாடும் வல்லமை படைத்தவர் ஹார்டிக் பாண்டியா இவ்வாறு பாராட்டினார் கோக்லி.
பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் தொடர்ந்து மூன்று சிக்சர்களை விளாசினார் பாண்டியா. அவர் முதல் பந்தில் இருந்தே அடித்தாடக்கூடிய வல்லமை படைத்தவர். டோனிக்கு முன்னர் பாண்டியாவை இறக்கலாமா என்பது தொடர்பில் ஆலோசித்தபோது அனைவரும் இந்த முடிவை ஏற்றனர் என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)



## யவ்னா வொறியர்ஸ் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 6
இலங்கை வங்கியின் ஊழியர்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் யவ்னா வொறியர்ஸ் சம்பியனானது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கிங்ஸ் ஒவ் வன்னி அணியை எதிர்த்து யவ்னா வொறியர்ஸ் அணி மோதியது. டக்சன் பதிவுசெய்த கோலால் முதல் பாதியின் முடிவில் முன்னிலை பெற்றது யவ்னா வொறியர்ஸ். இரண்டாம் பாதியில் டக்சன் தனதும் அணியினதும் இரண்டாவது கோலையும் டக்சன் பதிவுசெய்தார். முடிவில் யவ்னா வொறியர்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-2[illegible])



## நெல்லியடி மத்திய கல்லூரி கபடியில் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப் பெண்கள் பிரிவினருக்கான கப்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நெல்லியடிமத்திய கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி மோதியது. 28:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது நெல்லியடி மத்திய கல்லூரி அணி. மூன்றாம் இடத்தை பண்டத்தரிப்பு ஜசிந்தா கல்லூரி அணி பெற்றது. (ம-422)

## காலிறுதியில் வோஸ்னியாக்கி

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றார் கரோலின் வோஸ்னியாக்கி.
டென்மார்க் வீராங்கனை வோஸ்னியாக்கியை எதிர்த்து ரஷ்ய வீராங்கனை கஸ்னெட்சோவா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 6:1, 4:6, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார் வோஸ்னியாக்கி. (ம)

## ராமோஸின் தலைமை மிகவும் அபாரமானது

கால்பந்தாட்ட உலகில் ஓர் வீரராக ரொனால்டோ எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகிறாரோ அதேபோல் ஓர் தலைவராக மிகவும் சிறப்பாகச் செயற்படுகிறார் சேர்ஜியோ ராமோஸ்.
ஐரோப்பிய கால்பந்துக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற கால்பந்துத் தொடரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் வெற்றிபெற்று ராமோஸின் தலைமையிலான ரியல் மட்ரிட் சம்பியனானது.
இந்தத் தொடர் மட்டுமல்லாமல் கடந்த ஒரு வருடத்தில் முக்கிய தொடர்கள் அத்தனையிலும் ரியல் மட்ரிட் அணியை மகுடம் சூட வைத்துள்ளார் ராமோஸ்.
கடந்த வருடம் மே மாதம் நடைபெற்ற ஐரோப்பிய கால்பந்துத் தொடர், கடந்த டிசெம்பரில் நடைபெற்ற பன்னாட்டு கால்பந்து சம்மேளனத்தின் கழகங்களுக்கான கால்பந்தாட்ட உலகக்கிண்ணம், நடப்பு வருட லா லிகா தொடர், நடப்பு வருட சம்பியன்ஸ் லீக் என்று அத்தனை கிண்ணங்களையும் ரியல் மட்ரிட் அணி கைப்பற்ற ராமோஸின் ஆக்ரோசமான தலைமைத்துவம் முக்கிய காரணம். இதனால்தானோ என்னமோ அவரை எதிர்வரும் 2021ஆம் ஆண்டு வரை ரியல் மட்ரிட் நிர்வாகம் ஒப்பந்தம் செய்துள்ளது. (ம)






# போராட மறந்தது பாகிஸ்தான் அணி

மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இந்தியாவிடம் இலகுவாக வீழ்ந்தது பாகிஸ்தான் அணி. இதையடுத்து அந்த அணியின் முன்னாள் வீரர்கள் பலரும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். சமூக வலைத்தளங்களிலும் பாகிஸ்தான் மிக மோசமாக விமர்சிக்கப்படுகிறது. பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் இம்ரான் கான், "பாகிஸ்தானின் கிரிக்கெட் கட்டமைப்புக்கள் மாற்றியமைக்க வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார். பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் அப்ரிடி, "பாகிஸ்தான் அணியின் ஆதரவாளனாக நான் உள்ள போதிலும் இந்தியாவின் வெற்றியை ஏற்க வேண்டிய அவசியம் உள்ளது. அந்த அணி வலிமையான அணி என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளது. பாகிஸ்தானின் களத்தடுப்பு மிகவும் மோசமாக அமைந்தது" என்று விமர்சித்தார். பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ரியாஸ் 8.4 பந்துப்பரிமாற்றங்கள் வீசி 87 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தார். இலக்குகள் எதையும் கைப்பற்றவில்லை. அணியின் தோல்விக்கு அவரே காரணம் என்றும் விமர்சிக்கப்படுகிறது. (ம)

## காலிறுதியில் ரபேல் நடால்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால். நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் நடாலை எதிர்த்து சகநாட்டு வீரர் பாவ்டிஸ்டா மோதினார்.
ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.



முதலாவது செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மிக இலகுவாகக் கைப்பற்றினார் நடால். அவர் தனது ஆதிக்கத்தை வலுவாக நிலைப்படுத்திக் கொண்டார். அடுத்த இரண்டு செற்களும் முறையே 6:2, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நடாலின் வசமாகின. முடிவில் அவர் 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றார். (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் தொடரில் இன்று சில ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.
கொக்குவில் இந்துக் கல்லூரியில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் 13 வயது பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் தொடர்ந்து 15 வயது பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியும் மோதவுள்ளன.
யாழ். இந்துக் கல்லூரியில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் 15வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் தொடர்ந்து 20 வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன. (ம-23)




ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான சம்பின்ஸ் லீக் தொடரில், கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் யுவன்டாஸைத் தோற்கடித்து ரியல் மட்ரிட் சம்பியனானது. தாயகம் திரும்பிய அணிக்கு ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் நகரில் கோலாகல வரவேற்பு வழங்கப்பட்டது. (ம)




## கிரிக்கெட் கனவான் தன்மையுள்ளது

அரசியல் ரீதியாக இந்தியா - பாகிஸ்தான் பரம எதிரிகளாக இருந்தாலும், நேற்று முன்தின ஆட்டத்தில் இந்திய வீரர் யுவராஜ் பாகிஸ்தான் வீரர் ரியாஸை நலம் விசாரித்தமை தற்போது வைரலாகி வருகிறது. நடைபெற்றுவரும் மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின. இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. பாகிஸ்தான் வேகப் பந்துவீச்சாளர் ரியாஸ், தனது 9ஆவது பந்துப்பரிமாற்றத்தை வீசியபோது காலில் உபாதைக்குள்ளானார். யுவராஜ் உடனே சென்று அவரை நலம் விசாரித்தார். அரசியல் ரீதியாக இரு நாடுகளும் பகையாளிகளாக இருந்த போதிலும் யுவராஜின் இந்தச் செயற்பாடு பலராலும் பாராட்டப்படுகிறது. பன்னாட்டு கிரிக்கெட் சபை தனது சமூக வலைத்தளங்களில் இந்தப் ஒளிப்படத்தை பதிவிட்டு 'இதனால்தான் கிரிக்கெட் கனவான் தன்மையுள்ள ஆட்டம்' என்று குறிப்பிட்டுள்ளது. (ம)



## நடையைக் கட்டினார் நடப்புச் சம்பியன்

பிரான்ஸ் ரெனிஸ் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டார் நடப்புச் சம்பியன் முகுருசா.

பிரான்ஸ் ரெனிஸ் தொடரின் காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெய்ன் வீராங்கனை முகுருசாவை எதிர்த்து பிரான்ஸ் வீராங்கனை கிறிஸ்ரினா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 1:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் முகுருசா. இரண்டாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். முதலிரு செற்களின் நிறைவில் இருவரும் தலா ஓர் வெற்றியுடன் இருந்தனர். இதனால் மூன்றாவது செற்றே வெற்றியாளரைத் தீர்மானிக்கும் செற்றாக அமைந்தது. அந்த செற்றை 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்து தொடரில் இருந்து வெளியேறினார் முகுருசா. (ம)



## வீனஸ் வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்வி

பிரான்ஸ் ரெனிஸ் தொடரில், அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார் அமெரிக்க வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் வீனஸ் வில்லியம்ஸை எதிர்த்து சுவிற்சர்லாந்தின் டைமியா மோதினார். 7:5, 2:6, 1:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் டைமியா வெற்றிபெற்றதை அடுத்து அதிர்த்தித் தோல்வியடைந்து வெளியேறினார் வினஸ். (ம)

**பதவி வெற்றிடம்**

யாழில் உள்ள பிரபல அலுவலகம் ஒன்றுக்கு
வரவேற்பாளர் (பெண்கள் தேவை)
O/L, A/L சித்தி. Ms Office இல் தேர்ச்சி.
அடிப்படை வேதனம் :- 15000/-
வயதெல்லை :- 18-25
விரும்புவோர் உடன் நேரில் வரவும்.
WINSTAR JOB BANK
106, தபாற்பெட்டிச்சந்தி, திருநெல்வேலி.
021 320 2789

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L,A/L எழுதியோர், பல்கலைக்கு தெரிவானோர், தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!
3 மாத சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 10.06.2017
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வாரநாள் வகுப்புகள் (திங்கள், புதன்) 12.06.2017
1.காலை 08-10 2.காலை 10-12
பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புற வீதி, யாழ்நகர். 021 320 3313 077 1570 486



யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தத் திட்டமிட்ட இளையோருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்றன. தொடரில் கலந்துகொள்ளும் அனைத்து அணிகளுக்குமான அறிமுக நிகழ்வும் நடைபெற்றது. (ம-23)

## சென். லூட்சியா சம்பியனானது

மன்னார் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான தொடரில் பள்ளிமுனை சென். லூட்சியா அணி கிண்ணம் வென்றது.

மன்னார்பொதுவிளையாட்டுமைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முருங்கன் பொதுசன சேவைகள் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இரண்டுஅணிகளும்சிறந்தபோராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல்பாதி. இரண்டாம் பாதியின்29 ஆவது நிமிடத்தில் சென். லூட்சியா அணியின்பிங்கோமுதல்கோலைப் பதிவுசெய்தார். மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது சென். லூட்சியா அணி. சிறந்தவீரனாகபள்ளிமுனை சென். லூட்சியா அணியின் பிங்கோ தெரிவானர். (ம-23)

## பிரான்ஸ் ரெனிஸ் தொடர் காலிறுதியில் பிளிஸ்கோவா



பிரான்ஸ் ரெனிஸ் தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் செக்குடியரசு வீராங்கனை பிளிஸ்கோவா.

பிளிஸ்கோவாவை எதிர்த்து ஜேர்மனி வீராங்கனை கரீனா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றைக் கைப்பற்றி இருவரும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தினர். 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பிளிஸ்கோவா. இரண்டாவது செற் சவால் மிக்கதாக அமையவில்லை. அந்த செற் 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மிக இலகுவில் பிளிஸ்கோவாவின் வசமானது. முடிவில் அவர் 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)


## புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விருதை அர்ப்பணித்தார் யுவராஜ் சிங்

மினி உலகக்கிண்ணத் தொடரில் தனக்குக் கிடைத்த ஆட்ட நாயகன் விருதை புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அர்ப்பணித்தார் யுவராஜ்.

மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியது இந்திய அணி. இந்த ஆட்டத்தின் நாயகனாக அதிரடியாக விளையாடி அரைச்சதம் கடந்த யுவராஜ் தெரிவானார். இவர் தனக்குக் கிடைத்த விருதை புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அர்ப்பணித்தார்.

"எனது இன்னிங்ஸையும் விருதையும் புற்றுநோயுடன் வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கு அர்ப்பணிக்கிறேன். லண்டன் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும் எனது அஞ்சலிகள். அவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்" என யுவராஜ் மேலும் தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி கிண்ணம் வென்றது. யுவராஜ் தொடராட்ட நாயகனாகத் தெரிவானார். இதன்பின்னர் இவருக்கு புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. அதிதீவிர சிகிச்சை வழங்கப்பட்டு அவர் அதிலிருந்து மீண்டு வந்தார். மட்டுமல்லாமல் இந்திய அணியில் மீண்டும் இடம்பிடித்து விளையாடி வருகிறார். (ம)



**விற்பனைக்கு**
நேரான, உயரமான,
முதிர்ந்த, பெரிய வேப்பமரம்
விற்பனைக்குண்டு.
071 411 5002

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.